www.tamilarangam.net

# களத்தில்



தமிழ் மக்கள் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும் இல்லையெனில் அவர்களின் எதிர்காலம் இருண்டதாகிவிடும்

மக்கள் அனைவரும் எழுச்சியடைவார்களாயின், தமிழீழம் உருவாவதை யாராலும் தடுக்க முடியாது.

-திலீபன்

திருவள்ளுவர் ஆண்டு 2026 கன்னி 03 (19.09.1995) தாயகத்தின் உண்மைநிகழ்வுகளைத் தாங்கிவருஞ் செய்தித்தாள் அன்பளிப்பு: 40p



இலண்டனில் எழுச்சி கொண்ட மக்கள் வெள்ளம்



எழுச்சி மாநாடு — பத்திரிகையாளர் மாநாடு



எழுச்சி மாநாடு — பார்வையாளரில் ஒருபகுதி

# மட்டக்களப்பில் புலிகள் அதிரடி

## பத்து நிமிட தாக்குதலில் 15 படையினர் பலி

## உதவிக்குவிரைந்த பவள் கவசவாகனம் அழிப்பு

## 9 சடலங்கள் கைப்பற்றப்பட்டன

**மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் 15.09.95 அன்று சிறீலங்கா இராணுவ ரோந்து அணி ஒன்றின் மீது மேற்கொண்ட பத்து நிமிட அதிரடித் தாக்குதலிற் 15 க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். பல நவீன ஆயுதங்களும், 9 இராணுவத்தினரின் சடலங்களும் கைப்பற்றப்பட்டன.**

இவ்வெற்றிகரமான தாக்குதலில் எமது தரப்பில் ஒரு போராளி வீரச்சாவடைந்தார். இதே வேளை இராணுவ அணி மீது புலிகள் தாக்குதல் நடத்தியபோது அண்மையில் இருந்த இராணுவ முகாமிலிருந்து உதவிக்கு விரைந்த பவள் கவச வாகனம் ஒன்றும் புலிகளின் தாக்குதலினால் முற்றாகச் சேதம் அடைந்தது.

மட்டக்களப்பு மாவட்டம் 19 ஆம் கட்டை இராணுவ முகாமிலிருந்து 36 ஆம் கொலனி இராணுவ முகாமிற்கு ரோந்து சென்ற இராணுவ அணி மீதே விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினார்கள். இந்த இராணுவ அணியில் 20 க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் அடங்கியிருந்தனர். 15.09.95 அன்று அதிகாலை 7.25 மணியளவில் இத்

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

# சிப்பாய்களுடன் சிதறிய சிறீலங்காவிமானம்

## சிறீலங்காவில் பேரதிர்ச்சி

இரத்மலானையிலிருந்து எழுபத்தைந்து இராணுவத்தினர் உள்ளடங்கலாக, எண்பதுபேருடன் பலாலி நோக்கிப் புறப்பட்ட உக்கிரேன் தயாரிப்பான "அன்ரனோ 32" ரக விமானமும், இராணுவத்தினரும் சுமார் பத்து நிமிடங்களுள் வானில் அழிவுற்றதாகச் சிறீலங்காப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. கடலுள் சுழியோடி, விழுந்த விமானத்துண்டுகளைப் பொறுக்கிச் சேர்க்கும் பணியில் சிறீலங்காப் படைகள் ஈடுபட்டுள்ளன என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த விமான அழிவு எப்படி ஏற்பட்டது என சிறீலங்காப் பாதுகாப்பு வட்டாரங்கள் தலையைப் பிய்த்துக் கொள்கின்றன. இந்த விமான அழிவினால் யாழ். குடாநாட்டில் தாம் தொடங்கியுள்ள புதிய தாக்குதல் முயற்சிகள் பின்னடைவு அடைந்துள்ளதாகச் சிறீலங்கா இராணுவ அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இது ஒருபுறமிருக்க, சிறீலங்கா விமான அதிகாரசபை, தற்காலிகமாக அனைத்து விமானப் போக்குவரத்துக்களையும் சிறீலங்கா பூராவும் இடைநிறுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது.

மேலும் இதற்கு முன்னரே இந்திய போக்குவரத்து விமானிகள் தொழிற்சங்கம், சிறீலங்காவுக்கு விமானம் ஓட்ட மறுத்தமையைத்

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

# அதிரடிப்படையின் தாக்குதலில் 3 பொதுமக்கள் பலி

கொக்கட்டிச்சோலையில் உள்ள கொத்தியாகுளம் கிராமத்திற் சிறீலங்காவின் கொலைப் படையான எஸ்.ரி.எவ். எனப்படும் விசேட அதிரடிப்படையினர் பதுங்கியிருந்து நடாத்திய தாக்குதலின் போது மூன்று தமிழ் மக்கள் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டுள்ளனர். 12.09.95 அன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. குமாரசூரியர் இராசேந்திரன் (வயது 35), சாமித்தம்பி

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

# எமது மக்கள் பணத்தில் எமக்கு எதிராகப் போர் புரியும் எதிரி

## — வைப்பக திறப்பு விழாவில் கடற்புலிகள் தளபதி

"சிங்கள அரசின் வைப்பகங்களில் எமது மக்கள் வைப்பிலிட்ட பணத்தை எதிரி கடனாகப் பெற்று எமது மக்களுக்கு எதிராகப் போர் செய்கிறான். இந்த நிலையில் இருந்து விடுபட்டுக் கொள்ளவே எமது மண்ணில் வைப்பகத்தை உருவாக்கியுள்ளோம்."

நெல்லியடியில் மூன்றாவது வைப்பக திறப்பு விழா வடமராட்சி அரசியற்றுறைப் பொறுப்பாளர் திரு. செழியன் தலைமையில் நடைபெற்றபோது நாடாவை வெட்டித் திறந்து வைத்த கடற்புலிகள் சிறப்புத்தளபதி திரு. சூசை அவர்கள் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "எமது வைப்பகத்தின் மூலம் மக்கள் பணத்தை வைப்பிடும் போது எமது நாட்டைக் கட்டி

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

# அமெரிக்க – பிரித்தானிய அரசுகள் நிலைமையைச் சரிவர விளங்கியுள்ளன

## சிறீலங்காவின் சர்வதேச ரீதியான பிரச்சார முயற்சிகள் படுதோல்வி

அமெரிக்க அரசைத் தன்பக்கமாக இழுப்பதற்குச் சிறீலங்கா எடுத்த சர்வதேச ரீதியான முயற்சிகள் படுதோல்வியைத் தழுவியுள்ளன.

அமெரிக்கா தான் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்ற பட்டியலிற் கருதவில்லை என்பதை உறுதிப்படுத்தி வருகின்றது. விடுதலை பெறுவதற்கு ஆயுத ரீதியாகப் போராடும் இயக்கமாகவே அது விடுதலைப் புலிகளைக் கருதுகின்றது. அமெரிக்கா பயங்கரவாதிகளுடன் எத்தகைய உறவினையும் வைப்பதில்லை என்பது அமெரிக்காவின் கொள்கை. ஆயினும் ஆயுத ரீதியாக விடுதலைக்காகப் போராடும் அமைப்புக்களுடன் உறவு வைக்கலாம் என்பது அமெரிக்காவின் நிலைப்பாடு. இதற்கமைய விடுதலைப் புலிகளின் சர்வதேச பொறுப்பாளரான திரு. லோறன்ஸ் திலகர் கடந்த சில மாதங்களின் முன்னர் அமெரிக்க தென்னாசிய விடயங்களுக்குப் பொறுப்பான உதவிச் செயலருடன் அமெரிக்க இராசாங்கத் திணைக்களத்தில் நட்பு ரீதியாகச் சந்தித்துப்

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

# யாழ். குடாநாடு மீது சிறீலங்கா தொடர்ச்சியான தாக்குதல்

## விடுதலைப் புலிகள் வெற்றிகரமாக திருப்பித் தாக்குதல்

யாழ். குடாநாடு மீது இருமுனைத் தாக்குதல் ஒன்றை "குலுக்குங் கரங்கள்" எனும் பெயரில் சிறீலங்கா இராணுவம் தொடர்ந்து நடாத்தத் தொடங்கியுள்ளது.

இருந்த போதிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் வெற்றிகரமான முறையில் திருப்பித் தாக்கி அதனை முறியடித்து வருவதும் அல்லாமல் சிறீலங்காப் படையினருக்கான தரைவழி, கடல்வழி விநியோக மார்க்கங்களையும் மூடியுள்ளனர். இதனால் பொறிக்குள் அகப்பட்டுள்ள சிறீலங்காப் படைகள் அளவெட்டி மக்கள் குடியிருப்புக்கள் மீது 14.09.95 அன்று மேற்கொண்ட

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புலிகளை நிராகரித்து விட்டு பேச்சுக்கள் நடத்த முடியாது

## ■ நேரு பல்கலைக்கழக பேராசிரியர் முனி

'விடுதலைப் புலிகளுக்கு வடக்கு – கிழக்கு தமிழ் மக்களின் ஆதரவு அமோகமாக உண்டு. இந்நிலையில் சிறீலங்கா அரசு ஏனைய தமிழ்க் குழுக்களுடன் சமரசப் பேச்சுக்களை நடத்துவதில் பலனில்லை. விடுதலைப் புலிகளை நிராகரித்து இத்தகைய சமரசத் திட்டங்களை அரசு முன்வைத்துப் பேச முடியாது" என புதுடில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக் கழக பேராசிரியர் சி.டி. முனி தூரதர்சனுக்கு அளித்த செவ்வி ஒன்றில் குறிப்பிட்டார். தமிழர் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு பலன்தரப் போவதில்லை. தமிழர்க்கான அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

# "நமது இராணுவம் தமிழர் பிரதேசங்களில் ஒரு ஆக்கிரமிப்பு இராணுவமே!"

## பிரட்மன் வீரக்கோன் தெரிவிப்பு

'நமது இராணுவம் தமிழர் பிரதேசங்களில் ஒரு ஆக்கிரமிப்பு இராணுவமாகவே கொள்ளப்படுகிறது. இந்த எண்ணம்தான் தமிழ் இளைஞர்களை அதற்கு எதிராகப் போராடத்தூண்டியுள்ளது. பூரணமான சுய ஆட்சி கொண்ட வடக்கு – கிழக்கு இணைப்புக்குக் குறைவான எதையும் விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. காரணம் அவர்கள் இரத்தம் சிந்தியிருக்கிறார்கள். மகத்தான தியாகங்களைச் செய்திருக்கிறார்கள். எனவே இத்தீர்வுத் திட்டத்தில் அவர்களின் கருத்துக்களை கேட்டறிவது மிக முக்கியமான விடயமாகும்"

இவ்வாறு சிறீலங்காவின் முன்னாள் சனாதிபதி பிரேமதாசாவின் சர்வதேச விவகார ஆலோசகரான பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது, "சிங்கள மக்களும் தமிழ் மக்களும் அந்நியோன்னியமாக வாழ்கிறார்கள் என்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாது. சிங்களவர்கள் மத்தியில் தமிழர்கள் நிம்மதியாக வாழ்கிறார்கள் என்பது ஏற்புடையது அல்ல. சமீபத்தில் காலியில்கூடப் பிரச்சினை ஏற்பட்டது.

இலங்கையில் வாழும் 30 இலட்சம் வடக்கு – கிழக்குத் தமிழரில் 6 இலட்சம் பேர் மட்டுமே வடக்கு – கிழக்கிற்கு வெளியே வாழ்கின்றனர். அதிலும் 3 இலட்சம் வெளிநாடுகளில் உள்ளனர். மிகுதியானவர்கள் 3 இலட்சம் பேர் மட்டுமே கொழும்பு, கம்பகா உட்பட்ட சிங்களப் பகுதிகளில் வாழ்கின்றனர். எனவே தமிழர்கள் சிங்களவர்களுடன் இணைந்து எதுவித பிரச்சினையுமின்றி வாழ்கிறார்கள் என்பது ஒருபொழுதும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய கூற்றல்ல.

மேலும் 28 சதவீத நிலப்பரப்பு மட்டுமே வடக்கு – கிழக்கில் உண்டு. எல்லைகள் மீள்நிர்ணயம் செய்யப்பட்டால் இது 20 சதவீதமாக குறைவுபெறும். எனவே மூன்றில் ஒரு பங்கு நிலம் தமிழரின் ஆதிக்கத்தில் என்பதும் ஏற்புடையதல்ல.

நாடு சுதந்திரம் அடைந்த நாள் முதல் இன்றுவரை இனப்பிரச்சினையைத் தீர்க்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்தமைக்குப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்னும் அரசியல் உறுதிப்பாடு இல்லாமையே காரணம் ஆகும்.

விடுதலைப் புலிகளை அழித்தபின் தான் தீர்வுத் திட்டத்தைப் பரிசீலிக்கலாம் என்று கூடச் சிலர் கூறுகிறார்கள். தமிழ் மக்களிடையே புலிகளுக்கு ஆதரவு உண்டு என்பதை நாம் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்"

# பாகிஸ்தானுடன் இரகசிய பேச்சுவார்த்தை

# தகவல்கள் வெளியிட கதிர்காமர் மறுப்பு!

## இராணுவ தளபாட உதவி குறித்து ஆராய்வு

பாகிஸ்தானுக்கு மூன்றுநாள் உத்தியோக பூர்வ விசயத்தை மேற்கொண்ட சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்சுமன் கதிர்காமர் பாகிஸ்தான் அரசுடன் விரிவான பேச்சுக்களை நடத்தினார். இப்பேச்சுவார்த்தையின் போது, பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சருடன் நீண்டநேரம் பேச்சுக்களை நடத்திய அமைச்சர் கதிர்காமர் இது குறித்து விபரங்களை வெளியிட மறுத்து விட்டார்.

ஆயினும், இப்பேச்சுவார்த்தையில் சிறீலங்காவிற்குப் பாகிஸ்தான் வழங்கக்கூடிய ஆயுத தளபாட உதவி பற்றியே விரிவாக ஆராயப்பட்டதாகச் செய்தியாளர்கள் ஊகங்கள் தெரிவிக்கின்றனர்.

இராணுவ மற்றும் பொருண்மிய உதவி கோரிப் பாகிஸ்தான் சென்ற சிறீலங்கா வெளியுறவு அமைச்சரின் மூன்று நாள் விசயம் நிறைவுற்றது.

பாகிஸ்தான் சென்ற அமைச்சர் பிரதமர் பெனாசீர் பூட்டோ, பாதுகாப்பு அமைச்சர் அப்தாப் சாபல் மிரானி, மற்றும் உயர் அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்.

தனது விசயத்தின் இறுதியில் அவர் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார். இதன்போது பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் மிரானியுடன் தாம் நடத்திய பேச்சுக்களின் விபரங்களை வெளியிட அவர் மறுத்தார் என பி.ரி.ஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நீண்டகாலமாகச் சிறீலங்காப் படைகளுக்குப் பாகிஸ்தான் பயிற்சிகள் வழங்குவதாகவும் பயிற்சிகள் இப்பொழுதும் தொடர்வதாகவும் அமைச்சர் கதிர்காமர் செய்தியாளர் மாநாட்டிற் சுட்டிக்காட்டினார். விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரிற் சிறீலங்காவிற்கு எந்த நாடுகள் ஆயுதங்களை வழங்குகின்றன என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்க மறுத்தார். எனினும் சிறீலங்கா அரசு தன் வரவு செலவுத் திட்டத்திற்கு அமையவே ஆயுதங்களை வாங்குவதாகவும் அமைச்சர் கதிர்காமர் கூறினார்.

# வன்னி பெருநிலப்பரப்பிலும் அவசிய மருந்துத் தட்டுப்பாடு

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வடபகுதி வைத்தியசாலைகளின் தேவைகளுக்குரிய மருந்துவகைகளை எடுத்துச் செல்வதில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதையடுத்து முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மல்லாவி, துணுக்காய், மாங்குளம், புளியங்குளம், நெடுங்கேணி, கிளிநொச்சி போன்ற பகுதிகளிலுள்ள அரச வைத்தியசாலைகளில் முக்கிய மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.

இத்தட்டுப்பாட்டை நீக்குவதற்கு தொண்டர் நிறுவனங்கள் மேற்கொண்ட முயற்சிகளும் போதிய பலனைத் தரவில்லை.

பாம்புக்கடி, விசர்நாய்க்கடி போன்றவைகளுக்குத் தேவையான மருந்துகள் புதுக்குடியிருப்பு, மாங்குளம், மல்லாவி, துணுக்காய் போன்ற பகுதிகளில் இல்லாமையால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தொண்டர் நிறுவன அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஏப்ரல் மாத இறுதியிலிருந்து ஏற்பட்டுள்ள இந்த நிலைமை காரணமாக, பாம்புக்கடிக்கு ஆளாகிய பத்துப்பேர் முல்லைத்தீவு மாவட்டத்தில் உயிரிழந்துள்ளனர்.

# 60 ஆயிரம் பொ.ஐ.மு யினருக்கு இராணுவப் பயிற்சி வழங்க முடிவு

பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்தவர்களை ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலிருந்தும் பத்துப் பேர்வீதம் தெரிவு செய்து, 60 ஆயிரம் பேருக்குத் துணைப்படைக்கு ஆட்சேர்க்க அரசு தீர்மானித்துள்ளதாகக் கொழும்பு வார இதழொன்று தெரிவித்துள்ளது.

இதேவேளை, வெண்தாமரை இயக்கத்தின் போர்வையில் புதிதாக ஒரு துணைப்படையொன்றை அமைக்க ஏற்பாடுகள் நடந்து வருவதாகவும், இப்படைக்கு ஆயுதப்பயிற்சி பலமாக வழங்கப்படவிருப்பதாகவும் அரசிற்கு நெருக்கமானவர்கள் மட்டுமே இத்துணைப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் எனவும் அக் கொழும்பு வாரஇதழ் மேலும் தெரிவித்துள்ளது.

# ஐ.தே.க. போன்றே சந்திரிகாவும் போரால் சீவியம் நடத்துகிறார்

## ■ ராவய செய்தித்தாள் தெரிவிப்பு

யாழ்ப்பாணத்தைப் பிடிக்கப் போவதாகக் கூறி, பொதுமக்களை ஏன் ஏமாற்ற வேண்டும்? முன்னைய ஐ.தே.க. அரசைப்போல இப்போதைய அரசும் போரைக் காட்டி சீவியம் நடத்த முற்பட்டுள்ளது.

"முன்னோக்கிப் பாய்தல்" என்ற பெயரில் சிறீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட பாரிய இராணுவ நடவடிக்கையின் மூலம் 78 சதுர கிலோ மீற்றர் பரப்பளவுள்ள நிலப்பரப்பைக் கைப்பற்றியதாகக் கூறப்பட்ட போதிலும், இப்போது 5 ச.கி.மீ இற்கும் குறைவான நிலப்பரப்பையே தொடர்ந்தும் தக்க வைக்க முடிந்துள்ளது. ஏனைய பகுதிகளைப் படையினர் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது"

என சிங்கள வார இதழான "ராவய"வின் அரசியல் அரங்கம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்த இராணுவ நடவடிக்கை தமது நோக்கத்தை நிறைவேற்றியதாகச் சில இராணுவ அதிகாரிகள் கருத்து தெரிவித்தனர். ஆனால் தாம் கைப்பற்றிய பகுதிகளைக் காப்பாற்ற முடியாத நிலை இராணுவத்தினருக்கு ஏற்பட்டுள்ளது.

சில படையதிகாரிகள் தெரிவித்தது போன்று, படையினருக்கு முன்னேறுவது ஒரு பெரிய விடயமல்ல ஆனால் கைப்பற்றிய நிலப்பரப்பை தொடர்ந்தும் தக்க வைத்து நிர்வகிப்பதில் உள்ள பாரிய சிக்கலை படையினர் தெரிந்திருப்பர்.

"முன்னோக்கிப் பாய்தல்" இராணுவ நடவடிக்கையின் பிரதான நோக்கம் விடுதலைப் புலிகளை அழிப்பதாக இருந்தபோதிலும் பொதுமக்களே பெரியளவில் கொல்லப்பட்டனர்.

இராணுவத்தினர் ஒரு "புக்காரா" விமானத்தையும், ஒரு கட்டளைக் கப்பலையும் இழந்தனர். வேறு இரண்டு உலங்கு வானூர்திகள் சேதமடைந்தன. அத்துடன் ஒன்பது படை அதிகாரிகளையும் 87 படையினரையும் இழந்ததாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தத் தொகை மேலும் அதிகமாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

இதேவேளை, 18 அதிகாரிகள் தரத்திலுள்ளவர்களும் 343 படையினரும் காயமடைந்துள்ளனர். இவர்களில் பலர் தமது உடல் உறுப்புக்களை இழந்துள்ளதும் சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும். சுமார் 78 ச.கி.மீ பரப்பளவுக்கான இராணுவ நடவடிக்கையிலே உத்தியோக பூர்வமாகத் தெரிவிக்கப்பட்ட இழப்புக்களே இவையாகும்.

20 ஆயிரம் படையினரைப் பயன்படுத்தி பெரிய எடுப்பில் மேற்கொள்ளபட்ட இந்த நடவடிக்கையின் மூலம் 5 ச.கி.மீ பகுதியையே கைப்பற்ற முடிந்துள்ளது. இந்த நிலையில் 950 ச.கி.மீ பரப்பளவுள்ள யாழ். குடாநாட்டைக் கைப்பற்ற எவ்வளவு படைகள் தேவை?

இப்படையிருந்தால் யாழ்ப்பாணத்தைப் பிடித்துவிட முடியுமா? இவ்வாறு அது தெரிவித்துள்ளது.

# தமிழ் பொலிசார் மீது சந்தேகம் அதிகரிப்பு

சிறீலங்கா அரசின்கீழ் பணியாற்றி வரும் தமிழ் பொலிசார் பலரும் சிங்களப் பொலிசாரால் சந்தேகக் கண்ணுடன் நோக்கப்படுவதாகவும், இதனால் பல நெருக்கடிகளுக்கு உட்படுத்தப்படுவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிழக்கு மற்றும் தென்பகுதிகளில் அரசின் செயற்பாடுகள் மற்றும் பொலிஸ், இராணுவ முகாம்கள் பற்றிய தகவல்கள், என்பனவற்றை விடுதலைப் புலிகளுக்கு இவர்கள் வழங்கிவருவதாகச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து, தமிழ் பொலிசார் முக்கிய கடமைகளில் அமர்த்தப்படுவது தவிர்க்கப்படுவதாகவும், முக்கியத்துவமற்ற பணிகளுக்கு தமிழ் பொலிசார் அமர்த்தப்படுவதுடன், எடுபிடி வேலைகளுக்கு உள்ளாக்கப்படுவதாகவும் சிங்களப் பொலிசாரின் நெருக்குதல்களுக்கு உள்ளாக்கப்படுவதாகவும் தெரிய வருகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அரசியற் பணிவு

கனடாவில் இருபத்தைந்தாயிரம். ஜெனிவாவில் பன்னிரெண்டாயிரத்துக்கும் அதிகம். இலண்டனிலோ, இலண்டன் வாழ் தமிழ் மக்களின் வரலாறு காணாத அளவுக்கு "அலெக்சாந்திரா" அரண்மனை மண்டபம் நிரம்பி வழிந்தது. "தமிழ் மக்களின் சட்டபூர்வமானதும் நியாயமானதுமான போராட்டத்தை அங்கீகரியுங்கள். சிறீலங்கா எமது மக்கள் மேல் குண்டுவீசியும் எறிகணை கொண்டு தாக்கியும் இனஅழிப்புச் செய்வதை நிறுத்துமாறு வற்புறுத்துங்கள். சிறீலங்காவுக்கான ஆயுத விற்பனைகளை நிறுத்துங்கள்" எனும் கோரிக்கைகளை முன்வைத்து ஒன்றுகூடிய இம்மக்கள், இவை எல்லாவற்றுக்கும் மேலாக **தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனுக்கு, தமது மேலான அரசியற் பணிவை வெளிப்படுத்தினர்.** சிறீலங்கா அரசு செய்யும் பொய்ப்பிரசாரத்தைப் பொறுத்து, இது இன்று முக்கியமானதொரு அம்சமாகும். ஏனெனில் சிறீலங்கா அரசு, "வடக்கு – கிழக்குப் பகுதிகளில் ஆயுத நெருக்குதலினாலேயே விடுதலைப் புலிகள் தமிழர்களின் அரசியற் பணிவைப் பெறுகின்றனர்" எனச் செய்துவந்த உண்மைக்கு மாறான பிரச்சாரம் இதனால் பொடிப் பொடியாகியது.

அடுத்ததாக, "நாம் தமிழீழ மக்கள்" என்ற நெஞ்சத்துணர்வுடன் பல்லாயிரக்கணக்கில் திரண்டு, தமிழீழ மக்கள் ஒரு நாட்டினம் — தேசமக்கள் என்பதை நிறுவினர். இந்தத் தமிழீழ மக்கள் என்ற எமது உணர்வு இன்று நேற்று ஏற்பட்ட ஒன்றல்ல. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் இலங்கைத் தீவின் வடக்கு – கிழக்குப் பிரதேசங்களை எல்லைகளாகக் கொண்டு பொது மொழி, கூட்டுப்பொருண்மிய வாழ்வு, பொதுக் கலாச்சாரம் என்பனவற்றோடு, கூடிவாழும் மனவிருப்பு உள்ளவர்களாக நாம் வாழுகின்ற வரலாற்றால் ஏற்படுத்தப்பட்ட ஒன்று.

நாம் ஒரு தேச மக்கள் என்ற உண்மையை ஏற்க, சிங்கள அரசு மறுப்பதே தமிழர் பிரச்சினையின் அடிப்படைக் காரணி. எம்மைத் தேசமக்கள் என ஏற்க மறுக்கும் சிங்கள அரசு, தமிழ்மக்களை இனத்துன்புறுத்தலுக்குள்ளாக்கி இனஅழிப்புச் செய்கின்றது. தொடரும் குண்டுவீச்சுக்கள், எறிகணைத் தாக்குதல்கள் போன்ற மக்கள் மீதான போர், பொருண்மியத் தடைகள், உணவை ஆயுதமாக்குதல், மருத்துவ வசதிகளை — சர்வதேசச் சேவைகளைத் தடுத்தல், போக்குவரத்துக்கான பாதுகாப்புக்களை மறுத்தல் போன்ற சர்வதேச போர்க்குற்றச் செயல்களும் இந்த இனத்துன்புறுத்தலின் வெளிப்பாடுகளே.

எனவே, தமிழர் பிரச்சினை ஒரு உள்நாட்டுப் பிரச்சினையல்ல. சிறுபான்மை, பெரும்பான்மை இனப்பிரச்சினையோ அல்லது பல்லின மக்கள் தொகுதியைக் கொண்ட சனநாயக நாட்டின் பிரச்சினையோ அல்ல. மாறாக 1981 ஆம் ஆண்டின் மனிதனதும் மக்களதும் ஆபிரிக்க சாசனத்தின்படி, தமிழர் பிரச்சினை சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம்.

சுயநிர்ணய உரிமைக்கு இரண்டு பரிமாணங்கள் உண்டு. ஒன்று, ஆள்பவர்களுடன் ஆளப்படுகின்றவர்கள் ஏற்படுத்துகின்ற உறவின் அடிப்படையிலான உள்ளக ரீதியான சுயநிர்ணய உரிமை. மற்றையது, தன்னைத்தானே தனியான சமுதாயமாகக் கருதும் மக்கள், வெளிஉலகத்துடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கான வெளியகரீதியான சுயநிர்ணய உரிமை.

இச்சர்வதேசப் பின்னணியில் தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழீழ மக்களும் தங்கள் வெளியக சுயநிர்ணய உரிமையைப் பிரயோகித்து, உலக நாடுகளிடமும் ஐக்கிய நாடுகள் சபையிடமும் தாங்கள் அமைதியை ஏற்படுத்த உதவும்படி கோரி நிற்கின்ற நேரம் இது. இந்நிலையில் அவர்களுடன் நாம், தமிழீழ மக்கள் என்றவகையில் இணைந்து கொள்ளும் அதேவேளை, எமது தேசத்தின் விடுதலைக்கான நிதியும் மதியும் அளித்திடும் பணியையும் தொடர்வோம்.

சிறீலங்கா இருமுனைத் தாக்குதல்களால் அல்ல பல்முனைத் தாக்குதல்களாலும் ஒருபோதும் விடுதலைப் புலிகளை வெல்ல முடியாது. ஏனெனில் விடுதலைப் புலிகள் என்பது தமிழீழ மக்கள் சக்தி. நாமும் தமிழீழ மக்கள் சக்தியின் ஒரு அங்கமென்பதை உலகுக்கு உணர்த்தும் அதேவேளை, எமது தேசக்கடமைகளையும் தொடர்வோமாக.

# விடுதலைப் புலிகளின் அனைத்துலகச் செயலகம் அறிக்கை

**புலம் பெயர்ந்து வாழ் தமிழீழ மக்களே!**

தமிழீழ மக்களின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த காலகட்டமாக இது உள்ளது. நாம் விடுதலையை அண்மித்து வருகின்றோம். பல நூற்றாண்டு கால அடிமைத்தளையை உடைத்தெறிந்து ஒளிமயமான, சுதந்திரம் நிறைந்த, நிரந்தர அமைதியையும், சுபீட்சத்தையும் தருகின்ற ஒரு யுகத்தினுள் நாம் பிரவேசித்துக் கொண்டிருக்கின்றோம். விடுதலைப் புலிகளின் தலைமையில் எமக்கென்றொரு அரசியல் வாழ்வு புதிய அரசென்ற வடிவில் உதயமாகி வருகின்றது. விரைவில் விடியலின் ஒளிக்கீற்றுக்கள் எம்மவர் வாழ்வு அனைத்திலும் வண்ணக் கோலங்களைக் கீறிவிடும்.

அதேவேளை சிங்கள இனவாத அரக்கனும் சும்மா இருந்துவிடவில்லை. தனது சக்தி அனைத்தையும் திரட்டி எமது விடுதலைப் போராட்டத்தை அழித்துவிட முனைந்து வருகின்றான். சந்திரிகா தலைமையிலான புதிய அரசாங்கமும், இனவாதத்திலும், இராணுவவாதத்திலும் சிக்குண்டு தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு ஒன்றைக் காண்பதிலேயே முனைப்புற்று நிற்கின்றது. தமிழ் மக்களின் மீது இனப்படுகொலை ரீதியான போர் ஒன்றைக் கட்டவிழ்த்துவிட்டு தமிழ் மக்களின் பாதுகாப்பு கேடயமாகவுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளை நிர்மூலம் செய்து, சிங்கள மேலாதிக்கத்தை தமிழ் மக்கள் மீது திணிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாக உள்ளது. இந்த இராணுவத் திட்டத்தை தனது பிரச்சாரத்தின் மூலம் வெளிநாடுகள் ஏற்குமாறு செய்து, வெளிநாடுகளின் உதவியுடன் தமிழின அழிப்புப் போரில் வெற்றி கொள்வதே சந்திரிகா அம்மையாரின் தந்திரோபாயமாகும்.

இந்த நாசகார திட்டத்தை முறியடிக்க தமிழ் மக்களாகிய நாம் ஒரு கொடியின் கீழ் அணிதிரள வேண்டும். காலத்தின் தேவையை உணர்ந்து எமது ஒன்று திரண்ட சக்தி பல்வேறு வழிகளில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். எமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் இப்புனிதப் போராட்டத்திற்கு வழங்க முன்வரவேண்டும். எனவே தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக அங்கீகரிக்குமாறும், எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை அங்கீகரித்து சுதந்திரத்தை வென்றெடுக்க எமக்கு உதவுமாறும் நாம் சர்வதேச சமூகத்தைக் கோருதல் வேண்டும். அதற்கான சகல செயற்பாடுகளும் முடுக்கி விடப்படல் வேண்டும்.

அதேவேளை தமிழீழத்தில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களும், யுவதிகளும் விடுதலைப் போராட்டத்தில், தாயக மீட்பிற்காக இணைந்து கொண்டிருக்கிறார்கள். சிங்கள மேலாதிக்க அரசாங்கம் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடவுள்ள பாரிய இராணுவ நடவடிக்கையை எதிர்த்து வெற்றி கொள்ள தமிழீழ தேசம் முழுவதுமே அணிதிரட்டப்பட்டு வருகின்றது. எதிரியின் கொடூரமான நாசகார ஆயுதங்களின் அழிவுகளில் இருந்து தாயகத்தை பாதுகாக்கவும், ஆக்கிரமிப்பு இராணுவம் எமது தாயகத்தை கபளீகரம் செய்யாது தடுக்கவும் நாமும் நவீன கருவிகளை வாங்க வேண்டியவர்களாக உள்ளோம். அதற்கு ஏராளமான நிதி அவசரமாகத் தேவைப்படுகின்றது. எமது மண்ணில், இதற்கான விசேட நிதி சேகரிக்கப்படுகின்றது. விடுதலையா? அடிமைத்தனமா? என்று தீர்மானிக்கப்போகும் பெரும் போரொன்றில் விடுதலையையே வென்றெடுக்கும் செயற்பாட்டிற்காக, தாயகத்திலும் வெளிநாடுகளிலும் வாழுகின்ற அனைத்து தமிழ் மக்களும் ஒருசேர மிகப் பெரும் நிதிப் பங்களிப்பை செய்யவேண்டியவர்களாக இருக்கின்றோம். தாயக விடுதலைக்காக உயிர்க்கொடையை வழங்க விடுதலைப்புலிகள் தயாராக இருக்கின்றார்கள். தியாக நெருப்பில் ஒவ்வொரு நாளும் விழுந்து தீபமாக எரிந்து கொண்டிருக்கின்றார்கள். தமிழ் மக்களிடம் நாம் கோருவது அவசர நிதிப்பங்களிப்பே! இன அழிவின் விளிம்பில் நாம் இருக்கின்ற பூகம்ப நிலையை நன்குணர்ந்து பெரும் தியாகத்துடனான, நிறைந்த பங்களிப்பை தாயகம் உட்பட உலகனைத்தும் வாழுகின்ற தமிழ் மக்கள் செய்யவேண்டும் என்று விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் கோருகின்றது. இதற்கு தாயகத்திலும் வெளிநாடுகளிலும் இயக்கத்தின் நிதித் தேவைகள் பன்மடங்காக அதிகரித்துள்ள அபாய சூழ்நிலையே காரணமாய் அமைகிறது.

என்றுமில்லாத ஒரு நெருக்கடி நிலையைச் சமாளிக்கவும் விடுதலையை வென்றெடுக்கவும் தவிர்க்க முடியாதவாறு பெரியவிலை ஒன்றைக் கொடுக்க வேண்டிய கட்டாய கட்டமொன்றில் இருக்கின்றோம். இது எமது வாழ்வில் ஓர் அபூர்வ நிகழ்வு. காலத்தின் வேண்டுகோள். வேதனைத் தீயில் வாடும் தமிழ் அன்னையின் அழைப்பு தாயகத்தைப் பாதுகாக்க பெரும் தியாகம் ஒன்றைச் செய்யுமாறான கோரிக்கை. தாயக மக்கள் தங்களிடம் உள்ள அனைத்தையும் விடுதலைக்காக மனமுவந்து தர முன்வந்துள்ளனர். போராட்ட காரணத்தினால் வெளிநாடுகளில் தொடர்கின்ற எமது புலம்பெயர் வாழ்வை அர்த்தமுள்ளதாக்க எமது பூரண பங்களிப்பை வழங்க வேண்டாமா? எமது விடுதலைப் போராட்டமும், தாயகமும் பாதுகாக்கப்படுவதிலேயே எமது புலம்பெயர் வாழ்வின் மேன்மையான இருப்பும் தங்கியுள்ளது என்பதை உணர்ந்து அவசர தேசிய பாதுகாப்பு நிதிக்கு தாராளமாக வழங்குவோம். இது எமது தேசியக் கடமை.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

அனைத்துலகச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பீரிஸ் அளித்த உத்தரவாதத்தில் நம்பிக்கையில்லை

*— மல்வத்தை அஸ்கிரிய பீடாதிபதிகள்*

"சிங்கள இனமும் பௌத்த சாசனமும் உத்தேச ஆலோசனைத் திட்டத்தால் பெரிதும் பாதிப்படையும். பௌத்தத்தைப் பாதிக்கும் எவ்வித செயலும் உத்தேசத்திட்டத்தில் இடம்பெறா தென அமைச்சர் ஜி.எல். பீரிஸ் உத்தரவாதம் அளித்திருந்தாலும் அந்த உத்தரவாதத்தில் எமக்கு எவ்வித நம்பிக்கையும் இல்லை. மகாணசபைகளுக்கான சட்டம் புறம்பானதாக இருக்க வேண்டும். இதற்கான சட்டங்கள் அரசியலமைப்புச் சட்டத்துள் இணைக்கபடுமானால் அவைகளை ஒருபோதும் திருத்த முடியாது. மேலும் பிராந்திய பொலிஸ் அமைப்பு ஏற்படுத்துவது ஆயுதமேந்திய பயங்கரவாதிகளைச் சட்டபூர்வமாகப் பொலிஸ் படையிற் சேருவதற்கு இடமளிக்கிறது. எனவே இந்த ஆலோசனை குறித்து ஆழமாகப் பரிசீலிக்க வேண்டும். காணி உரிமையைப் பிராந்திய சபைகளிடம் கொடுப்பது ஒருவருடைய தோட்டத்தை மற்றவருக்குக் கொடுத்துவிட்டு அவரிடம் ஏதாவது பெறுவதற்குப் பல்லிளித்து யாசகம் கேட்பதுபோல இருக்கும். தேயிலை இறப்பர்த் தோட்டங்கள் மத்திய அரசிடம் இருந்து பிராந்திய சபைகளுக்குச் செல்வதால் மத்திய அரசு வருமானத்தினை இழந்து பிராந்திய சபையிற் தங்கி நிற்கும் நிலைப்பாடு ஏற்படும். அத்துடன் இந்திய தமிழ்த் தொழிலாளர்களுக்குக் காணியைச் சொந்தமானதாக்கும் முயற்சியுமாகும். காணியற்ற சிங்கள மக்கள் தாம் விரும்பியவாறு குடியேறும் உரிமையும் மறுக்கப்பட்டுவிடும்.

# யாழ். குடாநாடு மீது சிறீலங்கா தொடர்ச்சியான தாக்குதல்

கடந்த 12.09.95 செவ்வாய் முதல் வலிகாமம் கிழக்குப் பகுதிகளின் மேல் இடம்பெற்றுவரும் "கை குலுக்கல்" எனும் சிறீலங்கா இராணுவ நடவடிக்கையினால் பெருமளவு மக்கள் இராணுவத்தினரின் மூர்க்கத்தனமான எறிகணைத் தாக்குதல்களால் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி தென்மராட்சியின் பல பகுதிகளுக்கு வந்தவண்ணம் உள்ளனர். இவர்கள் இப்பகுதிகளில் உள்ள பாடசாலைகளிலும் உறவினர் வீடுகளிலும் தங்கி உள்ளனர்.

**வடமராட்சி மீது அகோர எறிகணைத் தாக்குதல்**

15.09.95 அன்று வெள்ளிக்கிழமை இரவு 11.00 மணியளவில் வடமாராட்சிப் பகுதியிலுள்ள மக்கள் குடியிருப்புக்கள் மீது பலாலி முகாமிலிருந்து சிறீலங்காப் படையினர் அகோர எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர். கற்கோவளம் பகுதி மீது கொள்ளப்பட்ட தாக்குதலில் 6 பொது மக்கள் படுகாயம் அடைந்துள்ளனர். இதில் 4 பேர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது. சுந்தரம் சின்னராசா (வயது 50), சின்னராசா மனோரஞ்சிதம் (வயது 45), சின்னராசா தர்சிகா (வயது 2) இவர்களின் கால்கள் துண்டிக்கப்பட்டுள்ளன. படுகாயமடைந்த சின்னராசா தாரணி (வயது 16) உட்பட மயக்கம் அடைந்த நிலையில் இருந்த 2 வயதுக் குழந்தையையும் ஓடிவந்த அயலவர்கள் மீட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

இதேவேளை சில்லாலைப் பகுதியிலுள்ள தனது வீட்டைப் பார்க்கச் சென்ற சந்தியாப்பிள்ளை மரியநாயகம் இராணுவ மிதிவெடியில் சிக்கித் தனது காலை இழந்துள்ளார். மயக்கமடைந்த நிலையில் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இப்பகுதி கடந்த யூலை மாதம் சிறீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட "முன்னோக்கிப் பாய்ச்சலின்" போது நிலைகொண்டிருந்த பகுதி என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சிறுவர் போசாக்குப் பராமரிப்புப் பூங்கா கைதடியில் திறந்து வைக்கப்பட்டது

கைதடி, தேவகி குடியிருப்பில் சமூக மேம்பாட்டுப் பிரிவினரால் சிறுவர் போசாக்குப் பராமரிப்புப் பூங்கா ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. அதிபர் கு. கேசவன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் முதலில் மங்கள விளக்கினை நடமாடும் மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் தேவா அக்கா, சாவகச்சேரி வணிகர் மன்றத் தலைவர் ஜெயக்குமார் ஆகியோர் ஏற்றிவைத்தனர். பூங்காவின் பெயர்ப் பலகையைத் தமிழீழ அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் கரிகாலன் அவர்கள் திரைநீக்கம் செய்து வைத்தார். இதனைத் தொடர்ந்து இப் பூங்காவினைத் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். பின்னர் தேசியக் கொடியினை, தமிழ்ச்செல்வன் அவர்கள் ஏற்றிவைக்க, தமிழீழ சிறுவர் போசாக்குப் பராமரிப்புக் கொடியினை திரு. குணா அவர்கள் ஏற்றிவைக்க, இப் பூங்காவின் கொடியினை தென்மராட்சி பிரதேச செயலர் திரு. பு. சுந்தரம்பிள்ளை அவர்கள் ஏற்றிவைத்தார். 2 நிமிட அமைதி வணக்கம், தமிழ்த்தாய் வாழ்த்து என்பன இடம்பெற்ற பின்னர் நிருவாகச் செயலகத்தினை சாவகச்சேரி நகரசபை ஆணையாளர் திரு. நடராசா நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். பின்னர், வீரவேங்கை தேவகி அவர்களது திருவுருவப் படத்திற்கு அவரது பெற்றோர், விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள், பொதுமக்கள், சிறுவர்கள், மாணவர்கள் என நீண்டவரிசையில் நின்று மலர் தூவி வணக்கம் செலுத்தினர். இறுதியாக சமூக மேம்பாட்டுப் பிரிவைச் சேர்ந்த செல்லக்கிளி தலைமையில் பூங்கா மண்டபத்தில் சிறப்புரைகள் இடம்பெற்றன. இதில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன், யாழ். மாவட்ட மகளிர் அமைப்பு அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி, பளைக் கல்விக் கோட்ட அலுவலர் திரு. ப. அரியரத்தினம், யாழ். பல்கலைக்கழக வர்த்தகத்துறை விரிவுரையாளர் எஸ். இரத்தினம் உட்பட பலரும் உரை நிகழ்த்தினர். இதற்கு தமிழீழ சமூக மேம்பாட்டுப் பொறுப்பாளர் திரு. கே. பாப்பா, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு துணைப் பொறுப்பாளர் கந்தண்ணா, அரசியல் துறையைச் சேர்ந்த சங்கர், காந்தரூபன் அறிவுச் சோலைப் பொறுப்பாளர் இரமேஸ் அப்பா ஆகியோர் கலந்துகொண்டனர். இந்நிகழ்வுக்கு பெருமளவில் மக்கள் கலந்துகொண்டனர்.

## மட்டக்களப்பு அதிரடி

மட்டக்களப்பில் 15.09.95 நடைபெற்ற தாக்குதலின் போது விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட 9 இராணுவத்தினரின் சடலங்களை அவர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்துள்ளனர். மட்டக்களப்பு 19 ஆம் கட்டை இராணுவ முகாமில் இருந்து 36 ஆம் கொலணி இராணுவ முகாம் நோக்கி ரோந்து சென்ற 20 க்கு மேற்பட்ட இராணுவத்தின் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய அதிரடித் தாக்குதலில் 15 படையினர் கொல்லப்பட்டனர். பின்னர் இத்தாக்குதலின் போது காயம் அடைந்த இராணுவத்தினரில் மேலும் ஒருவர் இராணுவ வைத்தியசாலையில் இறந்துள்ளதாக அறியப்படுகிறது.

## விடுதலைப் புலிகள் கரந்தடி அமைப்பல்ல சம்பிரதாய இராணுவ அமைப்பு

*— லயனல் பெர்னாண்டோ*

"தமிழீழ விடுதலைப் புலிகள் வெறும் கரந்தடி அமைப்பல்ல, அவர்கள் இன்று சம்பிரதாய இராணுவ அமைப்பு எனும் நிலைக்கு வளர்ச்சி அடைந்துள்ளனர்.

இவ்வாறு முன்னாள் வடக்கு—கிழக்கு ஆளுநர் லயனல் பெர்னாண்டோ கொழும்பிற் கூறியுள்ளார்.

"தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு ஆயுதமேந்தியது திடீர்த் தீர்மானத்தின் கீழ் அல்ல. சிங்கள மற்றும் தமிழ் அரசியல்வாதிகள் நீண்ட காலமாக அவர்களை ஏமாற்றிப்பட்டதன் விளைவாக ஏற்பட்ட ஒன்றாகும். அவர்கள் இன்று கரந்தடி அமைப்பு என்பதை விடச் சம்பிரதாய இராணுவ அமைப்பின் நிலைக்கு அபிவிருத்தியடைந்துள்ளனர் எனலாம்.

எனக்கூறிய அவர் "கொழும்பில் இருந்துகொண்டு சொற்பொழிவுகளை நிகழ்த்தியபடி தமது கருத்துக்களை முன்வைக்கும் இனவாதத் தலைவர்களின் ஒரு பிள்ளையேனும் இந்தப் போரினால் பலியாகினார் எனத் தமக்குத் தெரியாது. அவர்கள் இந்த நாட்டிலோ வெளிநாட்டிலோ சுகமாக வாழ்கின்றனர். வெகுசனத் தொடர்புசாதனங்களைப் பயன்படுத்திக் கொண்டு இனவாதத் தீயை மேலும் மூட்டிவிடுவதை மட்டுமே இவர்கள் செய்து வருகின்றனர். இருப்பிடங்களை இழந்தவர்களுக்கு வீடு கொடுப்பது முதற் போரில் இறந்த வர்களை அடக்கம் செய்வது வரையிற் போருக்கான திட்டங்களை வகுப்பது முதல் ஆயுதங்களை தருவிப்பது வரையிற், "பணம் சம்பாதிப்பது" ஒன்றையே வழியாக்கிக் கொண்ட பிரிவினர் எம்மிடையே இங்கு உள்ளனர். எனவே போர் முடிவுக்கு வருவதை அவர்கள் விரும்புவதில்லை" எனவும் லயனல் பெர்னாண்டோ கூறியுள்ளார்.

# இன்று நினைத்தாலும் நெஞ்சம் பதைக்கிறது

*-31 ஆம் நாள் கூட்டத்தில் யாழ். ஆயர்*

"அன்று நவாலியில் மடிந்த குழந்தைகள் ஒன்றும் அறியாப் பாலகர்கள். அவர்களை இன்று நினைத்தாலும் நெஞ்சம் பதை பதைக்கிறது. உயிருக்கு இணையானது இந்த உலகில் எதுவுமே இல்லை. இந்தத் தேடரிய செல்வத்தையே இழந்து நிற்போருக்கு ஆறுதல் கூறுவதைத்தவிர வேறு எதைக் கூறுவதென எனக்குத் தெரியவில்லை".

இவ்வாறு உணர்ச்சிததும்ப யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், கடந்த யூலை மாதம் 9 ஆம் நாள் நவாலியிற் சென் பீற்றர்ஸ் தேவாலயத்தின் மீது சிறீலங்கா விமானப்படையின் "புக்காரா" விமானத்தின் குண்டுவீச்சினால் உயிரிழந்தவர்களின் 31 ஆவது நாள் அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றுகையிற் கூறினார்.

நல்லை ஆதீன முதல்வர் சிறீலசிறீ பரமாச்சாரிய சுவாமிகள் தமது உரையில், "ஆலயங்களிற் தஞ்சம் புகும் மக்கள் தாக்குதலிற் பலியாவது பெரும் கவலைதரும் விடயம். இத்தகைய நடவடிக்கை மத வழிபாட்டு உரிமையைத் தடைசெய்யும் செயலாகும்" என எடுத்துக் கூறினார். எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறாமலிருக்க உத்தரவாதம் பெறப்பட வேண்டும் என்றார்.

நவாலிப் பங்குத் தந்தை அருட்திரு. பி. எல். பொனியஸ் அடிகளார் தலைமையில் நடைபெற்ற நினைவஞ்சலிக் கூட்டத்தில் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், தென்னிந்தியத் திருச்சபையைச் சேர்ந்த திரு. ஆனல்ட், அருட்திரு. தர்மகுலசிங்கம், நவாலி அந்திரான் முருகன் ஆலயப் பிரதம குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் சிறீலசிறீ பரமாச்சாரியசுவாமிகள் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

கூட்டத் தொடக்கத்திற் திருப்பலி இடம்பெற்ற பொழுது இறந்தவர்களின் உற்றார் உறவினர்கள் துயரம் தாங்காது ஓலமிட்டு அழத் தொடங்கியமை கண்டார் நெஞ்சங்களை நெக்குருக வைத்தது.

## மீனவர் ஐவரை விடுதலைப் புலிகள் விடுதலை செய்தனர்

விடுதலைப் புலிகளின் கண்காணிப்பில் நீண்ட நாட்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிங்கள மீனவர்கள் ஐவரைப் புலிகள் யாழ். நகரில் வைத்து விடுதலை செய்தனர்.

இந்த 3 சிங்கள மீனவர்களும் இரண்டு முசுலிம் மீனவர்களும் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுக் கப்பல் மூலம் திருகோணமலைக்குப் பயணமாகி அங்கிருந்து தமது சொந்த ஊருக்குப் பயணமாகினர்.

நல்லெண்ணச் சமிக்ஞையை வெளிப்படுத்தும் நோக்கில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட இந்த ஐந்து மீனவர்களின் விடுதலை குறித்துச் சிறிலங்கா அரசோ, தொடர்புச் சாதனங்களோ எவ்வித தகவலையும் மக்களுக்குக் கொடுக்கவில்லை. இத்தகைய நல்லெண்ணச் செயல்கள் சிங்கள மக்களை எட்டுமானாற் சிறிலங்கா தான் நடாத்திவரும் போரின் மீது மக்கள் காட்டும் வெறுப்பு மேலும் வலுவடையுமென அஞ்சுவதாக அவதானிகள் கருதுகின்றனர்.

www.tamilarangam.net



சந்திரிகாவைப் பிரதம தளகர்த்தராகக் கொண்ட சிறீலங்காவின் முப்படைகளும் ஒன்றிணைந்து அரங்கேற்றிய "யாழ்ப்பாணப் படுகொலை" — தமிழினத்தின் தேசிய ஆன்மாவின் மேல் விழுந்த இன்னொரு கோர வடு.

1995 ஆம் ஆண்டு யூலைத் திங்கள் 9ஆம், 10ஆம், 11ஆம் நாட்களில், குடாநாட்டின் மீது பெருமெடுப்பிலான படையெடுப்பு ஒன்றை நடாத்தி — கண்மூடித்தனமாகக் குண்டுத்தாக்குதல்களை நிகழ்த்தி — இந்த "யாழ்ப்பாணப் படுகொலை"யைச் சந்திரிகாவின் படை ஈவிரக்கமற்று அரங்கேற்றியது.

இதுவரை 239 பொதுமக்கள் கொல்லப்பட்டதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. காயப்படுத்தப்பட்ட ஆயிரமளவான ஆட்களில் ஏராளமானோர் அங்கவீனமாக்கப்பட்டுள்ளதாகவும், அதிகாரபூர்வ அறிக்கைகள் கூறுகின்றன.

**சந்திரிகா அப்படிச் செய்தவரல்ல — தமிழர்களுக்கு அவர் போர்முகத்தோடு அறிமுகமானவரல்ல — சமாதானத்தைத் தவிர வேறெதையும் அவர் பேசியவருமல்லர். 'சமத்துவமே என் மூச்சு' என்றார். 'சமரசமே என் இலட்சியம்' என்றார். 'நாட்டை அழிக்கும் கொடும் போரினை நிரந்தரமாகவே நிறுத்துவேன்' எனச் சூளுரைத்தார். 'தமிழ் மக்களை நீண்ட காலமாக இன்னலுக்குள்ளாக்கியிருக்கும் இனப்பிரச்சினைக்கு அமைதிவழியில் தீர்வு காண்பேன்" என வாக்குறுதியளித்தார்.**

# "ஒப்பறேசன்  புலிப்பாய்ச்சல்"

தமிழர்களைப் படுகொலை செய்யும் பெரும் இன அழிப்பு நடவடிக்கைகளை நிகழ்த்தியவர்களாக, சரித்திரத்தில் தங்கள் பெயர்களைப் பதித்துக்கொண்ட பேரினவாத



பலியெடுக்க வந்தோரே பலியான பரிதாபம்

சிங்களத் தலைவர்களின் வரிசையில், சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்க என்ற பெயரும் இப்போது ஆழமாகப் பதிவுசெய்யப்பட்டுவிட்டது.

ஜெயவர்த்தனாவின் கட்டளைகளும், பிரேமதாசாவின் உத்தரவுகளும், ராஜீவ் காந்தியின் ஆணைகளும் தந்த விளைவுகளைப் போலவே — சந்திரிகாவின் பணிப்புகள் தந்த விளைவுகளும் கோரமானவை.

ஜெயவர்த்தனா, காமினி, லலித், ரஞ்சன், பிரேமதாசா, விஜேதுங்கா போன்ற சிங்களத் தலைவர்கள் — நேரடியான இராணுவச் செயற்பாடுகளாக மட்டுமே, தமிழ் மக்களுடனான அணுகுமுறைகளை வைத்துக்கொண்டார்கள்.

"போர் என்றால் போர்!" என்றும், "தமிழர் பிரச்சினைக்கு இராணுவ வழிமுறைகளிலேயே தீர்வு காணவேண்டும்" என்றும் — சொன்னவற்றையே நடைமுறைப்படுத்தியும் — தமிழினத்துக்கு எதிராக அவர்கள் பகிரங்கமாகவேதான் செயற்பட்டார்கள்.

ஆனால் சந்திரிகா அப்படிச் செய்தவரல்ல — தமிழர்களுக்கு அவர் போர்முகத்தோடு அறிமுகமானவரல்ல — சமாதானத்தைத் தவிர வேறெதையும் அவர் பேசியவருமல்லர்.

"சமத்துவமே என் மூச்சு" என்றார். "சமரசமே என் இலட்சியம்" என்றார். "நாட்டை அழிக்கும் கொடும் போரினை நிரந்தரமாகவே நிறுத்துவேன்" எனச் சூளுரைத்தார். "தமிழ் மக்களை நீண்ட காலமாக இன்னலுக்குள்ளாக்கியிருக்கும் இனப்பிரச்சினைக்கு அமைதிவழியில் தீர்வு காண்பேன்" என வாக்குறுதியளித்தார்.

அரைநூற்றாண்டாக அழிந்த இனம் அகமகிழ்ந்தது. நோவுபட்ட உள்ளங்கள் நெகிழ்ந்தன. எம் துயரங்களை — யெல்லாம் சந்திரிகா துடைத்தெறியப் போகின்றார் என்று, இனம்புரியாத இன்பத்தில் தமிழர்கள் திளைத்தார்கள். அவரது வார்த்தை ஜாலங்களுக்கு தமிழர்கள் வசியப்பட்டார்கள் என்பது உண்மை. பழைய பேரினவாதிகள் செய்த பாவங்களுக்கெல்லாம், அம்மையார் தனது செயற்பாடுகள் மூலம் பாவமன்னிப்புத் தேடுவார் என, தமிழர்கள் நம்பினார்கள். இனவாதம் புரையோடி அசுத்தப்பட்டிருந்த சிங்கள இனத்தைப் பரிசுத்தப்படுத்தி — இனங்களைச் சமத்துவப்படுத்துவார் என்று தமிழர்கள் காத்திருந்தார்கள்.

ஆனால் — சந்திரிகா சதி செய்தார்.

நம்பிக்கை வைத்த மக்களுக்குப் பச்சைத் துரோகம் இழைத்தார். நயவஞ்சகமாக நடந்தார். தமிழர்களின் முதுகில் குத்தினார். சாந்த சொரூபியாகக் காட்சி கொடுத்தவர் நாசகாரியாக மாறினார். சமாதானம் பேசியவர் சன்னதம் கொட்டினார். பழைய பேரினவாதிகளைவிட கொடூரமானவராகி — திமிர்த்தனத்தோடு அவர் போர் தொடுத்தார்.

அமைதிப் பேச்சுக்களையே நடாத்துவேன் என்றவர், பீரங்கிக் குண்டுகளாலும், விமானக் குண்டுகளாலும் பேசத் தொடங்கினார். "யாழ்ப்பாணப் படுகொலை"யை "சமாதானத்திற்கான போர்" என்று கூறியபடி அரங்கேற்றினார்.

நாங்கள் குடியிருந்த நிலங்களுக்குள் பேய்கள் புகுந்தன. தோட்ட வெளிகளை "டாங்கி"கள் உழுதன. சமாதானத்தை வேண்டியவர்களின் மீது படைக்கலங்கள் பதம்பார்த்தன. அவலம்.......அவலம்........திரும்பிய பக்கமெல்லாம் அவலம்.

**அமைதியாகவும், நிதானமாகவும் அவதானித்தான் எங்கள் தலைவன். கண்ணீர் விட்டுக்கதறிப் புரண்டோரின் கதையறிந்து நெஞ்சு பொருமினான். அவனது ஆன்மா துடித்தது. தூக்கம் மறந்தான். துயில் கொள்ளும்வேளை மறந்து — தாக்கும் வழி ஆராய்ந்தான். பலியெடுத்து வந்தோரைப் பழிவாங்கும் வேட்கையோடு திட்டமிட்டான் எங்கள் காவலன். நுட்பமாகவும், நேர்த்தியாகவும் வியூகம்வகுத்தான் எமது இனத்தின் தளபதி.**

யாழ்ப்பாணக் குடாநாடு துயரக் கடலில் மூழ்கியது. பிய்ந்து சிதறிய பிரேதங்கள், இடிந்து நொருங்கிய வீடுகள், உருக்குலைந்த கிராமங்கள், அவலமாய் ஓடிய மக்கள்.......ஊர்மனைகளைத் துவம்சம் செய்தபடி இடியோசையோடு முன்னேறின சந்திரிகாவின் படைகள்.

எல்லார் முகங்களிலும் பீதி! எல்லார் அகங்களிலும் அச்சம்! எல்லார் கண்களிலும் ஏக்கம்! "என்னதான் நடக்கப் போகிறது?" எல்லாரிலுமே கேள்விக்குறி. "சிங்களப் படைகள் எங்கள் குடியிருப்புக்குள் புகுந்து குதறியெறியத்தான் போகின்றனவா? எம்மைக் கொன்று தின்று ஏப்பம் விடத்தான் போகின்றனவா?" கடந்தகால வரலாற்றின் கொடூரங்கள் கண்முன்னால் விரிந்தன. ஈவிரக்கமற்ற இன அழிப்பின் கோரங்கள் நினைவுகளில் அசைந்தன. மீண்டும் குருதி ஆறா? திரும்பவும் பிண மலைகளா? மீளவும் அகதி வாழ்வா? சந்திரிகாத் தாயே நீயுமா? நாலாபக்கமும் முற்றுகையிடப்பட்டு நிர்க்கதியாய் அலறும் எங்கள் குரல் உலகின் செவிகளில் விழாதா? தப்பி ஓட வழியுமற்று செத்தழியத்தான் போகின்றோமா? ஓடோடி வந்து காக்க ஒருவருமே இல்லாமல் இலட்சக்கணக்கில் நாங்கள் கொன்றொழிக்கப்படப் போகின்றோமா.....? ஐயகோ.......! என்றபடி ஈழத்தமிழினம் மட்டுமல்ல, உலகம் எங்கும் வாழும் தமிழர்கள் தலையில் கை வைத்தபடி இருந்தனர்.

ஆனால் —

அச்சப்பட்டு, அவலப்பட்டு, மக்களெல்லாம் மனம் இடிந்து புலம்பிக்கிடந்த வேளை — அமைதியாகவும், நிதானமாகவும் அவதானித்தான் எங்கள் தலைவன். கண்ணீர் விட்டுக் கதறிப் புரண்டோரின் கதையறிந்து நெஞ்சு பொருமினான். அவனது ஆன்மா துடித்தது. தூக்கம் மறந்தான். துயில் கொள்ளும்வேளை மறந்து — தாக்கும் வழி ஆராய்ந்தான். பலியெடுத்து வந்தோரைப் பழிவாங்கும் வேட்கையோடு திட்டமிட்டான் எங்கள் காவலன். நுட்பமாகவும், நேர்த்தியாகவும் வியூகம் வகுத்தான் எமது இனத்தின் தளபதி.

## போராட்டத்தின் அடுத்த பரிணமிப்பு

அதுதான், "ஒப்பறேசன் புலிப்பாய்ச்சல்!"

அன்று — வடமராட்சித் தாக்குதலில் இறுமாந்திருந்தவர்களின் இதயக் கூட்டுக்குள் மில்லரை அனுப்பிய தலைவன், இன்று — முன்னேறிப் பாய்ந்து முறுக்கேறி நின்றவர்மீது "புலிப்பாய்ச்சலை" நிகழ்த்தினான். தமிழரின் விடுதலைப் போர்ச் சரித்திரத்தில் புதியதோர் திருப்புமுனைச் சமர். எமது மக்களை அடித்துத் துரத்தியவர்களை — அடித்து விரட்டிய வரலாறு. நூற்றுக்கணக்கில்




வீழ்த்தப்பட்ட எம் மக்களின் துன்ப நினைவுகளைச் சுமந்தபடி, தலைவன் தீட்டிய போர்த்திட்டம். தலைவனின் தளபதிகள் நிகழ்த்திய படைநகர்த்தல். கோவிலில் குண்டடித்துக் கோரம் செய்த "புக்காரா"வை, கோவிலின் முற்றத்திலேயே காட்சிக்கு வைத்தனர் புலிகள். மக்களை வேட்டையாடக் குண்டிறக்கிய கப்பலை, காங்கேசன்துறையில் வேட்டையாடினர் புலிகள்.

பொங்கிக் குதித்தது தமிழினம். அழுது புலம்பிய முகங்களிலெல்லாம் ஆனந்தக் களிப்பு. இனம் புரியாத ஒரு இன்பச் சிலிர்ப்பு.

"புலிப்பாய்ச்சல்" தாக்குதல் — இருவேறு தரப்பினருக்கு, இருவேறு விதமான பாடங்களைப் புகட்டியிருக்கின்றது.

அடித்து விரட்டி, கொன்று குவித்து, தமிழினத்தை அடிமைகொண்டு ஆளலாம் என்ற பழைய வரலாறு இனி நீடிக்காது என்பதை, சிங்கள தேசத்திற்குப் புகட்டியிருக்கிறது.

அழிவுகளால் புலம்பி — அகதியாய் ஓடாமல், சொந்தப் பலத்தோடு எதிரியை எதிர்த்து விரட்டினால் மட்டுமே, நாம் நிரந்தர மகிழ்வோடு நிம்மதியாய் வாழலாம் என்பதைத் தமிழினத்திற்கும் புகட்டியிருக்கின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# காலத்தால் செய்யும் நிதியுதவி காப்புறுதித் திட்டம் போலவாகும்!

புலிகளுடனான போர் ஆரம்பித்த பின், சிங்களத்தின் சகல பொருண்மியக் குறிகாட்டிகளும் வீழ்ச்சி நிலையையே சுட்டுகின்றன. "முன்னோக்கிய பாய்ச்சலின்" வெற்றியை எதிர்பார்த்த முதலீட்டாளர், "புலிப்பாய்ச்சலால்" தலையைத் தொங்கப் போட்டுள்ளனர். பணவீக்கம் இரட்டை எண்ணாகின்றது! மொத்த தேசிய உற்பத்தியில் பாதுகாப்புச் செலவினம் அபாயகரமான 5 விழுக்காட்டை நெருங்குகின்றது. வரவு செலவுப் பற்றாக்குறை மொத்தத் தேசிய உற்பத்தியில் 9 விழுக்காட்டுக்கும் மேலாகின்றது. சென்றஆண்டு இதேமாதம் 1000 புள்ளிக்கும் மேலாகவிருந்த பங்குச்சந்தை குறியெண்ணோ இம்மாதம் 742 எண்ணாகி மேலும் வீழ்கின்றது. மொத்தத்தில் பெரும் பொருண்மிய மந்த நிலையே எங்கும் நிலவுகின்றது. கொழும்பு வணிகமையம் சுறுசுறுப்பு இழந்து, மக்களின் வாங்கும் திறன் குறைந்து, வியாபாரம் பெரும் சோர்வு நிலையிலிருப்பதாகக் கொழும்பின் பிரபல வணிகர்கள் முறையிடுகின்றனர். சிறீலங்கா நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சி அடைகின்றது. இவற்றின் பொருள் என்ன? இப்பொருண்மிய வீழ்ச்சியினை அரசியல் மொழியில் மொழிபெயர்த்தால் அது இப்படித்தான் இருக்கும் என்கின்றார் ஒரு நிதித்துறை வல்லுனர்.

இப்போதைய பெருகும் வரவு செலவு பற்றாக்குறை, குறைவான வளர்ச்சி வீதம், தாழ் நிலையை நோக்கும் ரூபாயின் பெறுமதி என்பன சிறீலங்காவின் பெரும் பகுதி மக்கள் மீது அவர்கள் தாங்கமுடியாத, நினைத்துப் பார்க்கவே முடியாத பாரிய பளுவைச் சுமத்தும். இவ்வாறாக, சிங்களத்தின் பொருண்மிய சோகக்கதை தொடர்கின்றது. போர் மேலும் தீவிரப்பட, புலிகளின் தாக்குதல்கள் அதிகரிக்க, நிலைமைகள் எவ்வளவு மோசமடையும் என்பது நாம் சொல்லித் தெரியவேண்டிய செய்தியல்ல.

எனவே, இவையெல்லாம் எவ்வாறு நிகழ்கின்றன? பல்வேறு வழிகளில், பல்வேறு நாடுகளிலிருந்தும் பல்வேறு சருவதேச நிதியமைப்புக்களிலிருந்தும் நிதியை இலகுவில் திரட்டக்கூடிய ஒரு அரசு, எவ்வித வெளிநாட்டு உதவியும் கிடைக்காத தன்மக்களையே நம்பியிருக்கும் ஒரு விடுதலை அமைப்பு — இரண்டையும் ஒருகணம் ஒப்பிட்டுப் பாருங்கள், ஒரு பேருண்மை இங்கே புலப்படும். ஒவ்வொரு புலிவீரனும் பல சிங்களப் படைக்கு சமமாவதுபோல, இப்போரிலே புலிகள் செலவிடும் ஒவ்வொரு ரூபாயும் பன்மடங்கு செலவினத்தை சிறீலங்காவிலே ஏற்படுத்தி விடுகின்றது. ஒப்பீட்டளவிலே பார்க்குமிடத்து இப்பெருக்கம் அதிசயிக்கத்தக்க வகையில் அமைகின்றது. இங்கே இன்னொரு தகவலும்

> **"போருக்கு நின்றிடும்போதும் உளம் பொங்கல் இல்லாத அமைதி மெய்ஞானம்" உடைய எமது போராளிகளுக்கு, "ஊருக்கு உழைத்திடல் யோகம், நலம் ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம்" என எம்மக்களும் துணையாக நின்று உதவீடும் போது, இனிவரும் பொழுது எமக்கு வீடிவாக மாறும்.**

சேர்க்கப்பட வேண்டும். ஏனைய விடுதலைப் போராட்ட இயக்க வரலாறுகளைப் பார்க்குமிடத்து, ஒவ்வொரு விடுதலை அமைப்பிற்கும் குறிப்பிட்ட சில நாடுகள் நிதியுதவியை வாரிவழங்குவதை அவதானிக்க முடியும். ஒரு அங்குலம் தாயக மண்ணைமீட்க முடியாத பாலத்தினிய விடுதலை இயக்கத்திற்கு அண்மைக் காலம்வரை, வெளிநாடுகளில் பணிபுரியும் ஒவ்வொரு பாலத்தினியனும் பலபத்து ஆண்டுகளாகத் தனது மாத வேதனத்தில் கணிசமான விழுக்காட்டைக் கிரமமாகச் செலுத்தினான். அத்தோடு, இசுலாமிய செல்வந்த நாடுகள் வாரி வழங்கின. தற்போதும் போராட்டத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளும் குர்திசு மக்களின் அமைப்பிற்கும் மேற்குலகில் தொழில்பார்க்கும் குர்திசு மக்கள் உவந்தளிக்கும் நிதியுதவியோடு, சிரியா போன்ற நாடுகளும் உதவுகின்றன. அண்மையில் விடுதலை பெற்ற எரித்திரியாவின் விடுதலை அமைப்பிற்கு வெளிநாடுகளில் செல்வந்தராகவிருக்கும் எரித்திரியர் மட்டுமன்றி, பல இசுலாமிய நாடுகளும் வாரி வழங்கின. ஆனால், புலிகளைப் பொறுத்தவரையில் அதன் நிதிமூலம் என்பது, தமிழீழ மக்களிடமிருந்து அவர்கள் எங்கிருந்தாலும் மனமுவந்து அளிக்கும் நன்கொடை மூலமே என்பது தெரிந்ததே. இங்கே வெளிநாட்டுதவி என்பது பல விடயங்களில் உபத்திரவமாகவும் மாறியதோடு, அவை வற்றியபோது விடுதலைப் போராட்டங்கள் வீழ்ச்சி கண்டதும் எமக்குப் பாடமாகவும் உள்ளன. சிறீலங்காவின் இன்றைய நிலையை ஒப்பிடுவதற்கு எத்தியோப்பியாவே தகுந்த உதாரணம் ஆகும். வலுக்கட்டாயமாகத் தன்னோடு இணைத்த எரித்திரியாவின் விடுதலைப் போரை நசுக்க, சோவியத்தின் உதவிகளையே முழுமையாக நம்பியிருந்த எத்தியோப்பியா, சோவியத் உதவிகள் நிறுத்தப்பட்ட பின் தோல்வி கண்ட கதை நாம் நினைவுகூரத்தக்கது.

அப்போது எரித்திரிய மண்ணிலே நிலைகொண்டிருந்த 100,000 படையணி, அடிஸ்அபா(பா)வோடு தொடர்புகள் யாவும் அறுந்த நிலையில், குழம்பிச் சிதைந்து இறுதியில் தனது ரி.85 ரக தாங்கிகள், பீரங்கிகள் சகிதம் "EPLF" போராளிகளிடம் சரண் அடைந்ததும் நாம் மனங்கொள்ள வேண்டிய செய்தி மட்டுமன்றி, இங்கும் எதிர்பார்க்கக்கூடியதுதான்.

ஆனால், இப்பாரிய மாற்றம் நிகழ, வெற்றி அன்னை எம்மை அணைக்க, தமிழீழ மக்கள் என்ன செய்யவேண்டும் என்பது தெளிவானது. இளைய தலைமுறை விடுதலைப் போராட்டத்தில் ஆர்வத்துடன் அணியணியாகச் சேர்வதுபோல், எம்மக்களும் புலிகள் அவசர நிதி உதவியாகக் கோரும் 100 கோடி ரூபா பணத்தைத் திரட்ட தாமாகவே முன்வருவர் என்பதில் ஐயமில்லை.

இந்நிதியானது, பெருக்கல் அடிப்படையில் எத்தகைய பன்மடங்கு தாக்கத்தைச் சிங்களத்தில் விளைவிக்கும் என்பதை எம்மக்களால் கணிக்கமுடியும். அதுமட்டுமன்றி காலத்தால் செய்யப்படும் இந்நிதி உதவியானது, காப்புறுதித் திட்டம்போல எம் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பாக அமையும் உன்னதநிலையை மக்களால் உய்த்துணரவும் முடியும். எனவே பாரதி சொன்னதுபோல்,

"போருக்கு நின்றிடும்போதும் உளம் பொங்கல் இல்லாத அமைதி மெய்ஞானம்" உடைய எமது போராளிகளுக்கு, "ஊருக்கு உழைத்திடல் யோகம், நலம் ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம்" என எம்மக்களும் துணையாக நின்று உதவிடும் போது, இனிவரும் பொழுது எமக்கு விடிவாக மாறும்.

பாலகுமாரன்

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கென நூறு கோடி ரூபாவினைத் தமிழ் மக்களிடம் இருந்து நன்கொடையாகத் திரட்ட முடிவு செய்துள்ளோம். தமிழ் மக்கள் தங்கள் சொந்த விருப்பத்தின் பேரிற் தம்மால் இயன்ற உதவியை நல்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்." இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்பாளர் திரு. தமிழேந்தி தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற வரி செலுத்துவோருக்கான சிறப்புக் கூட்டத்திற் பேசும் போதே திரு. தமிழேந்தி இதனைத் தெரிவித்தார்.

## 100 கோடி ரூபா நன்கொடையாகத் திரட்டுவதற்கு முடிவு!

மேலும் பேசிய அவர், சிறீலங்கா அரசு தமிழ் மக்களை அழிப்பதற்குக் கோடிக்கணக்கான ரூபாக்களைச் செலவிடுகிறது. 94ஆம் ஆண்டிற்கு மட்டும் ஏறக்குறைய 2,600 கோடி ரூபா செலவு செய்தது. 95ஆம் ஆண்டில் ஏறக்குறைய 2,400 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது. அதைவிடக் கூடுதலாக 300 கோடி ரூபா மேலதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்பு நிதிக்குச் சிங்களப் பொதுமக்கள் தொடக்கம் பௌத்த துறவிகள் வரை வாரி வழங்குகின்றார்கள். தமிழ் மக்களின் விடுதலைப் போரை ஒடுக்குவதற்கென்றே உருவாக்கப்பட்ட இந்தப் பாதுகாப்பு வரி மூலம் பணம் திரட்டப்படுகிறது. பொருண்மியத் திட்டங்களுக்காக உதவி வழங்கும் நாடுகள் அண்மையில் வழங்கிய 4250 கோடி ரூபாவில் பெருமளவைத் தமிழருக்கு எதிரான

## சொந்த விருப்பின் பேரில் உதவுமாறு தமிழ் மக்களிடம் புலிகள் கோரிக்கை

போர்க்கருவிகளை வாங்கப் பயன்படுத்துகிறது. இவை போதாத நிலையிற் தனியார் துறையிடம் கடன்பெறவும் அரசு முனைகிறது. 45 ஆயிரத்திற்கும் அதிகமான படையினர் யாழ். குடாநாட்டைச் சுற்றி வளைத்துள்ளனர். இவ்விக்கட்டான நிலையில் எதிர்த்துப் போராடி எமது தமிழீழ நாட்டின் விடுதலையை உறுதி செய்யக்கூடியளவு போராளிகள் தேவைப்படுகின்றனர். பெருந்தொகையான நிதி தேவைப்படுகிறது.

இந்த நிலையிற் தமிழீழ விடுதலைக்காக நூறு கோடி ரூபாவை நன்கொடையாகத் திரட்ட முடிவு செய்துள்ளோம். இதற்குத் தமிழ்மக்கள் தாங்கள் தமது சொந்த விருப்பத்தின்பேரிற் தம்மால் இயன்ற உதவியை நல்கும்படி கேட்டுக்கொள்கின்றோம். எங்களுடைய மக்கள் முன்னோக்கிப் பாய்தல் இராணுவ அழிப்பின்போது தமது இலட்சக்கணக்கான பெறுமதியுடைய உடைமைகளை விட்டு, உடுத்த உடையோடு இடம்பெயர்ந்து ஏதிலிகளாகச் சென்றனர். இந்த நிலையில் அவர்கள் போராட்டத்திற்கு உதவுகின்ற நிதி மூலம் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தித் தமது உயிர்கள் மற்றும் உடமைகளையும் பாதுகாத்துக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

தமிழீழத்தைத் தவிர வேறு எதுவும் தமிழனுக்கு விடுதலையைப் பெற்றுத்தராது.

உலகம் முழுவதும் இன்றைக்கு எட்டுக்கோடி தமிழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களில் ஒரு பகுதியினர் அகதிகளாகவும், மறுபகுதியினர் அடிமைகளாகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இந்தியாவில் வாழும் தமிழர்கள் கூட விடுதலையடைந்த மக்களாக வாழவில்லை.

ஒரு போர் விமானத்தைச் சுட்டுவீழ்த்துவதென்றால் ஐம்பது இலட்சம் ரூபா செலவாகும் இதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்த மண்ணின் விடுதலைக்காக இப்போது எங்களுக்குப் பெருமளவு நிதி தேவைப்படுகின்றது. எவ்வளவு நிதி தருகின்றீர்கள் என முடிவு செய்வதை உங்களிடம் விட்டுவிடுகின்றோம். உங்களின் பங்களிப்பை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

யாரையும் நாங்கள் வற்புறுத்தி நிதி கேட்கப் போவதில்லை. நூறு கோடி ரூபா நிதி திரட்டும் நோக்கோடு தங்களை அழைத்திருக்கின்றோம்.

இந்த மண்ணை மீட்பதற்குப் போராளிகள் தேவை, நிதி தேவை.

இந்த இரண்டும் கொடுக்கப்படுமானால் — இந்த மண்ணின் விடுதலைப் போராட்டம் மிக விரைவிலேயே நிறைவடையும்.

உங்கள் விருப்பத்தின் படி பங்களிப்புச் செய்யுங்கள்.

நாடோடியாக வாழ்ந்த தமிழர்கள், அல்லற்பட்டு வாழ்ந்த தமிழர்கள் இன்று உலகத்திற் தலை நிமிர்ந்து வாழ்கின்றார்கள் என்றால் அந்த நிலையை உருவாக்கிய தலைவன் பிரபாகரன். எவருக்கும் அடிபணியாத தலைவன் அவன்.

எதிரிப்படையை விரட்டும் அளவிற்கு நாம் ஒரு படையை உருவாக்கிவிட்டோம் — பிரபாகரனின் தலைமையில் இது நிகழ்ந்திருக்கிறது.

மிகச் சிறந்த தலைமை தமிழருக்குக் கிடைத்திருக்கின்றது.

தமிழர்களின் வரலாறு சங்க காலம், சங்கம் மருவிய காலம் என்று எப்படிப் பிரிக்கப்பட்டிருக்கிறதோ, அப்படி பிரபாகரன் காலம் என நிச்சயம் எழுதப்படும்.

உலக வரலாறு எப்படி கிறிஸ்துவுக்கு முன் — கிறிஸ்துவுக்குப் பின் என எழுதப்பட்டிருக்கிறதோ அதேமாதிரி, தமிழ் மக்களின் வரலாறு பிரபாகரன் காலத்துக்கு முன் — பிரபாகரன் காலத்துக்குப் பின் என நிச்சயமாக எழுதப்படும்.

தமிழர்களின் வரலாற்றிற் பல துரோகிகள் இருந்துள்ளனர். காட்டிக் கொடுப்போர் இருந்துள்ளனர். இன்று வரையும் அது உள்ளது.

தமிழனின் விடுதலையே தன் வாழ்நாளின் இலட்சியமாகக் கொண்டு

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யார், இடம்பெயர்ந்து ஓடவேண்டும்?

உலகமே வியந்து பார்க்கும் ஒரு உன்னத தலைவன், இன்று எமது இனத்திற்கு உண்டு. அந்த வரலாற்றுத் தலைவனின் வழிகாட்டலிலும் — நெறிப்படுத்தலின் கீழும் சிறப்பாகப் படை நடாத்தக்கூடிய திறமையான தளபதிகள் எம்மிடம் உண்டு. எதிரியிடம் இருந்து கைப்பற்றிய கணிசமான ஆயுதங்கள் உண்டு. அத்துடன், சிறந்த போர்த் திட்டங்களும் அதற்கே உரிய தந்திரோபாயங்களும் புலிகளிடம் உண்டு. ஆயினும்,

## எமது மக்களா?

போதியளவு ஆட்தொகை இயக்கத்திடம் இல்லாதபடியால், மேற்குறித்த அற்புத வளங்களின் உயர்பயனை எமது தேசம் பெறமுடியாது இருக்கின்றது. இதேவேளை, தேவையான இந்த ஆட்பலத்தை இயக்கத்திற்கு வழங்கும் சக்தி, எமது இனத்திற்குத் தாராளமாக உண்டு என்பதும் கவனிக்கத்தக்கது.

இன்று எமது மக்கள் அனுபவிக்கும் அவல வாழ்வுக்கும் — துயர நிகழ்ச்சிகளுக்கும் பிரதான காரணம், தமிழரின் படைபலத்திற்கு இருக்கும் ஆட்பற்றாக் குறைதான். இந்த ஆட்பற்றாக்குறையின் ஒரு விளைவுதான், அண்மையில் ஏற்பட்ட 300இற்கும் மேற்பட்ட மக்களின் அவலச் சாவுகளும் — 3 இலட்சம் மக்களின் இடப்பெயர்வும் ஆகும். இத்தகைய துயர வாழ்வு தொடராது தடுப்பதற்குரிய நேரம் வந்துவிட்டது. அடுத்த இராணுவ நடவடிக்கையை எதிரிப் படைகள் ஆரம்பிக்க முன்னர், புலிகள் இயக்கத்தின் ஆள் எண்ணிக்கையை உடனடியாகவே அதிகரிக்கச் செய்ய வேண்டும்.

சிங்களப் படைகளுடனான போர், இன்று ஒரு புதிய பரி—மாணத்தை எட்டிவிட்டது. அதாவது, எமது ஊர்களை ஆக்கிரமிக்கும் நோக்குடன் ஒரு இராணுவ நடவடிக்கையைச் சிங்களப் படைகள் மேற்கொள்ளும்போது, இதைத் தடுத்து நிறுத்த, புலிகள் இயக்கமும் ஒரு பதில் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத் தேவை ஏற்படுகின்றது. இந்த நிலையில், சிங்களப் படையும் தமிழர் படையும் நேருக்கு நேர் மோதும் மரபுவழிச் சமராக விடுதலைப் போர் மாற்றமடைகின்றது.

மரபுவழிச் சமரில் ஆயுத பலத்தைப் போன்று ஆட்பலமும் முக்கிய இடத்தை வகிக்கின்றது. எதிரியின் கடற்பலத்தையும் — வான் ஆதிக்கத்தையும் கணிசமான அளவுக்குக் கட்டுப்படுத்தும் வலு புலிகள் இயக்கத்திற்கு இருப்பதால், ஆயுத பலத்தில் சமநிலை காணும் வாய்ப்பு, ஓரளவுக்கேனும் உண்டு. அதேவேளை, எமது போராளிகளின் போர்த்திறனும் — எமது போர்முனைகளும் எதிரியினதைவிட மேலோங்கி நிற்பதால், எதிரியின் ஆயுதபலத்தை ஓரளவாவது எம்மால் சமாளிக்க முடிகின்றது.



ஆனால், ஆட்பலத்தைப் பொறுத்தளவில், சிங்களப் படையுடன் ஒப்பிடும்போது நாம் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளோம். எனவே, சிங்களப் படையின் ஆட்பலத்திற்கு இணையாக, ஓரளவிற்கேனும் புலிகளின் ஆட்பலமும் அதிகரிக்கப்பட்டால்தான், எதிரியின் படையெடுப்பில் இருந்து எமது மண்ணையும் — எமது மக்களையும் பாதுகாக்க முடியும். இல்லையேல், இப்போது நடந்துள்ளதைப்போல அழிவுகளையும் அவலங்களையும் சிங்கள அரசு தவணை முறைப் பரிசாகத் தமிழ் மக்களுக்கு வழங்கிவிடலாம்.

> ஆட்பலத்தைப் பொறுத்தளவில், சிங்களப் படையுடன் ஒப்பிடும்போது நாம் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளோம். எனவே, சிங்களப் படையின் ஆட்பலத்திற்கு இணையாக, ஓரளவிற்கேனும் புலிகளின் ஆட்பலமும் அதிகரிக்கப்பட்டால்தான், எதிரியின் படையெடுப்பில் இருந்து எமது மண்ணையும்-எமது மக்களையும் பாதுகாக்க முடியும். இல்லையேல், இப்போது நடந்துள்ளதைப்போல அழிவுகளையும் அவலங்களையும் சிங்கள அரசு, தவணைமுறைப் பரிசாகத் தமிழ் மக்களுக்கு வழங்கிவிடலாம்.

## சிங்களப் படைகளா?

"முன்னோக்கிப் பாய்தல்" நடவடிக்கையை அரசுப் படைகள் ஆரம்பிக்க முன்னர், குடாநாட்டில் சுமார் 30,000 படையி—னர் குவித்து வைக்கப்பட்டிருந்தனர். ஆனையிறவு — வெற்றிலைக்கேணி கூட்டுத்தளம், பலாலிப் பெருந்தளம், காரைநகர் கடற்படைத்தளம், மண்டைதீவு இராணுவத் தளம், பூநகரிப் படைத்தளம் ஆகிய இடங்களில் இந்த 30,000 படையினரும் நிலைகொண்டிருந்தனர். இந்த நிலையில் ஒரு இராணுவ நடவடிக்கையை அரசுப் படைகள் மேற் கொள்ள இருக்கின்றன என்று அறிந்து கொண்டாலுங்கூட, எந்தத் தளத்திலிருந்து — எந்த முனையூடாக அந்தப் படையெடுப்பு நிகழப் போகின்றது எனக் கண்டறிவது சிரமம். இந்தச் சிரமத்தைத் தீர்க்க சுலபமான வழி ஒன்று உண்டு. அதாவது, அனைத்துப் படைத்தளங்களின் எதிரேயும் தேவையான அளவு போராளிகளை நிறுத்தி, படையெடுப்பை எதிர்கொள்வதே அதுவாகும். ஆனால், அவ்விதம் செய்வதற்குத் தேவையான ஆட்பலம் எமது இயக்கத்திடம் இல்லை.

எனவே, அதிமுக்கியமான சில இராணுவ கேந்திரங்களில் அல்லது படையெடுப்பு நடக்கலாம் எனச் சந்தேகிக்கும் ஒருசில இடங்களில் எமது போராளிகளை நிறுத்தி வைத்துக் கொண்டு காத் திருப்பதைத் தவிர, எமக்கு வேறு வழிகள் இல்லை. எமது இயக்கம் எதிர்கொண்டு நிற்கும் இந்த ஆட்பற்றாக்குறையை எமது மக்களுக்குப் பகிரங்கமாகக் கூறி, இதைத் தீர்ப்பதற்காக, இளைஞர்களும் — இளம் பெண்களும் இயக்கத்தில் இணைய முன்வரவேண்டும் என்று, பல மாதங்களாக அழைப்பு விடுத்துவந்தோம். ஆயினும், எமது அவசர வேண்டுகோளின் முக்கியத்துவத்தை எமது இளம் சமூகம் புரிந்து கொள்ளவில்லை. எமது இளம் சமூகம் காட்டிய அக்கறை யீனத்தையும் — அதனால் எமது இயக்கம் சந்தித்த ஆட்பற்றாக்குறையையும் எதிரி தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டான்.

"முன்னோக்கிப் பாய்தலு"க்கான தொடக்க இடத்தை இவ்விதமே எதிரிப்படை தேர்ந்தெடுத்தது. எண்ணிக்கையில் குறைந்தளவு போராளிகள் நிலைகொண்டிருந்த ஒரு பகுதியூடாக, 09.07.1995 அன்று, சிங்களப்படைகள் "முன்னோக்கிப் பாய்ந்து" களத்தைத் திறந்தன. அந்த முனையூடாக தனது 10,000 வீரர்களை, மிகவிரைவாக எதிரித் தளபதிகள் எமது ஊர்களுக்குள் நகரச் செய்தனர். இந்தப் பாரிய சைனியத்தைத் தடுத்து நிறுத்தும் வலு, அங்கே நிலைகொண்டிருந்த எமது சிறிய அணிக்கு இருக்கவில்லை. மற்றைய கேந்திர நிலைகளில் நிலைகொண்டிருந்த புலிவீரர்களை, குறித்த போர்முனைக்கு நகர்த்து முன்னர், கணிசமான பகுதி நிலத்தை எதிரிப் படைகள் சுலபமாகக் கைப்பற்றிவிட்டன. ஆயினும், எதிரிப் படைகள் கைப்பற்றிய ஊர்களுக்கு முன்னால் திரண்ட எமது படையணிகள் தம்மை நன்கு தயார்ப்படுத்திக்கொண்டு, 14.07.1995 அன்று அதிகாலை, "புலிப்பாய்ச்சலை" ஆரம்பித்தன. ஆயிரக்கணக்கான புலிவீரர்கள் சண்டிலிப்பாய், அளவெட்டிப் பகுதிக்குள் திடீரென நுழைந்து, அங்கே நிலைகொண்டிருந்த படையினரைத் தாக்கத் தொடங்கியபோது, பலாலிப் பெருந்தளத்தின் பழைய நிலைகளை நோக்கி சிங்களப் படைகள் சிதறி ஓடின. அன்றைய தினம் எமது இயக்கத்திடம் போதியளவு போராளிகள் இருந்திருப்பார்களானால், பலாலிப் பெருந்தளத்தில் நிலைகொண்டிருந்த அனைத்துப் படையினருக்கும் சமாதிகட்டி, அந்தப் பெரும் நிலத்தை மீட்டெடுத்து, மக்களிடம் ஒப்படைத்திருக்க முடியும்.

அதேபோல, சுமார் 1,000 புலிவீரர்கள், 28.06.1995 அன்று மண்டைதீவுக்குள் புகுந்து தாக்குதலைத் தொடங்கிய போது, சிங்களப் படைகள் வேலணை தாண்டி ஊர்காவற்றுறை நோக்கிச் சிதறி ஓடின. அன்றைய தினம், எமது இயக்கத்திடம் போதியளவு ஆட்பலம் இருந்திருக்குமேயானால், ஊர்காவற்றுறையில் வைத்து எதிரிப் படை—களை அழித்து, மண்டைதீவு — ஊர்காவற்றுறை நிலப்பகுதியை முழுமையாக விடுவித்து, அப்பகுதியில் எமது போராளிகளை நிலைகொள்ளச் செய்திருக்க முடியும், அதன் பின்னால் மக்களும் தமது வீடுகளுக்குச் சென்றிருக்க முடியும். ஆயினும் இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் நடைபெறவேயில்லை. ஏனெனில், எமது இயக்கத்திடம் அதற்கேற்ற ஆட்பலம் இருக்கவில்லை. இதனால், அழியும் நிலையில் இருந்த படைமுகாம்கள் மீண்டும் உயிர்பெற்று — நிலைகொண்டு எமது மண்ணை ஆக்கிரமித்து வைத்திருக்க முடிகின்றது. எதிரிக்கு அது முடிகின்றது என்பதைவிட, எமது இளம் சமூகம் அதை அனுமதித்துள்ளது என்பதே சரியானதாகும்.

> எமது இயக்கத்திடம் அதற்கேற்ற ஆட்பலம் இருக்கவில்லை. இதனால். அழியும் நிலையில் இருந்த படைமுகாம்கள் மீண்டும் உயிர்பெற்று — நிலைகொண்டு எமது மண்ணை ஆக்கிரமித்து வைத்திருக்க முடிகின்றது. எதிரிக்கு அது முடிகின்றது என்பதைவிட. எமது இளம் சமூகம் அதை அனுமதித்துள்ளது என்பதே சரியானதாகும்.
>
> குடாநாட்டில் போராடக்கூடிய வலுவுடன் இருக்கும் இலட்சக்கணக்கான இளைஞர்கள் நாட்டுப்பற்று இல்லாமலும் — பயத்தாலும் எதிரியின் படையெடுப்பைத் தடுக்க முன்வராது வீணே இருக்கின்றனர். இவர்கள் இயக்கத்தில் வந்து இணைவார்களானால். குடாநாட்டிலுள்ள சிங்கள இராணுவத்தினர் ஓட்டமும் — நீச்சலுமாகத் தத்தம் ஊர்போய்ச் சேர்ந்திடுவர்.

இப்போது மீண்டும் ஒரு "முன்னோக்கிப் பாய்தலுக்கு" சிங்களப் படைகள் தயாராகின்றன. இனி நடைபெறப்போகும் சிங்களப் படைகளின் பாய்ச்சல், வடமராட்சி மீதோ அல்லது தென்மராட்சி மீதோ அல்லது

தொடர்ச்சி மறுபக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வீட்டுக்கு ஒருவர் இயக்கத்தில் இருந்தால் நாட்டுக்கும் பாதுகாப்பு: வீட்டுக்கும் பெருமை

குடாநாட்டைச் சூழ நான்கு பெரிய படைத்தளங்கள் உண்டு. இந்த நான்கு படைத்தளங்களிலும் இப்போது, சுமார் முப்பதாயிரம் (30,000) படையாட்கள் உண்டு. நவாலியில், சண்டிலிப்பாய் — அளவெட்டியில் செய்ததைப்போல குடாநாட்டைக் கைப்பற்றித் துவம்சம் செய்யவெனப் படைமினர் காத்திருக்கின்றனர்.

01. ஆனைபிறவு — வெற்றிலைக்கேணி கூட்டுத்தளத்தில் சுமார் ஆறாயிரம் (6,000) படைமினர் உள்ளனர்.

02. பலாலிப் பெருந்தளத்தில் இப்போது சுமார் பதினைந்தாயிரம் (15,000) படைமினர் உண்டு (இவர்களில் சுமார் ஐயாயிரம் பேர் கிழக்கு மாகாணத்திலிருந்து படையெடுப்பிற்காகக் கொண்டுவரப்பட்டவர்கள்).

03. காரைநகர் கடற்தளம் மற்றும் மண்டைதீவு உட்பட தீவகம் முழுவதிலும், சுமார் ஐயாயிரம் (5,000) படைமினர் உள்ளனர்.

04. பூநகரிப் படைத்தளத்தில் சுமார் நான்காயிரம் (4,000) படைமினர் உண்டு.


எனவே, மொத்தம் முப்பதாயிரம் (30,000) படைமினர் குடாநாட்டின் மீது பாய எந்த நேரமும் தயாராக இருக்கின்றனர்.

இதேவேளை, குடாநாட்டில் சுமார் எட்டு இலட்சம் மக்கள் வாழ்கின்றனர். (எட்டு இலட்சம் மக்கள், முப்பதினாயிரம் ஆமி).

அதாவது, குடாநாட்டைப் பொறுத்தளவில், 27 மக்களுக்கு ஒரு இராணுவம் (27:1) என்ற வீதத்தில் நிலைமை உள்ளது.

27 தமிழர்கள் சேர்ந்து ஒரு இராணுவத்தை அடித்துக் கொன்றால், குடாநாடு முழுவதிலுமுள்ள படைமினர் அழிந்துவிடுவர். இது முடியாததா?

வயதுபோனவர்களையும், குழந்தைகளையும் சேர்த்து இப்படி ஒரு பேர்க்கணக்குப் பார்க்கமுடியுமா என்று, யாராவது கேட்கலாம். சரி, இன்னொரு முறையில் இந்தக் கணக்கைப் பார்ப்போம். குடாநாட்டு மக்களின் எண்ணிக்கையில் எங்களது அம்மா — அப்பா, சிறியவர்களான தம்பி — தங்கைகள் மற்றும் குழந்தைகளையும், தாத்தாபாட்டி, அம்மம்மா, அப்பம்மாக்களையும் கழித்துவிட்டுக் கணக்கைப் பார்ப்போம். குடா நாட்டில் சுமார் 2 இலட்சம் சிறுவர் சிறுமியர் குழந்தைகள் உள்ளனர்.




அதேவேளை, சுமார் 3 இலட்சம் அம்மா — அப்பா, தாத்தா — பாட்டிகளும் உள்ளனர். அதாவது மொத்தம் 5 இலட்சம் பேர் இராணுவத்துடன் போரிட முடியாதவர்களாக இருப்பர், எனவே மிகுதி 3 இலட்சம் இளம் இரத்தம் மிஞ்சும். இவர்கள் 16 வயதிற்கு மேற்பட்ட இளைஞர்களும் இளம் பெண்களுமாவார்கள்.

இளைஞர்கள் செய்ததை ஏன் தமிழ் இளைஞர்கள் செய்ய முடியாது?

இந்த அறிக்கையை வாசிப்பவர்களில், போராளி குடும்பத்தையும் மாவீரர் குடும்பத்தையும் சேராத மற்றைய குடும்பங்களிலுள்ள இளைஞர்கள், சற்று யோசிக்க வேண்டும். உனது வீட்டின் பாதுகாப்பிற்காக — உனது நாட்டின் பாதுகாப்பிற்காக நீ என்ன செய்யப் போகின்றாய்? உடனடியாகவே இயக்கத்தில் இணைந்து உனது நாட்டிற்கான கடமையைச் செய்யப்போகின்றாயா? அல்லது மற்றைய இளைஞர் யுவதிகளின் உயிர்த் தியாகங்களில் நீயும் — உனது வீட்டாரும் குளிர்காயப் போகின்றீர்களா? பிறருடைய உழைப்பில், தியாகத்தில் நீயும் உனது குடும்பமும் நன்மை பெறமுயல்வது சரியல்லவே! அது சரியென நினைத்து உனது போராட்டப் பங்களிப்பை வழங்காது இருந்தால் — ஒருநாள் உனது மனச்சாட்சியே உன்னைத் தண்டிக்கும், உனது பரம்பரையும் உன்னை நிந்திக்கும்.

எனவே, போராளி குடும்பத்தை அல்லது மாவீரர் குடும்பத்தைச் சாராத மற்றைய குடும்பத்தைச் சேர்ந்த, 16 வயதிற்கு மேற்பட்ட யாராவது ஒருவர் இப்போதே தன்னை இயக்கத்தில் இணைத்துக் கொள்ள வேண்டும். குடாநாடு முழுவதிலுமுள்ள அரசியற் துறையினரின் கோட்ட, வட்ட, சிற்றூர் அலுவலகங்கள் புலிகள் இயக்கத்தின் உத்தியோகபூர்வ ஆட்சேர்ப்பு நிலையங்களாக இயங்குகின்றன. அங்கேபோய் இயக்கத்தில் இணைந்துகொள்ளவும். பெரியப்பாவின் மகன் இயக்கத்தில் இருக்கின்றார். மாமாவின் மகன் இயக்கத்தில் இருக்கின்றார்

**உனது வீட்டின் பாதுகாப்பிற்காக — உனது நாட்டின் பாதுகாப்பிற்காக நீ என்ன செய்யப் போகின்றாய்? உடனடியாகவே இயக்கத்தில் இணைந்து உனது நாட்டிற்கான கடமையைச் செய்யப்போகின்றாயா? அல்லது மற்றைய இளைஞர் யுவதிகளின் உயிர்த் தியாகங்களில் நீயும் — உனது வீட்டாரும் குளிர்காயப் போகின்றீர்களா? பிறருடைய உழைப்பில், தியாகத்தில் நீயும் உனது குடும்பமும் நன்மை பெறமுயல்வது சரியல்லவே!**

அதாவது, எதிரிப் படையெடுப்பை எதிர்கொண்டு முறியடிக்கக்கூடிய உடற் தகுதியும் — மனத்துணிவும் கொண்ட 3 இலட்சம் இளைஞர்கள் குடாநாட்டில் உள்ளனர். ஆனால் இராணுவத்திலோ, ஆக முப்பதினாயிரம் மட்டும்தான். பத்துத் தமிழ் இளைஞர்களுக்கு ஒரு இராணுவம் (10:1) உண்டு.

ஒவ்வொரு பத்துத் தமிழ் இளைஞர்களும் ஒன்றாகச் சென்று, ஒரு ஆமியை உலக்கையாலும் கற்களாலும் அடித்துக் கொல்லத் தொடங்கினால், குடாநாட்டிலுள்ள முழு இராணுவமும் அழிந்துவிடும். அதைவிட்டுவிட்டு பெரியவர்கள் — பெண்கள் — குழந்தைகளுடன் சேர்ந்து, இந்த இளம் இரத்தங்களும் இடம்பெயர்ந்தோடி அகதி முகாம்களில் வாழ்வதால், என்ன பயன் ஏற்படும்?

இந்த இளம் இரத்தங்கள் அகதி முகாம்களில் வசிப்பதற்குப் பதிலாக புலிகளின் பாசறையில் வசிக்கத் தொடங்கினால், எமது மண்ணில் அகதி முகாம்களே இருக்க முடியாதே! எமது குடும்பங்கள் அவலவாழ்வு வாழவும் தேவையில்லையே!

இஸ்ரேலிய நாட்டை அமைக்கப் போராடிய யூத இனமக்கள் இப்படித்தான் போராடி — வென்றார்கள். அங்கே வயது முதிர்ந்தவர்களையும் — சிறுவர்களையும் தவிர, மிகுதி அனைத்துப்பேரும் எதிரிக்கு எதிராகப் போராடியே, தமது மண்ணையும் தம்மையும் பாதுகாத்தார்கள். யூத

என்று சாட்டுக்கள் கூறித் தப்பித்துக் கொள்வதை உனது மனச்சாட்சியே அனுமதிக்கமாட்டாது.

16 வயதுக்கு மேற்பட்ட ஒரு இளைஞன் அல்லது இளம்பெண் வீதியால் நடந்து செல்லும்போது, "எங்களது குடும்பத்தில் யாராவது ஒருவர் இயக்கத்தில் இருக்கிறாரா?" என உங்களையே கேட்டுப் பாருங்கள். அவ்விதம் இயக்கத்தில் இருந்தால், வீதியின் வலதுபுறத்தால் — தலை நிமிர்ந்து நடவுங்கள், சைக்கிளில் செல்வதானால், வீதியின் இடதுபுறத்தால் கம்பீரமாக ஓட்டிச் செல்லுங்கள். உங்களது குடும்பத்தில் எவருமே இயக்கத்தில் இல்லையென்றால் — உனது வயதும் 16 இற்கு மேல் என்றால் — உடனடியாகவே இயக்கத்தில் வந்து இணைந்துவிடு. இல்லையென்றால், திருவள்ளுவர் கூறியது போல.......சோகாப்பார் சொல்லிழுக்குப் பட்டு..." அதாவது மற்றவர்களது வசவுகளைக் கேட்டு நீயும் உனது குடும்பமும் துன்பப்படவேண்டி வரலாம்!

ஆகவே,

**வீட்டுக்கு ஒருவர் இயக்கத்தில் இருந்தால் நாட்டுக்கும் பாதுகாப்பு, வீட்டுக்கும் பெருமை!**

## யார், இடம்பெயர்ந்து...

அச்சுவேலிப் பகுதிக்கூடாக கோப்பாய் நோக்கியோ அல்லது மண்டைதீவில் இருந்து நல்லூர் — கொக்குவில் நோக்கியோ நடைபெற வாய்ப்புக்கள் உண்டு.

எமது இயக்கத்திடம் கணிசமான அளவு ஆட்பலம் உண்டு. ஆயினும் அந்த ஆட்பலம் தமிழீழம் எங்கும் பரந்து கிடக்கின்றது. மட்டக்களப்பு, திருக்கோணமலை, முல்லைத்தீவு, வன்னி, மன்னார் என்று எல்லா மாவட்டங்களிலும் சிங்களப் படைகளுக்கு எதிராகப் புலிவீரர்கள் போர்புரிந்துகொண்டு இருக்கின்றார்கள். அதேவேளை, கணிசமான போராளிகள் நிருவாக வேலைகளிலும் ஈடுபட்டபடி உள்ளனர். இதனால், யாழ். குடாநாட்டில் ஒரு குறித்த தொகையுடைய போராளிகளே முழுநேரமாகக் களத்தில் நிற்கின்றனர். இந்தச் சிறுதொகையை வைத்துக்கொண்டு சிங்களப் படைக — வின் பாரிய படையெடுப்பைத் தடுக்க முடியாது.

இதேவேளை, குடாநாட்டில் போராடக்கூடிய வலுவுடன் இருக்கும் இலட்சக்கணக்கான இளைஞர்கள் நாட்டுப்பற்று இல்லாமலும் — பயத்தாலும் எதிரியின் படையெடுப்பைத் தடுக்க முன்வராது வீணே இருக்கின்றனர். இவர்கள் இயக்கத்தில் வந்து இணைவார்களானால், குடாநாட்டிலுள்ள சிங்கள இராணுவத்தினர் ஓட்டமும் — நீச்சலுமாகத் தத்தம் ஊர்போய்ச் சேர்ந்திடுவர். அப்படி நடக்காமல்விட்டு, அதற்கு மாறாக, எமது ஊர்களுக்குள் இராணுவம் புகுந்தால், முதலில் அவர்களின் கொலைவெறிக்கு உள்ளாவது எமது இளைஞர்களும் — இளம் பெண்களும்தான் என்பதை எவரும் சொல்லத் தேவையில்லை.

எனவே, எதிரியின் படையெடுப்பைத் தடுக்கவும் — எமது ஊரவர்களும் எமது குடும்பத்தினரும் இடம்பெயர்ந்து ஓடி அவல வாழ்வு வாழ்வதைத் தடுக்கவும் இயக்கத்திற்கு ஆட்பலம் தேவை. 16 வயதிற்கு மேற்பட்ட இளைஞர்கள் உடனடியாகவே அரசியல்துறையினரின் கோட்ட, வட்ட, சிற்றூர் செயலகங்களிற்கு வந்து இயக்கத்தில் இணைந்து கொள்ளும்படி, உரிமையுடன் அழைக்கின்றோம்!

**எமது மக்கள் அகதிகளாவதா? அல்லது எதிரியை அகதியாக்கி ஓடவைப்பதா?**

www.tamilarangam.net








வாசலில் நிற்கிறான். இவனது முதுகெலும்பை ஒடித்து மண்ணில் இருந்து அகற்ற வேண்டும். தியாகி லெப். கேணல் திலீபனை நினைவுகூரும் இப்புனிதமான நாட்களில் அவனது அபிலாசைகளைப் புரிந்து கொண்டு செயற்படுவோம். நாளை முதல் எமது கரங்களின் மீது எமது தாயக அறைகூவலை ஏற்றுக் கொள்வோம். தியாகி திலீபனின் உறுதி எமது நெஞ்சங்களில் ஊடுருவட்டும்.

# தியாகி லெப். கேணல் திலீபனின் ஆத்ம பலம்

"தியாகி லெப் கேணல் திலீபனின் ஆத்மபலம், மக்களின் எழுச்சியை அடிநாதமாகக் கொண்டிருந்தது. எமது சுதந்திரத்தையும் கௌரவத்தையும் உறுதி செய்யவல்லது மக்களது புரட்சிகரமான எழுச்சி"

இவ்வாறு தியாகி லெப். கேணல் திலீபன் நினைவு குறித்து குரல் கொடுத்து யாழ் மாவட்ட அரசியற் துறையினர் 14 – 09 – 95 இல் வெளியிட்ட அறிக்கையிற் தெரிவித்துள்ளனர். அதன் விவரம் பின்வருமாறு –

தமிழீழத் தேசிய ஆன்ம தாகமாம் எமது தேச விடுதலையின் பெரிய பயணத்தில், ஒரு முக்கிய கட்டத்தில் சிறீலங்கா அரசின் இன அழிப்புச் செயற்பாடுகளைப் பலவீனப்படுத்தும். அரசியல், இராசதந்திர, இராணுவ ரீதியாகச் சிறீலங்கா அரசை முடக்கிவிடும். பேரினவாதக் கோட்பாட்டை முன் நிறுத்தும். சிறீலங்கா மேலாதிக்கவாதிகளின் ஓங்கிய கரங்களை தறித்து விடும். உலகத்தின் பார்வையை எம்மீது திருப்பும். தொடரும் போரானது எமது விடுதலைப் போராட்டத்தின் புதிய பரி–மாணத்தை அனைத்துலகத்திற்கும் தெளிவாக்குகின்றது. தமிழர் எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் ஒரு புதிய நம்பிக்கையை, ஒரு புதிய ஊக்கத்தைக் கண்டு வருகின்றோம். தமிழனுக்கென ஒரு தேசம் உருவாகுவதை எந்த ஆதிக்க சக்தியாலும் தடுத்து விட முடியாது என்பது

இப்புனிதனை நினைவு கூரும் அடையாள உண்ணா விரதத்தில் மனதை ஒருமிதப்படுத்தி வெற்றியை இலக்காகக் கொண்டு கலந்து கொள்வோம். ஒவ்வொரு அலுவலகத்திலும், வணிகநிலையங்களிலும், சாலை சந்திகளிலும், மக்கள் கூடும் மன்றங்களிலும், வீடுவாசல்களிலும் தியாகி திலீபனின் உருவப்படத்திற்குத் தினமும் மலர் அஞ்சலி செலுத்துவோம். ஒன்று கூடிச் சமுதாய நலன் கருதிச் சிரமதானங்கள் செய்வோம். பேரினவாதம் விளைத்திடும் இன்னல்களையும், அவலங்களையும் மீறிச் சோர்வடையாது தமிழீழத்தவன் நிமிர்ந்து ஆற்றலுடன் நிற்கின்றான் என அகில உலகமும் வியந்து நிற்கின்ற வகையில் தியாகி திலீபனின் நினைவு



**நான் என்னுயிரிலும் மேலாக நேசிக்கும் மக்களே! உங்களிடம் ஒரு பெரும் பொறுப்பை விட்டுச் செல்கிறேன். நீங்கள் அனைவரும் பரிபூரணமாக கிளர்ந்தெள வேண்டும். இங்கு ஒரு மாபெரும் மக்கள் புரட்சி வெடிக்கும்.**



மக்களைத் தட்டி எழுப்பிய லெப். கேணல் திலீபனின் நினைவுநாள் நிகழ்வுகள் நாளை 15 – 09 – 95 ஆரம்பமாகின்றன. தமிழ் மக்களது மிகப் பெரிதளவிலான எழுச்சியை வேண்டி நின்ற வரலாற்றுக்கட்டத்தில் நிற்கின்றோம். மக்கள் எழுச்சி அவர்களது உணர்வு பூர்வமான உளமார்ந்த பங்குக்கு ஏற்ப தேச விடுதலைப் பாதையைக் குறித்து விடுதலையை அங்கீகரிக்க வைக்கும். மக்களின் எழுச்சியை ஒருமுகப்படுத்துவதன் அவசியத்தை, அதன் விளைவை இனங்கண்டு கொண்டவன் திலீபன். மக்களின் எழுச்சியானது, பேரினவாத உண்மையாகியுள்ளது. எமது தேசியத்தலைவரின் உறுதியான வழிகாட்டல், அனைத்துத் தமிழரையும் ஒன்றிணைத்துத் தூண்டி எழ வைக்கின்றது. லெப். கேணல் திலீபனின் ஆன்ம பலம் மக்களின் எழுச்சியை அடி நாதம் ஆகக் கொண்டிருந்தது. எமது சுதந்திரத்தையும், கௌரவத்தையும் உறுதி செய்யவல்லது மக்கள் புரட்சி. இனஅழிப்பையே தனது ஒரே நோக்கமாகக் கொண்டு வேடமாடிய பேரினவாத ஆதிக்க சக்திகளை வரலாற்றின் பக்கங்கள் எமக்கு இனங்காட்டி வைக்கின்றன. கோரப்பற்களுடன் எம்மை அழிக்க வரும் எதிரி எமது

நிகழ்வுகளில் பங்கேற்போம். நாம் விழிப்புடன் இல்லாவிட்டால் எமது எதிர்காலம் இருண்டுவிடும். எதிரிக்கு வாய்ப்பாகி விடும். தியாகி திலீபனின் நினைவுகள் எமது நெஞ்சத்தின் கனலை எரிமலையாக்கிப் பொங்கி வரச் செய்யட்டும். தியாகி திலீபனின் உன்னத அர்ப்பணிப்பு எமது தேச விடுதலைப் போராட்டத்தில் ஒளியாகி நிற்கின்றது. அவனது அபிலாசைகளை நிறைவு செய்ய, ஒருமைப்பட்டு இப்புனிதமான நாட்களில் உறுதி எடுத்து முன்னேறுவோம்.

# இந்திய வீடுதலைப் போர் நிதி.

## நேதாஜியிடம் வாரி வழங்கிய கிழக்காசியா வாழ் இந்தியர்.

கிழக்காசியாவில் இந்தியாவின் தற்காலிக அரசைப் பிர–கடனப்படுத்தியதன் பின், நேதாஜி அவர்கள் பல்வேறு இடங்களுக்கும் சென்று இந்திய மக்களிடம் இயக்கத்திற்கான பணத்தைப் பற்றி உரையாற்றினார். 1943 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24 ஆம் நாள் சிங்கப்பூரில் இந்திய மக்கள் முன் நேதாஜி அவர்கள் உரையாற்றுகையில் "தாயகத்தை மீட்கும் போர்நிதிக்கு, குறிப்பாக ஏழைமக்களும் நடுத்தரமக்களும் செய்துவரும் உதவி மிகவும் உற்சாகமளிப்பதாக இருக்கின்றது. ஜான்சியைச் சேர்ந்த ஒரு சலவைத்தொழிலாளி தான் கஸ்டப்பட்டு உழைத்துச் சேகரித்து வைத்திருந்த தொகையை அப்படியே போர்நிதிக்கு அர்ப்பணம் செய்ததுடன், போராட்டம் முடியும் வரை நமது வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் உடைகளைச் சலவை செய்து கொடுக்க முன்வந்துள்ளார். ஓர் ஏழை நாவிதர் பிற்காலத்துக்கெனச் சேமித்து வைத்திருந்த முழுப்பணத்தையும் (300 ரூபா) அப்படியே போர்நிதிக்குக் கொடுத்து விட்டார். பலர் தங்களுக்குச் சொந்தமான சொத்துக்களையும் மாடுகளையும் சுதந்திரப்போராட்டத்துக்குக் கொடுத்துவிட்டு, எமது தேசிய இராணுவத்தில் தங்களை இணைத்துக் கொண்டுள்ளனர்.

ஏழைகள் தங்களுக்குச் சொந்தமான சொத்துக்களையும், தங்களையும்கூடத் தாய் நாட்டின் சுதந்திரத்துக்காகத் தியாகம் செய்துவரும் இந்நேரத்தில் செல்வந்தர்கள், வசதி படைத்தவர்கள் தங்கள் சொத்தில் 5 விகிதம் கொடுப்பதா 10 விகிதம் கொடுப்பதா என்பதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களது இந்தப் போக்கை மாற்றிக்கொள்ளவேண்டும் என நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஏழைகள் தங்களது உடமைகளையும் உயிரையும் கூட நாட்டுக்காகத்தியாகம் செய்ய உற்சாகத்துடன் முன்வந்து கொண்டிருக்கையில் செல்வந்தர்கள், வசதி படைத்தவர்கள் அவ்விதம் கணக்குப் பார்த்துக் கொண்டிருப்பது சரியன்று. எனவே செல்வந்தர்கள், வசதி படைத்தவர்கள் தங்கள் மனப்போக்கை மாற்றிக்கொள்ளவேண்டும். போர் முனைக்குச் செல்லும் தொண்டர், தாய் நாட்டின் விடுதலைக்காக 5 சதவிகித இரத்தம் சிந்த வேண்டுமா என்று என்றுமே கேட்பதில்லை. தமது இரத்தம் முழுவதையும் சிந்தவே அவர்கள் போர்முனைக்குச் செல்லுகின்றனர். கோடிக்கணக்கான டாலர் தொகையைக் காட்டிலும் அத்தகைய தொண்டர் ஒருவரின் உயிர்தான் விலை மதிக்க முடியாததாகும். பணம் படைத்தவர்கள் தாய் நாட்டுக்காகத் தமது உயிரைத்தியாகம் செய்ய முன்வராவிட்டாலும், தங்கள் உடைமைகளையாவது நமது புனிதமான விடுதலை இயக்கத்துக்குக் கொடுத்துதவவேண்டாமா? இதுவரையில் நமது இயக்கத்துக்கு திருப்திகரமான முறையில் உதவி செய்யாத ஒரு சில செல்வந்தர்கள், தங்கள் நிலையை இனிமேலாவது மாற்றிக்கொள்வார்கள் என நம்புகின்றேன்,

தொடர்ச்சி 18 ஆம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எழுச்சி மாநாடு



எங்கும் இதுபற்றியே பேச்சு. கனடாவில் 25ஆயிரம், சுவிசில் 12ஆயிரம், இலண்டனில் எவ்வளவு மக்கள் கூடப்போகிறார்கள்? குறுகிய காலத்தீர்மானமாய் இருந்தபோதும் எழுச்சிமாநாடு பற்றிய அறிவித்தல் வந்ததுமே இலண்டன் களைகட்டத்தொடங்கிவிட்டது. விதவிதமான துண்டுப் பிரசுரங்கள், விசேட வானொலி அறிவித்தல்கள், தொலைபேசிச் செய்திச்சேவையின் அறிவிப்புகள் மக்களிடையே ஒருவிதமான எதிர்பார்ப்புடன் கூடிய பரபரப்பை ஏற்படுத்திவிட்டது. இலண்டனின் எல்லாப்பகுதிகளிலும் மாநாட்டிற்கான ஒழுங்குகளை முன்னின்று விளம்பரம், வாகனப்போக்குவரத்து ஒழுங்குகள், மக்களிடையேயான பிரச்சாரங்கள், ஒருங்கிணைப்புகள், பல்வேறு சங்கங்களையும் ஒரு குடைக்குக் கீழே கொண்டுவருவதற்கான முயற்சிகள் என்று பலவேறாக எல்லா இளைஞர்களும் முன்நின்றார்கள். மாநாடு நெருங்கும் நாட்களுக்கு முதலே ஒரு புயல் ஒன்று மையம் கொண்டது போன்ற ஒரு உணர்வு தமிழ் மக்களிடையே. இதற்கிடையே களத்திலிருந்து நமது வீர மறவர்களின் தியாகச் செய்திகளும், தீரச்செய்திகளும் நாமும் ஏதாவது செய்ய வேண்டுமே என்ற உத்வேகத்தை ஒவ்வொருவர் மனத்திலும் ஒரு உந்து விசையைக் கிளப்பிக்கொண்டிருந்தது. ஆம் உலகே! புலிகள் ஒரு வெறும் பயங்கரவாத சிறு குழுவல்ல. அது ஒரு மாபெரும் மக்கள் சக்தி. ஒரு விடுதலைக்காக தேசங்கள் கடந்து தனது மக்களுக்கான நேசத்தைப் பிரதிபலிக்கின்ற ஒரு விடுதலை இயக்கம். நீ நினைப்பதுபோல மக்களையும் புலிகளையும் பிரித்து புலிகளை இலகுவில் அழித்துவிடமுடியாது. வேண்டு மானால் நாம் புலம் பெயர்ந்தவர்களாக இருக்கலாம். ஆனால் புலிகளைப் பிரிந்தவர்களும் அல்ல. இதை தெளிவாக, ஆணித்தரமாக, உறுதியாக இவ்வுலகத்திற்குத் தெரிவிக்கத் தமிழினம் உலகெங்கும் கூடியதுபோல் உலகத் தலைநகராம் இலண்டனிலும் பெருமளவில்கூடத் தீர்மானித்து விட்டது. இதுவரையில் தமிழினம் இல்ண்டன் அலெக்ஸ்ஸாண்றா பலஸ் போன்ற பாரிய இசைக் குழுவினரும் பெரியள விலான இசை, நாடக வல்லுனர்களும் கூடுகின்ற பாரிய மண்டபத்தில் கூடியதில்லை. இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட இருக்கைகளைக் கொண்ட மண்டபம் என்பதோடு மட்டுமன்றி தீப்பாதுகாப்பை முன்னிட்டு இருக்கைகள் இடையிடையே பாரிய வழிப்பாதைகளும், இடைவெளிகளும் மண்டபத்தைச் சுற்றிலும் அமைந்த மாடங்களும் கொண்ட பிரமாண்டமான மண்டபத்தில் இவ்வெழுச்சி மாநாடு அமையப்போகிறதென்ற செய்தியே மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தி விட்டது. எத்தனை பேரூந்துகள், எங்கிருந்து புறப்படுகிறது என்றெல்லாம் மக்கள் பேசத்தொடங்கினார்கள்.

அன்று, 09. 09. 1995 காலை 11 மணியிலிருந்தே நாலா புறமுமிருந்து மண்டபம் நோக்கி பேரூந்துகள் நகரத் தொடங்கிவிட்டன. புகைவண்டிமூலமும், பேரூந்துகள் மூலமும் தனியார் சங்கங்களினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த தனியார் வண்டிகள் மூலமும் சனத்திரள் மண்டபம் நோக்கி வரத்தொடங்கியது. மண்டப வாசலில் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், புலிகள் கலைபண்பாட்டு பிரச்சாரப் பிரிவினர் ஆகியோரின் பிரச்சார விளம்பரப் பலகைகளுடன் கூடிய பந்தல்கள் அமைக்கப்பட்டிருந்தன. வருகின்ற ஒவ்வொருவரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் பிரதிநிதிகட்கும், பிரித்தானியப் பிரதமர் ஜோன் மேஜருக்கும் அனுப்புவதற்காக தயாரிக்கப்பட்ட மகஜரில் கையொப்பம் இடுவதற்கு நீண்ட வரிசையில் நின்று கையொப்பம் இட்டுவிட்டு மண்டபத்தினுள் சாரிசாரியாய் உள்நுழைந்தனர்.

மாநாட்டு மண்டபம் நிறைந்து விட்டது. மண்டபத்தின் பின்னாலும் மக்கள் நின்றுகொண்டிருக்கின்றார்கள். சபை யின் ஒரு புறத்தில் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு, மலர்க ளால் ஆன தமிழீழ உருவப்படம் நிறுத்தப்பட்டுள்ளது. எதிர்ப்புறத்தில் தேசியக் கொடிதாங்கிய கொடிக்கம்பம். சரியாக 2. 12 மணிக்கு மங்கள இசையுடன் மண்டபம் களைகட்ட மாநாடு ஆரம்பம். வெகுகாலத்தின் பின்பு கேட்ட அதே நாதஸ்வர இசை...... கணீர் என்று மண்டபத்துள் பரவுகிறது. தும்.... தும்... என்று புலிகளின் வீரம் போல தவிலோசை மக்களின் மனதில் அறைகிறது. இரத்தம் குபீர் என்று நாடி, நாளங்களில் பாய்கிறது. கண்கள் கொப்பளிக்கின்றன. ஆ...... எனது மண்ணே! உனைநான் பிரிந்தேன். பிரிந்து வெகுதூரம் வந்துவிட்டேன். அங்கே உன்னைக் காப்பதில் ஆயிரமாயிரம் இளைஞர்கள் வேள்வித்தீயில்.........

"மனசுலோல... நீ....." நாதஸ்வரம் அப்படியே எம்மை தாயகம் நோக்கி இழுக்கிறது. மக்கள் நிமிர்ந்து உட்கார்கிறார்கள். தொடர்ந்து "தென்னங்கீற்றில் தென்றல் வந்து மோதும் — எம் தேசமெங்கும் குண்டு வந்து வீழு"மெனத் தொடர்ந்து விடுதலைப் பாடல்கள்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இசைக்கப்பட்டன. 2. 30 மணிக்கு நாதஸ்வர இசை முடிவுற தேசியக்கொடி ஏற்றத்துடன் விழா ஆரம்பமாகிறது. எங்கள் தேசியக் கொடி பாடல் பின்னணியில் ஒலிக்க மாவீரன் **மேஜர் நாதனின்** வீரத்தாய் திருமதி **பொன்னம்மா சிற்றம்பலம்** அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.



தொடர்ந்து தம்பியர் **உருத்திராபதி சுதாகர் ( கப்டன் வாசு) உருத்திராபதி சிறீதர் (மேஜர் ஜேம்ஸ்)** இருவரையும் **உருத்திராபதி உதயலக்சுமி ( கப்டன் சுந்தரி)** ஆகிய தங்கையொருத்தியையும் போராட்டத்தில் தியாகித்ததோடு மட்டுமன்றி தானும் போராட்டத்தில் முன் நின்றவருமான **உருத்திராபதி சேகர்** அவர்கள் மங்கல விளக்கை ஏற்றிவைக்க மாநாட்டு உரைகள் ஆரம்பமாகின. பேமிங்கம் வாழ் வைத்திய கலாநிதி சச்சி அவர்கள் தனது உரையில் தமிழர் மீதான பொருளாதாரத் தடையில் குறிப்பாக மருந்து வகை அத்தியாவசிய தேவைகள் மீதான தடைகளே சிறீலங்காவின் பாரபட்ச நிர்வாகத்திற்கு எடுத்துக்காட்டு என்றும் சந்திரிகா "இந்தியா ருடே" பேட்டியின்போது தானே தமிழர்களின் தலைவி என்பதன் மூலம் தலைவர் பிரபாகரன் தலைவன் என்பதை மறுப்பதனை நான் ஏற்றுக்கொள்ள முடியாது.




அரசியல்அறிஞரும் மூதறிஞருமான சுயாட்சி நவரத்தினம் ஐயா அவர்கள் தனது புத்தகத் தில் திரு. பிரபா—கரன் அவர்களே உலகத்தமிழினத்தின் ஒரே தலைவன் என குறிப்பிட்டுள்ளதை கோடிகாட்டிப் பேசினார்.

தொடர்ந்து ***சக்தி கொண்ட தலைவனுடன் எழுகிறோம்*** என்ற புலவர் சிவநாதன் அவர்களுடைய பாடலை தம்பி பிரதீபராஜ் அழகே பாடினான். கம்பீரமான குரலில் பாடல்பாடப்பட்ட வேளை பின்னே அகலத் திரையில் தலைவரின் பிரதிமைப்படங்கள் செவ்வனே ஒளி பரப்பப்பட்டுக்கொண்டிருந்தன. அதனைத் தொடர்ந்து தமிழீழவிடுதலைப்புலிகளே கட்டியெழுப்பியது இந்தப் போராட்டம். மேற்கு நாடுகளில் வாழும் நாம் ஈழத்தமிழர்களின் தூதுவர்களே என கணக்காளர் திரு. கரன் அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டார்கள்.



இஸ்ரேல் நாடு அமையும் போது உலகெலாம் வாழும் யூத மக்களை அப்போதைய பிரதமர், அமைந்த இஸ்ரேல் நாட்டில் வந்து குடியேறுமாறு அறைகூவல் விடுத்தார். அவ்வாறு எமது தலைவரும் அறைகூவல் விடுக்கும் நாள் வெகுதூரத்தில் இல்லை. இன்று தமிழீழம் உருவாகி விட்டது அதைக்கட்டியெழுப்புவதே எமது பணி. அங்கே நீதி, நிர்வாகம், காவல் என்று ஒரு அரசாங்கமே உண்டு. எமக்கென்றோர் தலைவனுண்டு. அது தலைவர் பிரபாகரன் அவர்களே என கலாநிதி சத்தியமூர்த்தி அவர்கள் தனதுரையில் குறிப்பிட்டார்கள்.



திரு. மகரசிங்கம் அவர்கள் தமதுரையில் தலைவர் பிரபாகரன் அவர்களை விட இனியும் வேறொருவர் எமது தமிழினத்துக்கு தலைவனாக முடியாது என்றதோடு இத் தலைமை தமிழீழத்தையும் தாண்டிச்செல்லும் இது தவிர்க்க முடியாதது. என்றதோடு தமிழீழத்தையும் எமது தலைவனையும் வாழ்க என வாழ்த்தி உரையை முடித்தார்.




வைத்திய கலாநிதி பசுபதிராஜா கடந்த காலங்களில் பயங்கரவாதியாகச் சித்தரிக்கப்பட்டிருந்த பாலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவர் யசீர் அரபாத்தும் அவரது இயக்கத்தினரும் ஓர் இரவுக்குள்ளேயே கதாநாயகர்களாக மேற்குலகினால் சித்தரிக்கப்பட்டதையும், அவர்களுடன் கைகோர்த்து நின்றதனையும் சரித்திரம் நன்கறியும். கடந்த காலத்தில் "ரைம்ஸ்" பத்திரைகை குறிப்பிட்டதுபோன்று பிரபாகரன் அவர்களே பேச்சுவார்த்தையைக் குளப்பினாரா? நாம் பேச்சுவார்த்தையிலிருந்து வெளியேறக்காரணமென்ன? என்பதனை மேற்குலகு புரிந்து கொள்ள வேண்டும். நாம் பெரியதொரு போராட்டத்தைக் கையிலெடுத்திருக்கின்றோம். நாம் உரிமையுடனேயே பிறந்தவர்கள். எமது மாவீரர்களின் இலட்சியங்களை காலிற் போட்டு மிதித்துவிட முடியாது. விடுதலைப்புலிகளே எமது பிரதிநிதிகள் என ஆணித்தரமாக எடுத்துரைத்தார்.



அடுத்து வைத்திய கலாநிதி அம்பிகாபதி அவர்கள் பேசுகையில் தமிழீழ தமிழ் மக்கள் 49ஆம் ஆண்டிலிருந்து மருத்துவ ரீதியாகவும் பல தடைகளையும், சோதனைகளையும் தாண்டி வந்துள்ளனர் என்றும் தற்போது பெரும் சோதனைகளையும அனுபவிக்கின்றனர் என்றும் அத்தியாவசிய மருந்துகள், தடையூசிகள், ஒட்சிசன் போன்றவைகள் இன்றி தவிக்கின்றனர். அதைவிட போக்குவரத்து வசதியின்மையும் மருந்துகளுக்கான தட்டுப்பாடுகளும் மக்களை துன்புறுத்துகின்றன. புலம் பெயர்ந்த வைத்தியர்களான நாங்கள் இவற்றை மிகவும் கவனத்திலெடுத்து ஆவன செய்யவேண்டும் என்றார்.



தொடர்ச்சி மறுபக்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஏழுச்சி மாநாடு..



அடுத்து புலவர் சிவநாதன் அவர்களின் கவிதை இடம்பெற்றது. கவிதை அவரது வழமையான பாணியில் நகைச்சுவை கலந்து சிரிக்கவைத்ததோடுமட்டுமன்றி சிந்திக்கவும் வைத்தது. "கொதிக்கும் தாருக்குள் குளித்த தமிழனின் விழிக்குள் இருந்து எழுந்தான் எங்கள் புலிக்குத் தலைவன் பிரபாகரன்" என்ற வைர வரிகளுக்கு சபை கைதட்டி ஆர்ப்பரித்து ஆரவாரித்தது. "சிங்கள இராணுவம் மிதித்துப்போன புல்லின் பாடலே தமிழீழத்தாயகம்"....என்றும் "காப்புக் கையொன்று வேப்பிலையடிக்க கூப்பிய கையுடன் கண்டதையெல்லாம் காப்பியடித்த லண்டன் 'ரைம்ஸ்" என்றும், "மூடிக்கிடந்த பேனாவை மூடியையுடைத்து முகம் காட்டவைத்தீர்".. என்றும் , வீச்வோடு கவிதையில் முழக்கம் செய்தார்.

"இலங்கை என்றொரு நாட்டில் நாம் வாழ முடியாது எனும்போது நாம் அங்கே தோன்றிவிட்ட ஈழநாட்டில் வாழும் தகைமையுடையோம் உலகம் மிருகத்தனமான அடக்குமுறைக்கும் மிருகத்தனத்துக்குமிடையே எமது போராட்டத்தை அங்கீகரிக்கவேண்டும்" எனத் திரு போதலிங்கம் அவர்களும் "ஈழம் கோரப்படவில்லை அது அங்கேயே உண்டு நீதியுடன் நியாயத்துடன் அங்கே இயக்கத்தில் உள்ள ஒரு நாடு என திரு சிவவீரசிங்கம் அவர்களும்" குறிப்பிட்டார்கள்.



அவுஸ்திரேலியாவிலிருந்து வருகைதந்திருந்த வணக்கத்துக்குரிய பிதா வோல்டன் அவர்கள் பேசுகையில் "நான் இவ்விடம் வரும் போது இவ்வளவு சனத்திரளை எதிர்பார்க்க வில்லை இச் சனத்திரளைப் பார்க்கும் போது எவ்வளவு தூரத்துக்கு மக்கள் புலிகளை நேசிக்கிறார்கள் என்பது தெளிவு நீங்கள் ஒன்றை நன்கு புரிந்து கொள்ள வேண்டும் சந்திரிகா அவர்கள் தங்கத் தட்டிலே உங்கள் உரிமைகளை வைத்து நீட்டுவார் என எதிர்பார்த்தீர்களானால் அது தற்கொலைக்கு ஒப்பானதாகும். நீங்கள் உங்கள் ஒப்பற்ற தலைவன் பிரபாகரன் பின்னால் அணிதிரளவேண்டும். நான் எத்தனையே போராட்டங்களை பார்த்திருக்கின்றேன் எத்தனையோ போராட்டங்களில் சமாதானத்துக்கான முயற்சிகளில் பங்குகொண்டுள்ளேன். தங்கள் தலைவன் போல திறமைசாலியைக் கண்டதில்லை. அது உங்கள் பாக்கியம். அவன் பின்னால் அணிதிரளுங்கள்" என்றார்.



தொடர்ந்து முன்னைநாள் ரூபவாகினித் தலைவர் திரு வசந்தராஜா அவர்கள் உரையாற்றுகையில் .... இவ்விடம் திரண்டிருக்கும் மாபெரும் மக்கள் கூட்டத்தைக் கண்டபின்பும் இங்கே யாராவது சந்திரிகாவின் ஒற்றர் படையைச்சேர்ந்தவர்கள் இருப்பின் புலிகளின் மக்கள் ஆதரவைத் தப்புக்கணக்குப் போட்டுள்ளீர்கள். அது மிக மோசமாகத் தோல்வியடைந்து விட்டது என்பதை உங்கள் சந்திரிகாவுக்கு எடுத்துச் சொல்லுங்கள்.

முன்னோக்கிய பாய்ச்சல் மக்களை புலிகளிடமிருந்து விடுவிக்கவே என்ற மாயப் பிரச்சாரம் கலைந்து விட்டது. என்றார்

பின்பு விடுதலைப்புலிகளின் பிரித்தானியக் கிளையின் சட்ட



ஆலோசகர் திரு சத்தியேந்திரா அவர்கள் இன்று ஒரு மாவீரன் தாய் ஒருவர் கொடியேற்றினார். மாவீரர்களின் சகோதரர் தீபமேற்றினார் நாம் இழப்புகளிலேயே எழுகிறோம். தலைவர் பிரபாகரன் அவர்கள் சொன்னார்கள் என்னுடன் கூடவிருந்த போராளிகள் தளபதிகள் மாவீரராகும் போது எனது நெஞ்சு வெடிக்கும். ஆனால் சோகம் என்னை உருக்குலைப்பதில்லை அது இன்னமும் எனக்கு உரம் சேர்க்கிறது. அதேபோல நாம் இழப்புக்களுக்கு மத்தியிலும் நாம் எழுச்சியுடன் போராட வேண்டும். புலிகளுக்கெதிரான போராட்டம் எனக்கூறி சந்திரிகா அரசு தமிழீழத்தில் மக்களுக்கெதிராகவே தொழிற்படுகிறது. நாங்கள் இங்கே உயிரைக் கொடுக்கவில்லை குரலாவது கொடுக்கலாம், கைகொடுக்கலாம் போராட்டத்திற்கு ஆதரவு கொடுக்கலாம். அடக்கப்பட்ட மக்களுக்கு ஆயுதம் ஏந்திப்போராட சட்டரீதியான உரிமையுண்டு. அப்படிப் போராட தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் விடுதலைப் புலிகளுக்கு மட்டுமேயுண்டு. ஏனெனில் அந்தப் போராட்டம் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களால் செவ்வனே வழிநடத்தப்படுகிறது" என்றார்

சுமார் 6.00 மணியளவில் தேசியக் கொடியிறக்கலுடன் மாநாடு இனிதே நிறைவுற்றது. இனியும் தாமதிக்கக் கூடாது இனியாவது போராட்டத்தில் இணையவேண்டும் என்ற உணர்வு மக்களின் பேச்சுக்களிலும் முகத்திலும் பிரதிபலித்தது. அது அன்றைய விழாவின் போது விற்பனையான ஒலிநாடாக்கள் ஒளிநாடாக்கள் தமிழீழ போராட்ட பிரசுரப் புத்தகங்கள் தமிழீழ அபிவிருத்தி நிதிச்சீட்டுகள் போன்றவற்றின் விற்பனையிலும் தெரிந்தது.

## பிரபாகரனின் காலமிது

வளமார் தலைவன் பிரபாகரனென்
றேழேழுலகும் அறிந்திடவே
உளமோடு இணையாய் இருகையுயர்த்தி
உலகோர் அறியக் கூவிட்டோம்.

வளமார் பூமி வாகாய்த் தமிழ் மண்
வகையாய் நெறி செய் தவர் மேலும்
களமோடாடிக் கயவர் கொடுமை
கழித்தார் அவர் எம் நாவிட்டோம்

உயிராயுதமாய் உலகோரதிரத்
தனையீன் றகை செய் தவர் நாளும்
பயிராய்ப் போனார் பலராய்க் கூடிப்
பதறிப் பதறிப் பாவிட்டோம்

வருவோர் போவோர் வகையாய் இன்றி
வருவீர்! வகை செய் வேளை யிது
வருமோர் காலம் வருவீர்! எழுவீர்!!
பிரபா கரனின் கால மிது.

நாயன்மார்கட்டு சிவகுமாரன்

# சுவிசில் கருத்தரங்கு

சுவிஸ் நாட்டின் சூரிச் நகரில் VOLKHAMS மண்டபத்தில், 11 – 09 – 1995 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியிலிருந்து பிற்பகல் 4 மணி வரை தமிழர் புனர்வாழ்வுக்கழக சுவிஸ் கிளையும், Centrale Santtaire Suisse என்ற அரச சார்பற்ற நிறுவனமும் இணைந்து கருத்தரங்கு ஒன்றினை நடாத்தியிருந்தன.

இக்கருத்தரங்கில் BSA, கரித்தாஸ் லுசேர்ஸ், குவாக்கர் பீஸ், பொட்ஸ், FLUCHISEITEN, இன்ர எய்ட் சுவைற்ஸ் எக்கோ, சொலிடார் என்ற அரச சார்பற்ற அமைப்புக்களும் தமிழர் புனர்வாழ்வுக்கழக அனைத்துலக அமைப்பாளர்களும் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கினை வரவேற்புரையுடன், தமிழர் புனர் வாழ்வுக் கழக சுவிஸ்கிளை அமைப்பாளர் சண்முகதாசன் ஆரம்பித்து வைக்க, தொடர்ந்து அனைத்துலக தமிழர் புனர் வாழ்வுக் கழக ஒருங்கிணைப்பாளர் கலாநிதி மகேஸ்வரன், தமிழீழத்திலே தமிழீழ மக்களின் சமகாலப்பிரச்சனைகள் குறித்தும் அதற்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தளத்திலே ஆற்றிவரும் பணிகள் குறித்தும், அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு அல்லல்படும் தமிழீழ மக்களுக்கு எவ்வாறு அமையலாம் என்பது குறித்தும் அறிமுக உரையினை நிகழ்த்தியிருந்தார். தொடர்ந்து உரையாற்றிய பத்திரிகையாளர் திரு எரிக் சிமித், சிறீலங்கா அரசினால் படுமோசமான முறையில் துன்பங்களை அனுபவித்து வரும் தமிழ் மக்களுக்கு இங்குள்ள அரசசார்பற்ற நிறுவனங்களால் நிவாரண உதவிகள் அளிக்கப்படும் பட்சத்தில் அவ்வுதவிகள் வடக்கு – கிழக்கு பிரதேசங்களிலே வாழும் மக்களுக்கு உதவிகளை வழங்கி வரும் அமைப்புக்கள் மூலமே வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

தொடர்ந்து நடைபெற்ற கருத்தரங்கில் இரு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1)முதலாவது தீர்மானமாக அல்லல்படும் தமிழ் மக்களுக்கான உதவிகளை வழங்குவதற்கு மேலும் வலிமை வாய்ந்த அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியைப் பெறவும், அவ் உதவி எவ்வாறு தமிழ் மக்களுக்கு வழங்கப்படலாம் என்பது குறித்து, தமிழர் புனர்வாழ்வுக் கழக சுவிஸ் கிளையும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கியதும் செய்தியாளர் எரிக் சிமித் அங்கம் வகிப்பதுமான வேலைக்குழு ஒன்றும் சேர்ந்து செயல்படுவதற்கான செயல்முறை பற்றியும் தீர்மானிக்கப்பட்டது.

2)இரண்டாவது வடக்கு – கிழக்கு மாகாணங்களிலும், தென்னிலங்கையிலும் தமிழ் மக்களின் உயிருக்கும், உடமைகளுக்கும் உத்தரவாதமில்லாத இச்சூழ் நிலையில் சுவிஸ் அரசினால் இலங்கைக்கு தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்ற சுவிஸ் அரசினைக் கோரும் மனு அனுப்பப்படவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மனிதமுகப் போரின் யதார்த்தம்

இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியிலல்லாது, அரசியல் வழிமுறையிலேயே தீர்வுகாணப்பட வேண்டும், அதற்கு அரசியற் தீர்வுத் திட்டம் தன்னிடம் உண்டு, பின்னர் அது மக்களுக்கு அறிவிக்கப்படும் என்றெல்லாம், 1994 ஆவணிப் பொதுத்தேர்தலுக்கான பரப்புரையின்போது சந்திரிகா அம்மையார் தெரிவித்தார்.

தன்னை ஒரு "சமாதானப் புறா" வாகவே உலகிற்குக் காட்டினார்.

ஆனால், ஒரு வருடம் நிறைவுறப்போகும் இத்தருணம்வரை, அந்த "அரசியற் தீர்வுத்திட்டம்" பூரணமாக வெளியிடப்படவில்லை. அதுமட்டுமல்லாது, "சமாதானப்புறா" வேடத்தைக் கலைத்து, "இரத்தவெறிக் கழுகு" என்ற தனது சுயரூபத்தையும் காட்டத் தொடங்கினார்.

**"மனித உரிமைக் காவலர்கள்" என்று கொழும்பிலிருந்து இதுவரை பாசாங்கு பண்ணிவந்த, "மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்ப்பாணம்)" என்ற அமைப்பு, தனது 08–05–1995 ஆம் திகதிய அறிக்கையில், "புலிகளுக்கு எதிர்ப்பு–சந்திரிகாவுக்கு ஆதரவு" என்ற சுய நிலைப்பாட்டைக் காட்டி "மனித உரிமைக்கு" இராணுவச் சாயத்தைத் தெளித்தது!**

"யுத்தத்தின் மூலம் சமாதானம்" என்று போர்ப்பறை முழக்கத் தொடங்கினார். "அரசியற்தீர்வை இப்போது வெளியிடவேண்டிய சூழல் இல்லை" என்றும் சொன்னார். கூட்டணியின் நீலன் திருச்செல்வம் போன்றோரும் இதற்கு அங்கீகாரம் வழங்கினர்.

"புலிகளிடமிருந்து தமிழ் மக்களை விடுவிப்பதற்கே யுத்தம்—இது தமிழர்களுக்கு எதிரானதல்ல" என்றும் சந்திரிகா சொன்னார்.

"மனித உரிமைக் காவலர்கள்" என்று கொழும்பிலிருந்து இதுவரை பாசாங்கு பண்ணிவந்த, "மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்ப்பாணம்)" என்ற அமைப்பு, தனது 08 — 05 — 1995 ஆம் திகதிய அறிக்கையில், "புலிகளுக்கு எதிர்ப்பு — சந்திரிகாவுக்கு ஆதரவு" என்ற சுய நிலைப்பாட்டைக் காட்டி "மனித உரிமைக்கு" இராணுவச் சாயத்தைத் தெளித்தது!

"மனித முகத்துடன் யுத்தம்" என்ற கோஷம் உரத்த குரலில் பரப்பப்பட்டது.

09 — 07 — 1995 இல் முன்னோக்கிப் பாய்தல் நடவடிக்கைமூலம், "மனித முகத்துடன்கூடிய போர்" சந்திரிகாவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## பல் நூற்றுக்கணக்கான எறிகணைத் தாக்குதல்கள்

பல்நூற்றுக்கணக்கான "ஆட்டிலறி" எறிகணைகள், யாழ். குடாநாட்டின் அரைவாசிப் பகுதியை அதிரவைத்தன. இதுவரை இல்லாதவாறு பெருந்தொகையான தொடர் எறிகணைத் தாக்குதல்கள் மக்களைக் கலவரப்படுத்தி, உயிர் அச்சம் கொள்ளச் செய்தன. பலரின் உயிரைக் காவு கொண்டதோடு, மனித அங்கங்களைச் சிதைத்தன. வாழிடங்களையும் உடைமைகளையும் சேதப்படுத்தின. பாதுகாப்புத் தேடி மக்கள் இடம்பெயரத் தொடங்கினர். அளவெட்டியிலும், மாதகலிலும் சண்டை தொடங்கி நடந்தவேளையில், எங்கோ தொலைவில் இருந்த மானிப்பாய், ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம் போன்ற இடங்களிலும் எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன! எறிகணைகளுக்கு நேரடியான — குறிப்பான — இலக்கு எதுவுமில்லை. அடுத்தடுத்த நாட்களும் இவ்வாறுதான் நிகழ்ந்தன. "போர் தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல" என்ற சந்திரிகாவின் பொன்மொழிகளும் இந்த எறிகணைகளினால் சிதறி உருக்குலைந்து போயின!

## விமானக் குண்டுவீச்சுக்கள்

புலிகளின் விமான எதிர்ப்பு ஏவுகணைகளுக்கு அஞ்சிய "புக்காரா"வும், "சுப்பசொனிக்"கும் கண்காணமுடியாத உயரத்தில்—முகில்களிடையில் மறைந்தபடி குண்டுகளைப் பொழிந்தன. தமது வாழ்விடங்களில் — தெருக்களில் — அடைக்கலந் தேடிய தேவாலயங்கள், கோவில்களில் — இக்குண்டு வீச்சுக்கள் தமிழ் மக்களைக் கொன்றொழித்தன, குறை உயிரில் துடிக்கச் செய்தன. நவாலி "சென் பீற்றர்ஸ்" தேவாலயத்தில் கூடியிருந்த அபலைச் சனங்கள் மீது, "சந்திரிகாவின் புக்காரா" வீசிய எட்டுக் குண்டுகள், கொடூரத்தின் உச்சம் எதுவென்பதை உலகிற்குக் காட்டின. 141 அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதோடு, 180 இற்கு மேற்பட்டோர் படுகாயங்களுக்கும் உள்ளாக்கப்பட்டனர். எங்கும் தசைத் துண்டங்கள், பெருகிய இரத்தம், அரைகுறை உயிருடன் கத்தும் வேதனைக் குரல்கள்......"ஐயோ, என்ர பிள்ளை.......என்ர பிள்ளை......" எனக் கதறும் தாய் தந்தையர், சகோதரங்களைத் தேடும் உடன்பிறப்புக்கள்.......பெற்றோரைப் பறிகொடுத்த பிள்ளைகள்......கட்டடச் சிதைவுகளிலும் மரங்களிலும் சிதறியபடி, காகங்கள் கொத்தித் தின்னும் நிலையில் மனிதத் தசைத் துண்டங்கள்....... "வருந்திச் சுமை சுமக்கிறவர்களே என்னண்டை வாருங்கள்" என்ற தேவனின் ஆலயத்தில் தஞ்சம் தேடிய மக்கள் — புலிகள், தேவனின் புனித ஆலயம் — புலிகளின் பாசறை என்பவைதான், சந்திரிகாவின், "மனிதமுகத்துடன் கூடிய" போர் அகராதியில் எழுதப்பட்டிருக்கும் புதிய விளக்கங்கள் போலும்!



## நாடோடிகளாய் இடம்பெயர்தல்

எறிகணைத் தாக்குதல்கள், விமானக் குண்டுவீச்சுக்கள், பீரங்கித் தாக்குதல்கள் என்பவற்றால் ஏற்பட்ட அழிவுகள் — பீதிச் சூழல் மக்களைக் கலவரப்படுத்தின. தாம் வாழ்ந்த வாழ்விடங்களை — ஊர்களை விட்டு நீங்கி நெடுந்தொலைவிற்கு நகரச் செய்தன. உயிரைக் காப்பாற்றினால் போதும் என்ற நிலையில், கையில் அகப்பட்டதை எடுத்துக்கொண்டு, அப்பாவிப் பொதுமக்கள் அவசரத்துடன் இடம் பெயர்ந்தனர். வாழ்நாள் முழுதும் தேடிய சொத்துக்கள் பலவற்றைக் கைவிட்டு — தவிப்புடன் அவர்கள் வெளியேறினர். முதியவர்களையும், நோயாளிகளையும் அப்புறப்படுத்த எவ்வளவு கஸ்ரப்பட்டார்கள்! இயலாத நிலையில் அழுதுகுழறியபடி, அவர்களை அப்படியே விட்டுஓட நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். பீதியில் கத்தும் குழந்தைகளை அணைத்துத் தேற்றியபடி — சைக்கிள்களிலும் மாட்டு வண்டிகளிலும் "பெட்டி பைகளுடன்" அநாதைகளாக இடம்பெயர்ந்தார்கள். கால்நடையாக.....சாமான்களைக் காவியபடி...... தெருவெல்லாம் "நாடோடிகளைப் போல்" மக்கள் கூட்டம். குழந்தையைத் தவறவிட்ட பெற்றோர், கணவனைப் பிரிந்த மனைவி, கையில் கொண்டுவந்த சிறுதொகைப் பொருட்களையும் பதற்றத்தில் தொலைத்தவர்கள் என..... அவலத்தைச் சுமந்தபடி — மூன்று இலட்சம் வரையான மக்களின் பாரிய இடம்பெயர்வு......சொந்த இல்லிடங்களிலிருந்து போரால் பெயர்க்கப்பட்டவர்கள் — தொலைவிலுள்ள பாடசாலைகள், தேவாலயங்கள், கோவில்களில் ஒதுங்க இடந்தேடிய நிலையில் — நாளாந்த உணவுக்கும் தேவைக்கும் மற்றவர்களின் "இரக்கத்தை" எதிர்பார்க்கும் நிலைக்குத் தள்ளிவிடப்பட்டார்கள். "முன்னோக்கிப் பாய்தலின்" வேகம், இவர்களது வாழ்வின் இருப்பையே பெயர்த்து ஒதுக்கிவிட்டது.

## சூறையாடும் படைவீரர்

குண்டுவீச்சுக்களும், எறிகணைத் தாக்குதல்களும் வீடுகளையும் சொத்துக்களையும் சிதைத்தது போக, ஆக்கிரமித்த பகுதிகளில் —மக்களில்லாத வீடுகளை உடைத்துப் படையினர் கொள்ளையடித்தார்கள். தமிழர்களை "விடுவிக்க" வந்ததாகச் சொல்லப்பட்ட படையினர், தமிழர்களின் "உயிர்களையும் சொத்துக்களையும்தான் அவர்களிடமிருந்து விடுவித்துச்" சென்றுள்ளார்கள்! பல கோடி ரூபா பெறுமதியான பொருட்களைச் சூறையாடியவர்கள்தான், சந்திரிகாவின், "சமாதானத்திற்கான போரின்" படைவீரர்கள்!

## மனித வீரோத முகம்

"மனித முகத்துடன்கூடிய போர்" உண்மையில், மனித விரோதமான மிகப்பெரிய அழிவுகளைத்தான் தமிழ் மக்களுக்குக் கொண்டுவந்தது. 300 பேர் வரை உயிரிழந்ததோடு, ஆயிரம் பேர் வரை படுகாயங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். புனித இடங்களான தேவாலயங்கள், கோவில்கள், பாடசாலைகள் மட்டுமல்ல — உயிர்காக்கும் நிலையங்களான மருத்துவமனைகளும் "சமாதானத்திற்கான போரின்" படைவீரரால் சேதப்படுத்தப்பட்டன. மானிப்பாய் மருத்துவமனை குண்டுவீச்சுக்குள்ளானது. மூளாய் கூட்டுறவு மருத்துவமனை உடைத்துச் சேதப்படுத்தப்பட்டது. 50,000 மாணவர்கள் இடம்பெயர்ந்ததாகக் கல்வி அதிகாரிகள் கூறுகின்றனர். மிகவிரைவில் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருந்த ஏராளமான மாணவரும் இதனுள் அடங்குவர். இப் பயங்கரச் சூழ்நிலையும் அழிவுகளும் இவர்கள் மீது ஏற்படுத்திய உளப்பாதிப்புக்கள், இவர்களின் கல்வியைப் பின்னடைவிற்கு உள்ளாக்கப் போகிறது. அரசு ஊழியர்களான 10 ஆசிரியர்களும், மூன்று கிராமசேவகர்களும் கொல்லப்பட்டுள்ளனர். அரசு நடத்தும் போரில் அதனுடைய தமிழ் ஊழியர்களும் தப்பமுடியாது என்ற நிலை! 09 — 07 — 1995 இல் அரசினால் அறிவிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு, 21ஆம் திகதிதான் நீக்கப்பட்டது. 12 நாட்களாக மக்களின் குடிசார் வாழ்க்கை, சட்டபூர்வமாகவும் முடக்கப்பட்டது. தனித்தனி ஆட்களின் மனித உரிமை பற்றி அவ்வப்போது சில அமைப்புக்களால் "கதைக்கப்படுவது" வழக்கம்! தமிழ் மக்கள் மீதான இந்தக் "கூட்டு மனித உரிமை மீறல்கள்" குறித்து, இவையெல்லாம் என்ன சொல்லப் போகின்றன?

## இரக்கமேயற்ற வரலாறு

1956 ஆனியில், கொழும்பு காலிமுகத் திடலில், தனிச் சிங்களச் சட்டத்திற்கெதிராகத் தமிழர்கள் அமைதிவழியில் சத்தியாக்கிரகம் செய்தபோது, சிங்களக் காடையர்களால் தாக்கப்பட்டனர். காயத்திலிருந்து இரத்தம் வழிய நாடாளுமன்றம் சென்ற தமிழ் உறுப்பினரைப் பார்த்து, பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா, "விழுப்புண்கள்.....!" என்று கேலிசெய்தார்.

1958 இனப்படுகொலையின்போது தமிழர்கள் நாடெங்கும் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கையில், இதே பண்டார நாயக்கா சொன்னார், "அவர்கள் அனுபவிக்கட்டும்......."

1983 இன் மாபெரும் இனப்படுகொலையின்போது, தமிழ் மக்களுக்கு ஓர் அனுதாபச் சொல்கூடக் கூறாது சனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனா தனது "ரூபவாகினி"ப் பேச்சில் கூறினார், "இது சிங்கள மக்களின் இயல்பான எழுச்சி!" —

இப்போது சந்திரிகா கேட்கிறார், "யாழ்நகர் மீது செல்கள் வீழ்கின்றனவா"? என்று. சிங்களப் பேரினவாதத் தலைவர்களிற்கு, தமிழ் மக்களின் துயரங்கள் — அவலங்கள் என்றும் ஒரு பொருட்டே அல்ல! அவர்கள் அவற்றைக் கண்டு கைகொட்டி மகிழ்வார்கள் — மௌனம் சாதிப்பார்கள் — தொடர்ந்தும் தமிழர்களை அழிப்பதற்குத் திட்டங்கள் தீட்டிச் செயற்படுவார்கள், இது தான் வரலாறு.

இவர்களிடமிருந்து இரக்கத்தையோ அனுதாபத்தையோ நாம் எதிர்பார்க்க முடியாது. நாம் வலியவர்களாக மாறிச் சேர்ந்து போராடினால் வாழ்வோம், இல்லையேல் அவர்களால் அழிக்கப்பட்டுவிடுவோம்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யாழ்குடாநாடு..

கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதலில் ஐயம்பிள்ளை தனபாலசிங்கம் (வயது 39) என்பவர் உடல் சிதறிப் பலியாகியுள்ளார். இராணுவம் இவ்வாறான வெறித்தனமான எறிகணைத் தாக்குதல்கள் மூலம் ஏழாலை, மல்லாகம் பகுதிகளை நிர்மூலமாக்க முனைந்து வருகின்றனர். இருந்த போதிலும் மக்களுக்கு இயலுமான பாதுகாப்புக்களை வழங்கியுள்ள விடுதலைப் புலிகள் திட்டமிட்ட எதிர்தாக்குதலால் சிறீலங்காப் படைகளுக்கு கடும் சேதங்களை உண்டு பண்ணி வருகின்றனர்.

சிறீலங்கா பிரதியமைச்சர் இரத்வத்தை ஆளணி எண்ணிக்கையை அதிக அளவில் களத்தில் புகுத்துவதன் மூலம் விடுதலைப் புலிகளை எதிர் கொள்ளலாம் என

தொடர்ச்சி 16 ஆம் பக்கம்

# சிப்பாய்களுடன் சிதறிய...

தொடர்ந்து, "ஏயர் இந்தியா" வெளிநாட்டவரை ஒப்பந்தத்திற்கு அமர்த்தி சேவையைத் தொடர வேண்டுமென இந்திய விமானிகள் சங்கத்தை அச்சுறுத்தி வந்தமை தெரிந்ததே. தற்பொழுது ஏற்பட்டுள்ள சூழ்நிலைகளால் சர்வதேச விமானிகள் சங்கங்களும் கொழும்புக்குத் தமது விமானிகள் விமானங்களை ஓட்டுவதில் சிக்கல்களை எதிர்நோக்கக் கூடுமெனக் கூறுகின்றன.

# 100 கோடி...

உழைக்கின்ற தலைவனொருவனை நீங்கள் பெற்றிருக்கின்றீர்கள்.

"இந்த உலகம் உள்ளவரை தமிழன் யாருக்கும், எப்பொழுதும் அடிமையாக மாட்டான். அப்படியொரு தமிழ்ச் சமுதாயத்தை நாங்கள் இந்த மண்ணில் உருவாக்க வேண்டும்" என்று தலைவர் பிரபாகரன் ஒரு தடவை பேசும் போது சொன்னார். இதன் மூலம் தலைவனின் உறுதியை உணரலாம்.

இதனாற்தான் பிரபாகரனைக் கொல்வதற்கு — இந்தியாவும் மற்றவர்களும் பாடுபடுகிறார்கள்.

நீங்கள் அனைவரும் பெருமைக்குரியவர்கள், ஒரு இனத்தின் விடுதலைக்காகப் போராடும் பேறு ஒருத்தருக்கும் கிட்டாது. அந்தப் பேறு உங்களுக்குக் கிடைத்திருக்கின்றது.

பூநகரி முகாம் தாக்குதலிலே எம்மில் ஐநூறு பேர்வரை வீரச்சாவடைந்தார்கள். அந்தப் போரில் முதல்நாளே அந்த முகாம் எமது கைக்குள் வந்திருக்கும். தேவையான போராளிகள் இருந்திருந்தாற் பிடிக்கப்பட்ட முகாமிலிருந்து ஆயுதங்களை எடுத்து வருவதற்கு ஆட்கள் இருந்திருப்பார்களானாற் பூநகரி முகாம் முற்றாக அழிந்திருக்கும். அடுத்த இரண்டுநாட்கள் போர் நடந்திருக்காது. பல போராளிகள் இறந்திருக்க மாட்டார்கள்.

"ஒப்பறேசன் லீப்போவேட்" ஆரம்பிக்கப்பட்ட போது நீங்கள் எல்லோரும் நினைத்திருப்பீர்கள், தமிழன் தொலைந்தான் என்று. புலிகள் அந்த இராணுவத்தை அடித்துத் துரத்தியிருக்கிறார்கள் என்பதை நீங்கள் புரிந்துகொள்ளுங்கள்.

இந்த மண்ணின் விடுதலையைப் பெறுவது ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும். விடுதலைப் புலிகளுடன் எல்லாத்தரப்பினரான மக்களும் இணைந்தால் மட்டுமே மண்ணை மீட்டிட முடியும்

எமது மண் இறுதிவரை போரிடும். உலகம் முழுதும் திரண்டுவந்து எம்மை எதிர்த்தாலும் நிச்சயமாக நாம் போராடுவோம். அப்படி விடுதலைப் புலிகள் அழிந்தாற் கூட இந்த உலகத்தில் ஒரு வரலாறு இருக்கும். உலகத்திற்கு அது ஒரு செய்தியைச் சொல்லும்.

ஒரு நாட்டின் விடுதலைப் போர் எப்படி நடத்தப்பட வேண்டும் என்ற வரைவிலக்கணம் — தலைவர் பிரபாகரனாற் கொடுக்கப்பட்டுள்ளது. இது ஒரு வரலாற்றுச் சமிக்ஞைதான்.

அண்மையில் இராணுவ நடவடிக்கையில் முன்னேறி வருகின்ற பதினையாயிரம் இராணுவத்தைத் தடுக்க வேண்டும். இவர்களை எதிர்கொள்ள வேண்டுமானால் எத்தனை பேர் வேண்டும் என்பதைக்கற்பனை செய்து பாருங்கள். தலைவர் தன்னுடைய விவேகத்தைப் பயன்படுத்தினார். எதிரியினுடைய பலத்தை — பலவீனத்தைக் கண்டறிந்தார். அதற்குத் தக்கபடி அவரின் திட்டமிடல் இருந்தது. போர் நடந்தது. எதிரி புறமுதுகிட்டான் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆகவே — வரலாற்றுக் கடமை ஒன்று உண்டு. அதை நிறைவேற்ற வேண்டும். நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

# அமெரிக்க — பிரித்தானிய..

பேசியுள்ளார்.

அத்துடன் பிரித்தானிய அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளாக அன்றிப் பிரிவினைவாதிகளாகவே கருதுவதாக அதனுடைய தெற்காசியத் தொடர்பாளர்கள் தெளிவுபடுத்தி வருகி ன்றனர். வரலாற்று விபத்தினால் இலங்கைத் தீவுச் சட்டபூர்வ ஆட்சியாளர்கள் எனக் கருதப்பட்டு வந்த சிறீலங்கா வின் உண்மைநிலை இப்பொழுது உலகுக்குத் தெளிவாகத் தெரிகிறது.

இதனாலேயே தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தையும், தமிழீழ மக்களின் அரசு நோக்கிய அரசான விடுதலைப் புலிகளையும் சர்வதேச அங்கீகாரம் விரைவுபடுவதற்குள் எப்படியாவது அழித்தொழித்து விடவேண்டுமெனச் சந்திரிகா அரசு கங்கணங்கட்டி மூக்குடைபட்டு வருகின்றது.

# விடுதலைப்புலிகளை...

நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

வெளிநாட்டுக் காரியாலயங்கள் இருக்கும் கொழும்புப் பகுதியிலேயே தமிழரின் சடலங்கள் வாவிகளிலும், ஆறுகளிலும் மிதக்கின்றன.

திடீர், திடீரென தமிழர்கள் கைது செய்யப்படுகிறார்கள், சிறைகளில் அடைக்கப்படுகிறார்கள், காணாமற் போகிறார்கள், ஆறுகளிலும், வாவிகளிலும் சடலங்களாக மிதக்கிறார்கள்.

தமிழ்ப்பகுதிகளுக்குப் பொதுவாகவும் குறிப்பாக யாழ். குடாநாட்டுக்கும் பொருண்மியத் தடை இறுக்கப்படுகிறது.

யாழ். குடாநாடு பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ளதாக அண்மைய தாயகச் செய்திகள் தெரிவிக்கின்றன. யாழ். வைத்திய சாலைகளில் மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு, இரத்தம் இல்லை, சத்திர சிகிச்சைகளுக்குத் தேவையான "ஓட்சிசன்" பற்றாக்குறை.

மேற்குறிப்பிட்ட அவல நிலைமை தமிழ் மக்களுக்கு இருக்கும் போது, சந்திரிகா தீர்வு யோசனை என்ற பெயரில் தமிழ் மக்களையும், தமிழர் தாயகப் பூமியையும் சாவு கொள்ளக்கூடிய ஒரு தீர்வை அண்மையில் வெளியிட்டுள்ளார்.

சர்வதேச அரைகுறைத் தீர்வு விரும்பிகளும், பதவிவெறி கொண்ட கூட்டணி உட்பட அனைத்துத் தமிழ்த் துரோகக் குழுக்களும் "சந்திரிகாவின் தீர்வு யோசனைகள், தமிழ் மக்களுக்கு மிகப்பெரும் வரப்பிரசாதம். இப்படி ஒரு திறமான திட்டம் இற்றைவரை யாராலும் முன்வைக்கப்படவில்லை" என்று அறிக்கை மேல் அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இற்றைவரை இனப்பிரச்சினை தொடர்பாக முன்வைக்கப்பட்ட தீர்வுயோசனைகளில் சந்திரிகாவின் தீர்வுத் திட்டம் தான் சிறந்தது என்றால், எப்படி இதனை இந்தியா சிறந்தது என்று பாராட்டும்?

ஏனெனில் இந்திய — இலங்கை ஒப்பந்தம் தான் இலங்கைத் தீவின் இனப்பிரச்சினைக்குச் சிறந்தது. இதனைத்தான் சிறீலங்கா அரசு இனப்பிரச்சினை தொடர்பாக நடைமுறைப்படுத்த வேண்டும். இவ்வொப்பந்தத்துக்கு மேலான எந்தவொரு தீர்வுத்திட்டத்தையும் இந்திய அரசு வரவேற்காது என்றுதானே இந்திய ஆட்சியாளர்கள் வீறாப்புப் பேசி வருகிறார்கள்.

இந்தத் தீர்வுத் திட்டத்துக்கு எதிராகப் பௌத்த — சிங்கள இனவாதம் தனது எதிர்ப்பைக் காவியுடை உடுத்தியவர்கள் மூலம் வெளிப்படுத்தி வருகிறது.

ஆனாற் சந்திரிகாவோ, ஒன்றுக்கும் பயப்படாதீர்கள். பௌத்தமும், சிங்களமும், சிங்கள மக்களும் சிங்கள நாட்டின் மும் மணிகள். இவற்றிக்கு எந்தப் பாதிப்பும் வராது. இந்தத் தீர்வுயோசனைகள் வெளியுலகையும், தமிழ்த் துரோகக் குழுக்களையும் ஏமாற்றத்தான் உருவாக்கப்பட்டது.

இந்த அரைகுறைத் தீர்வுத் திட்டத்தை விடுதலைப் புலிகள் ஏற்க மாட்டார்கள். இதன் மூலம் விடுதலைப் புலிகள் சமாதானத்துக்கு எதிரானவர்கள் என்று வெளிநாடுகளிடம் முறையிடலாம். வெளிநாடுகளின் பணத்தையும், ஆயுதங்களையும், இராணுவ ஆலோசனைகளையும் பெற்று விடுதலைப் புலிகளை அழிப்பதாகப் போக்குக்காட்டித் தமிழ் மக்களை அழித்து முழு இலங்கைத் தீவையும் சிங்கள நாடாக்குவது தான் தனது திட்டம் என்பதை வெளிப்படையாகச் சொல்லாமல் மறைமுகமாகச் சொல்லி வருகிறார். இதுதான் தற்போதைய உண்மை நிலை.

# அதிரடிப்படையின்...

(வயது 23) ஆகிய இருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். வயோதிபர் ஒருவரின் சடலம் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை.

விடுதலைப் புலிப் போராளிகளை நேரிடையாக எதிர்கொள்ளத் துணிவின்றி இவ்வாறு கோழைத்தனமான முறையில் மறைந்திருந்து தமிழ் மக்களை இன அழிப்புச் செய்யும் வேலையில் இக் கொலைப் படை தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளது.

# எமது மக்கள் பணத்தில்...

எழுப்ப முடியும். அரச வைப்பகங்களில் பெருமளவு நிதியை நீங்கள் வைப்பிலிடுவது போல் இந்த வைப்பகத்திலும் பெருமளவு நிதியை வைப்பிலிட்டு ஆதரவு வழங்குங்கள். எமது வைப்பகம் தொடங்கப்பட்டபோது இருந்த மக்களின் பங்களிப்பிலும் பார்க்க தற்பொழுது பங்களிப்பு உயர்ந்துள்ளது. நீங்கள் வைப்பகம் மூலம் பெருமளவு நிதியை வைப்பிலிடும் போது இந்த தேசத்தின் வளர்ப்பில் பங்காளிகளாக இருக்கின்றீர்கள். எமது தேசத்தின் அபிவிருத்திக்கென வழங்கப்பட்ட பணம் சிறீலங்கா அரசால் அபிவிருத்தி என்ற போர்வையில் போரிற்கு வழங்கப்படுகிறது. இந்தப் பணத்தை வைப்பகங்களில் இருந்து கடனாகவும் நிதியாகவும் வெண்தாமரைப் போர்வையில் பெற்று போரிற்கு செலவிடுகின்றனர்." என்றார்.

காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் தனது உரையில் "சர்வதேச ரீதியில் வளர்ந்துள்ள எமது போராட்டத்தை உலகநாடுகளில் உள்ள விடுதலை அமைப்புக்கள் பின்பற்றிவருகின்றன. ஆலோசனைகளைப் பெற்று வருகின்றன. எமது போராட்டம் கரந்தடிப் போராட்டமாக இருந்து படிப்படியாக வளர்ச்சியடைந்துள்ளது. எமது போராட்டம் சிங்கள இராணுவத்திற்கு எதிராகப் பல்வேறு இலக்குகளை வைத்து நடாத்தப்படுகின்றது. எமது போராட்டம் மக்களின் வாழ்வை அமைப்பதற்கான போராட்டம். இராணுவ ரீதியிலான போராட்டம், உலகிலேயே வியக்கத்தக்க அற்புதமான தியாகம், வீரம் செறிந்த போராட்டம். ஒரு நாட்டின் தேவை இயந்திரங்கள், நிதி, அரசியல், காவல்துறை என்பன. பல்வேறு கட்டுமானங்கள் வளர்ந்துள்ளன. இந்த வகையில் தமிழீழ வைப்பகம் அமைந்துள்ளது. எவரிடமும் கையேந்தாமல் எமது மக்களின் உதவியுடன் அவர்களின் பொருண்மிய அபிவிருத்தியை வளர்த்து நிற்பதோடு மக்களின் அபிலாசைகளைத் தீர்த்து வைக்கும் நோக்கில் வைப்பகத்தை திறந்து வைத்துள்ளோம்" என்றார்.

# மட்டக்களப்பில்...

திடீர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. 10 நிமிடங்களே நீடித்த இத் திடீர்த் தாக்குதலிற் 15 க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். ஏனையோர் தப்பி ஓடிவிட்டனர். தாக்குதல் நடந்தவேளை 19 ஆம் கட்டை முகாமிலிருந்து உதவிக்கு விரைந்த இராணுவ அணி மீது விடுதலைப் புலிகளின் இன்னுமொரு அணி தாக்குதல் நடத்தினர். இதன்போது பவள் கவச வாகனம் ஒன்று முற்றாக அழிக்கப்பட்டது. உதவிக்கு வந்த இராணுவத்தினர் விரட்டி அடிக்கப்பட்டனர்.

இத் திடீர்த் தாக்குதலிற் பல நவீன ஆயுதங்களும், 9 இராணுவத்தின ரின் சடலங்களும் புலிகளாற் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் வருமாறு —

ரி 81 எல். எம். ஜி. 1

ஏ.கே எல். எம். ஜி 2

ஏ3 துப்பாக்கி 3

ஏ.கே ரக துப்பாக்கி 8

ஏ.கே மகசீன் 30

ஏ.கே எல்.எம்.ஜி மகசீன் 3

ஏ.3 மகசீன் 1

கைக்குண்டு 1

"இன்ரர் மீடியம்" ரவைகள் 1126

இந்த தாக்குதலின் போது வீரச்சாவைத் தழுவிக் கொண்டவர் லெப்ரினன் குணசீலன் அல்லது சுந்தர் (முருகேசம்பிள்ளை பரமானந்தம், மட்டக்களப்பு). தாயக மண்ணை மீட்டெடுக்கத் தன்னுயிரை ஆகுதியாக்கிய இம் மாவீரனுக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தைச் செலுத்துகின்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## விடுதலைப் புலிகளை ஒடுக்குவதாக போக்குக்காட்டி

# தமிழ் மக்களை அழிப்பதுதான் சந்திரிகாவின் திட்டம்

இலங்கைத் தீவிற் சமாதானத்தை உருவாக்கித் தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும் சகோதரர்களாக வாழவைப்பதே தனது முழு முதற் கடமை என்று 1994இல் தேர்தற் பிரச்சாரம் செய்தவர் சந்திரிகா.

நாட்டில் நிலவும் ஆயுத வன்முறையாலும் ஐ.தே.கட்சியினால் வளர்க்கப்பட்டுவரும் ஆயுதக்குழுக்களாலுமே மனித உரிமை மீறல்கள் பெருமளவில் நடைபெறுவதாக உரத்துக் கூறினார். இந்த ஆயுத வன்முறை அரசியலுக்கே என் அப்பா பலியானார், என் கணவர் உயிர் துறந்தார் என்று தேர்தல் மேடைகள் தோறும் நீலிக்கண்ணீர் வடித்தார். கணவனை இழந்ததால் பொட்டிழந்தேன், பூவிழந்தேன் என்றும், தன்னுடைய இரண்டு பிள்ளைகளும் தகப்பன் இல்லாத பிள்ளைகளாகி விட்டார்கள் என்றும் கூறினார்.

ஐ.தே.கட்சி ஆட்சியில் பூதாகரமாக உருவெடுத்துள்ள ஆயுத வன்முறையால் என்போற் பல ஆயிரக்கணக்கான பெண்கள் கணவன்மாரை இழந்து விட்டார்கள். பல ஆயிரக்கணக்கான பிள்ளைகள் தந்தையரைப் பறிகொடுத்துவிட்டார்கள். எம் நாட்டின் இளம் சந்ததி ஆயுத வன்முறைக்குப் பலியாகிக் கொண்டிருக்கிறது.

**சந்திரிகாவின் நடிப்பை நம்பிய தமிழ்-சிங்கள மக்கள் நாட்டிற் பாயும் இரத்த ஆற்றைத் தடுத்து நிறுத்தி தமக்கு ஒரு விமோசனத்தை ஏற்படுத்தக்கூடிய தனிப் பெரும் தலைவர் சந்திரிகா தான் என்று எண்ணிச் சனாதிபதித் தேர்தலிற் பெரும்பான்மையுடன் வெற்றி பெறச்செய்தனர்.**

இவை அனைத்தையும் தடுத்து நிறுத்த என்கையில் ஆட்சி அதிகாரத்தைத் தாருங்கள் என மேடைகள் தோறும் முழக்கம் போட்டார்.

மக்கள் முன்னிலையிற் தன்னுடைய விதவைக் கோலத்தைக் காட்டிப் பெருமளவிலான அனுதாபத்தைப் பெற்றார். ஆனால் இவருடைய தனிப்பட்ட வாழ்க்கை முறை பலவித சுகபோகங்களையும், ஆடம்பரங்களையும் கொண்டது. இதனை வெளிக்காட்டிய சிங்களச் செய்தியாளர்கள் தாக்கப்பட்டதும் உண்மை.

இவரின் நடிப்பை நம்பிய தமிழ்—சிங்கள மக்கள் நாட்டிற் பாயும் இரத்த ஆற்றைத் தடுத்து நிறுத்தி, தமக்கு ஒரு விமோசனத்தை ஏற்படுத்தக்கூடிய தனிப்பெரும் தலைவர் சந்திரிகா தான் என்று எண்ணிச் சனாதிபதித் தேர்தலிற் பெரும்பான்மையுடன் வெற்றி பெறச்செய்தனர்.

தமிழ் மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய சில அரைகுறைத் தீர்வுவிரும்பிகளும் சந்திரிகா பிரான்சில் படித்த புத்திசாலி, நாட்டில் நிலவும் இனப்பிரச்சினையாலேயே சிறுவயதிற் தன் தகப்பனையும், இளவயதிற் கணவனையும் பறிகொடுத்தவர். இனப்பிரச்சினையின் தாக்கம் எத்தன்மையானது என்பதைப் புரிந்தவர். அதனாற் சிங்கள இனவெறிக்குச் சாவுமணி அடிப்பார் எனத் துள்ளிக்குதித்துச் செவ்விகளும், செய்திகளும் விமர்சனங்களும் வெளியிட்டார்கள்.

ஆனாற் தமிழ் மக்களின் பிரச்சினை, 1615 இல் போர்த்துக்கேயரிடம் இழந்த தமிழீழத்தின் மீதான இறைமையைச் சிங்களவரிடம் இருந்து மீளப்பெறுவதின் மூலமே தீர்க்கப்படும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்கள், சந்திரிகாவின் தேர்தற் பேச்சுக்கள் பற்றியும், தேர்தல் வெற்றி பற்றியும் அலட்டிக் கொள்ளவில்லை.

சந்திரிகா பௌத்த—சிங்கள இனவெறியின் கோரவடிவம் என்பதைச் சந்திரிகாவே விரைவில் வெளிக்கொண்டு வருவார் என்பதை உணர்ந்து கொண்ட தமிழீழத் தேசியத் தலைவர், சந்திரிகா போட்ட தாளத்துக்கு எல்லாம் நீளக்கயிற்றிற் சந்திரிகாவின் இஸ்டத்திற்கு ஓடவிட்டார்.

ஓடிக்கொண்டிருந்த சந்திரிகாவைச் சிங்கள இனவெறிச் சக்திகள் எச்சரித்தன.

"சந்திரிகா! நீ தப்பான கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறீர். முன்பு இருந்த கொழும்புவாழ் தமிழ்த் தலைவர்கள் போற் பிரபாகரனை எண்ணாதே. தமிழ் மக்களின் சுதந்திரம், கௌரவம், பாதுகாப்பு இவற்றை முழுமையாக உறுதிப்படுத்தாத எந்தத் தீர்வையும் பிரபா—கரன் ஏற்றுக்கொள்ள மாட்டார். அவர் ஏற்றுக்கொள்ளவில்லையெனில் முழுத்தமிழினமுமே ஏற்றுக்கொள்ளவில்லை என்பது தான் இன்றைய யதார்த்தம்" என்றனர்.

எனக்கும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் நிலைமை தெரியும். ஆனால் விடுதலைப் புலிகளாற் சின்னாபின்னமாக்கப்பட்டுள்ள சிங்களப் படைகளைப் பலப்படுத்தக் கால அவகாசம் தேவை. அதுக்குத்தான் இந்தப் பேச்சுவார்த்தை நாடகம். இந்தப் பேச்சுவார்த்தை நாடகத்தின் மூலம் இழந்துபோன சர்வதேச சமூகத்தின் ஆதரவைச் சிறீலங்கா அரசு மீளப்பெற்றுக் கொண்ட நிலையில், விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் தாக்குதலைத் தொடுத்து, விடுதலைப் புலிகளை அழிப்பதுடன் தமிழ் மக்களைச் சிங்கள பௌத்த இனவெறி பற்றிய ஒரு பய உணர்வுடன் வாழவைத்தாற் தான் நீண்டகாலப் போக்கில் முழு இலங்கையையும் சிங்கள தேசமாக்க முடியும் என்று சந்திரிகா தன்னை எச்சரித்தவர்களுக்குப் பதில் கூறினார்.

இவ்வாறு பதிலளித்த சந்திரிகா இந்தியா சென்றார். அங்கு நடைபெற்ற இரகசியப் பேச்சுவார்த்தைகள் மூலம் தமிழீழ மக்களுக்கு எதிரான போரை ஆரம்பிப்பதற்குரிய காலம் கனிந்து விட்டதை உணர்ந்தார்.

"சந்திரிகா நீளக்கயிற்றில் ஓடிக்கொண்டிருந்த காலத்தில் இருந்த "கனிவுமொழிப்" பேச்சுக்கள் மறைந்தன. விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்றும், தமிழீழத் தேசியத்தலைவரைக் கொலையாளி என்றும் மனநோயாளி என்றும் செவ்விகளும், அறிக்கைகளும் சூடாக வெளியிட்டார்.

மோதல் தவிர்ப்புக் காலத்தில் நடைமுறையில் இருக்க வேண்டிய விதிமுறைகள் சிங்களப் படைகளால் மீறப்பட்டன.

தென் தமிழீழத்திலும், இதயபூமியான மணலாற்றிலும் நிராயுத பாணிகளான எமது போராளிகள் மறைந்திருந்த சிங்களப் படைகளாற் கொலை செய்யப்பட்டனர். கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர்கள் சிங்களப் கடற்படையாற் தாக்கப்பட்டனர். கொலை செய்யப்பட்டனர்.

சந்திரிகாவினதும், ரத்வத்தயினதும் கவனத்துக்கு இச்சம்பவங்கள் உடனுக்குடன் கொண்டு வரப்பட்டன. இவைகளைத் தடுத்து நிறுத்த எதுவும் உருப்படியாகச் செய்யப்படவில்லை.

பொருண்மியத்தடை நீக்கப்பட்டு விட்டதாக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பிரச்சாரம் பெருமளவிற் செய்யப்பட்டது. யாழ். குடாநாட்டிற்கு அனுப்பப்படும் பொருட்கள் விடுதலைப் புலிகளாற் கொள்ளையிடப்படுவதாக அப்பட்டமான பொய்ப் பிரச்சாரங்கள் செய்யப்பட்டன.

இவற்றுக்கெதிராக விடுதலைப் புலிகளாலும் வெகுசன அமைப்புக்களாலும் விடுக்கப்பட்ட கண்டனங்கள் சந்திரிகா அரசாற் தூக்கி எறியப்பட்டன.

நிலைமையை நன்கு நிதானித்து உணர்ந்து கொண்ட தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் விடுதலைப் புலிகளின் தளபதிகளுடனும், அரசியற் பொறுப்பாளர்களுடனும் கலந்துரையாடி, சிறீலங்கா அரசின் சமாதானம் என்ற பொய் வேடத்தை கலைப்பதற்குரிய முதற் காயாகக் "காலக்கெடு" என்ற காயை முன் நகர்த்தினார்.

சந்திரிகா எதிர்பாராத "காய்" நகர்த்தப்பட்டதால் ஆடிப்போன சந்திரிகா மீண்டும் ஒரு ஏமாற்ற வேலையாக, நிறுத்தி வைத்த பேச்சுவார்த்தை நாடகத்தைத் தொடங்கினார்.

நாடகத்தின் ஆரம்பக்கட்டத்திலேயே விடுதலைப் புலிகளின் உறுதிப்பாட்டின் முன் சந்திரிகாவின் ஆட்டம் அடிபட்டுப் போய்விட்டது.

இதனால் ஈழப்போர் ஏப்பிரல் 19இல் தமிழீழத்தின் தலைந—கரான திருகோணமலையில் ஆரம்பமானது. போரின் ஆரம்பமே தமிழீழ மக்கள் எதிர்பார்ப்பது என்ன என்பதையும் அதனை அடையத்தடையாக உள்ள சக்திகளையும், எதிர்கொள்ள வேண்டிய தாக்கத்தின் தன்மையையும் வெளிக்காட்டி நின்றன.

***அரைகுறைத் தீர்வுத் திட்டத்தை விடுதலைப் புலிகள் ஏற்க மாட்டார்கள். இதன் மூலம் விடுதலைப் புலிகள் சமாதானத்துக்கு எதிரானவர்கள் என்று வெளிநாடுகளிடம் முறையிடலாம். வெளி நாடுகளின் பணத்தையும், ஆயுதங்களையும், இராணுவ ஆலோசனைகளையும் பெற்று விடுதலைப் புலிகளை அழிப்பதாகப் போக்குக்காட்டித் தமிழ் மக்களை அழித்து முழு இலங்கைத் தீவையும் சிங்கள நாடாக்குவதுதான் தனது திட்டம் என்பதை வெளிப்படையாகச் சொல்லாமல் மறைமுகமாகச் சொல்லி வருகிறார்.***

போரின் ஆரம்பத்திலேயே சந்திரிகாதான் சிங்கள மக்களின் தலைவி என்பதையும் சிறீலங்கா நாட்டின் பௌத்த—சிங்கள இனவாதிகளின் பிரதிநிதி என்பதையும் நிரூபித்தார்.

வடதமிழீழத்தின் மீதான பொருண்மியத் தடையை மீண்டும் அமுற்படுத்தினார். (பேச்சுவார்த்தை நாடகத்தின் போது பொருண்மியத் தடை நீக்கப்பட்டதாக சந்திரிகா கூறியபோதிலும் நடைமுறையில் பொருண்மியத்தடை தொடர்ந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.) கடல்வலயத் தடைச்சட்டத்தை மீள அறிவித்தார். தமிழீழத்தின் மீதான முழு ஆக்கிரமிப்புக்குச் சிங்களப் படைகளுக்கு உத்தரவிட்டார்.

தேர்தற் பிரச்சாரக் காலத்திற் சந்திரிகா கூறியதற்கு எதிர்மாறாக மிகக் கொடூரமாகத் தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் சந்திரிகா தலைமையில்

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



# விபத்து என்பதை எவரும் நம்பமாட்டார்



கஹந்தவல



"அன்ரனோவ் 32" ரக விமானம் கடந்த 13.09.95 அன்று சிறீலங்கா மேற்குப் பகுதியான சிலாபம் கடலில் வீழ்ந்தது எவ்வாறு என்பது தொடர்பாக தற்போது ஒரு சர்ச்சை எழுந்துள்ளது. விமானம் காலநிலைப்பாட்டினாலும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட இயந்திரக் கோளாரினாலும் வீழ்ந்தது என அரசு சாதிக்க முனைகின்றது. வீழ்ச்சிக்கு முன்னதாக உரையாடல் பதிவு நாடாவை சான்றாகக் காட்டவும் முனைகின்றது. ஆனால் அரசின் விளக்கத்தை ஏற்றுக் கொள்வதற்கு சிங்களவர் தரப்பிலேயே பலர் தயாராக இல்லை. இதற்கு அவர்கள் "அன்ரனோவ்" விமானத்தின் செயல்பாடு பற்றி தமது அனுபவங்களைக் கொண்டு வாதிட முற்படும் போதும், "ஐலண்ட்" போன்ற செய்தித்தாள்களுக்கு அரசின் பிரச்சாரத்தில் ஏற்பட்டுள்ள ஐயுறவு காரணமாகவும் பல சந்தேகங்கள் காணப்படுகின்றன. இவ் விமான விபத்து குறித்து முன்னால் விமானப்படைத் தளபதி கரி குணதிலகா குறிப்பிடுகையில், "அன்ரனோவ்" விமானம் வீழ்ந்து வெடித்ததற்கு காலநிலை காரணம் என்று அரசு கூறுவதை தாம் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை எனத் தெரிவித்தார்.

இவரின் இக்கருத்தானது அரசுடன் அவருக்குள்ள முரண்பாட்டின் அடிப்படையில் எழுந்துள்ளது என நிரா—

**நவீன புக்காரா விமானம் ஒன்றில் அதுவும் இரட்டை இயந்திரங்கள் கொண்ட விமானம் ஒன்று இயந்திரக் கோளாறினால் அல்லது கருவி ஒன்று பழுதடைந்ததால் வீழ்ந்தது என்பது எவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய விளக்கம் அல்ல. அதுவும் இந்த விமானம் ஓட்டி 7000 மணித்தியாலங்களுக்கு மேல் பறப்பு அனுபவம் கொண்டவர் மட்டுமல்ல "அன்ரனோவ்" விமானத்தில் விசேட பயிற்சியும் கொண்டவர்**



கரித்து விடமுடியாது. ஏனெனில் "அன்ரனோவ்" விமானம் மோசமான காலநிலையிலும் வேறுபட்ட அமுக்கத்திலும் சமாளிக்கும் வகையில் செய்யப்பட்டதாகும். இதற்கான உத்தரவாதம் விமானத்திற்கும் உண்டு. அத்தோடு இலங்கைக்கு மேலாகவோ அல்லது அது பறந்து சென்ற பகுதிக்கு மேலாகவோ ஏற்படக்கூடிய வானிலை நிலைமையை விட மிக மோசமான வானிலைகளில் இவ்விமானம் பாதுகாப்புச் சேவைகளில் ஈடுபட்டுள்ளது. குறிப்பாக ரசியாவும், இந்தியாவும் தமது பரந்த வேறுபாடுள்ள வானிலைப் பகுதிகளிலும் பயன்படுத்தி இருக்கின்றன. ஆகையினால் விமானம் காலநிலை மாற்றத்தினால் விபத்துக்கு உள்ளானது என்பது நிரூபிக்கப்படும் வரை நம்பக்கூடியது அல்ல.

அதேபோன்று நவீன "புக்காரா" விமானம் ஒன்றில் அதுவும் இரட்டை இயந்திரங்கள் கொண்ட விமானம் ஒன்று இயந்திரக் கோளாறினால் அல்லது கருவி ஒன்று பழுதடைந்ததால் வீழ்ந்தது என்பது எவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய விளக்கம் அல்ல. அதுவும் இந்த விமானம் ஓட்டி 7000 மணித்தியாலங்களுக்கு மேல் பறப்பு அனுபவம் கொண்டவர் மட்டுமல்ல "அன்ரனோவ்" விமானத்தில் விசேட பயிற்சியும் கொண்டவர் ஆவார். ஆகையினால் பலமான சந்தேகங்கள் எழுப்பப்படுவது நியாயமானதாக இருக்கும் போது அரசின் கூற்றுக்கள் தொடர்பாக பூரண நம்பிக்கை கொள்ள முடியாது என்பது சந்தேகங்களை மேலும் வலுவடையச் செய்கின்றன. இதனை அரசின் பொய்ப்பிரச்சாரங்களும் உறுதி செய்கின்றன.

எடுத்துக்காட்டாக முதலாது "அவ்ரோ" விமானம் விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட போது அரசு, இயந்திரக் கோளாறு என்றது. இதற்கு அத்தாட்சியாக பலாலி விமானக் கட்டுப்பாட்டு நிலையத்திற்கும் விமானத்துக்கும் இடையே நடைபெற்ற உரையாடல்களை ஆதரமாகக் காட்ட முனைந்தது. இதன் பின்பு இராணுவத் தோல்விகளை மறைப்பதற்காக தொடர்ச்சியாக பொய்ப் பிரச்சாரங்களை அவிழ்த்து விட முற்படுகின்றது. 15.09.95 அன்று கூட மட்டக்களப்பு தாக்குதல் ஒன்றில் 16 படையினர் கொல்லப்பட்டு அதில் 9 இராணுவத்தினர் சடலங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றியபோதும் 4 படையினர் தலத்தில் கொல்லப்பட்டதாகவும், 2 பேர் பின் இறந்ததாகவும் அரசு கூறியது.



பாக்கிய நாதன்

இவ்வாறாக உண்மை நிலைகளை அரசு மறைக்க முயலும் போது சந்தேகங்கள் மேலும் மேலும் தீவிரமாகின்றன. "ஐலண்ட்" செய்தித்தாள் தெரிவித்துள்ளது போன்று, முதன்முறை "அவ்ரோ" விமானம் வீழ்த்தபட்டபோது தொழில்நுட்பக் கோளாறு என்று அரசினால் கூறப்பட்ட காரணத்தை எவரும் ஏற்றுக் கொள்ளவில்லை.

அதாவது இன்றைய நிலையில் விமான வீழ்ச்சிக்கு காரணம் என்னவென்பதை அரசு கூறுவதைக் கொண்டு எவரும் திருப்திப்படமாட்டார்கள் என்பதே யதார்த்தமாக உள்ளது. ஏனெனில் அரசு கூறுவது தான் உண்மையாக இருந்தாலும் அரசு கூறுவதை எவரும் நம்பத் தயாராக இல்லை.

அந்த அளவிற்கு சந்திரிகா அரசு உண்மைக்குப் புறம்பானது எனப் பலரும் நம்புகின்றனர். அது உண்மையும் கூட.

## ஒரு கவிஞனின் கனவு நனவாகின்றது....



பறவையின் நிரையென
வானிடை யெழுந்தன
பகைவர் ஊர்திகளே!

சிறகுகள் துகள்பட
அவைமிசை பறந்தன
தமிழர் கருவிகளே!

கொடும் பொறிக்
குண்டுகள்
வெடித்தெழ வானகம்
கூந்தல் விரித்தாற் போல்,

நெடும் புகை எழுந்தது!
பகைவரின் கொடிகளும்
நெருப்பில் வாடினவே!

திறனுடை
தமிழரின்
பொறிபல
கணைகளை
அள்ளிச்
சிதறினவே!

கடும் புயல் அடித்ததை
நிகர்த்தது களத்திலே
தமிழர் போராட்டம்!



-காசி ஆனந்தன்
-"தமிழன் கனவு" (1968)

## யாழ்குடாநாடு..

அபாயகரமான திட்டத்தை நடைமுறைப்படுத்த முயல்கிறார். இதனால் பெருமளவில் தென்னிலங்கை இளைஞர்கள் வாழ்விழக்கும் நிலைக்கு இரத்வத்தை பொறுப்பேற்கப் போகிறார் என சிங்களப் பெற்றோர்கள் கொழும்பில் கடும் கவலை தெரிவித்துள்ளனர்.

ஆயினும் விடுதலைப் புலிகள் பலம் பொருந்திய தமது இராணுவ வலிமைக்கு மெருகூட்டும் விதத்தில் நுட்பமான தாக்குதல்களுக்கு திட்டங்களைத் தீட்டி குறைந்த இழப்பினை எதிர்நோக்கி எதிரிக்கு பாரிய அழிவினை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை தொடக்கவுள்ளனர்.

முல்லைத் தீவு கடற்பிரதேசம் விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளதினால் சிதறித் தடுமாறும் சிறீலங்கா இராணுவமும், கடற்படையினருடன் அவர்களின் தலைமையகம் தொடர்புகளை இலகுவில் மேற்கொள்ள முடியாதுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் சர்வதேசத்திலும் உள்ள தமிழர்கள் சிறீலங்காவின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளால் என்றும் இல்லாது அளவுக்கு விடுதலைப் புலிகளுக்கான ஆதரவுகளை வழங்கத் தொடங்கியுள்ளமையினால் சிறீலங்காவின் இனஅழிப்பு முயற்சியான இந்த போரின் போக்கில் எந்நேரமும் சர்வதேச தலையீடுகள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளும் அதிகரித்து வருகின்றன.

இதனால் சிறீலங்கா இந்தப் போரில் என்றுமே வெல்ல முடியாத நிலை உள்ளதெனவும் இத்தகைய போரால் தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமை பிரயோகத்தை விரைவுபடுத்தி ஏற்க வேண்டிய நிலை சர்வதேச சமூகத்திற்கு ஏற்படுகிறது எனவும் அவதானிகள் கருதுகின்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 10 ஆம் ஆண்டு நிறைவு விழா

தமிழர் புனர்வாழ்வுக் கழகம், 10 ஆம் ஆண்டை நிறைவு செய்து 11 ஆம் ஆண்டிற்குச் செல்லும் போது இப்பத்தாண்டு காலம் என்ன சேவையைச் செய்தது? எப்படிச் செய்தது? என்ற ஆய்வுகளுடனும் கலை நிகழ்ச்சிகளுடனும் 10.09.95 ஞாயிற்றுக்கிழமை சூரிச் மாநகரில் ஒரு மாபெரும் முத்தமிழ் விழா நடந்தேறியது. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சுவிஸ் கிளைக்கு இந் நிகழ்ச்சி ஒரு மைல் கல்லாக



அமைந்தது. இந்த நிகழ்ச்சியில் தமிழ் மக்களின் முக்கிய பிரதிநிதிகள் பங்குபற்றினர். இந் நிகழ்ச்சிக்கு முன்னர், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் சுவிஸ் நாடு ரீதியாகப் பேச்சு, நாடகப் போட்டிகளை ஒழுங்கு செய்து, அதில் வெற்றி பெற்றவர்களை நிகழ்ச்சியின் போது பேச வைத்திருந்தார்கள். உண்மையில் அச் சிறுவர்களது பேச்சு அங்கு பேசிய பெரியவர்களது பேச்சையே மிஞ்சிவிட்டது. அவர்களுக்கு ஊக்கம் கொடுத்துப் பழக்கிய பெற்றோரை உண்மையாகப் பாராட்ட வேண்டும். அவர்களுக்கு இடம் கொடுத்த தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கும் நன்றி செலுத்த வேண்டும். இந்த நிகழ்ச்சியில் சிறப்பம்சமாக இசைப் போட்டி நடைபெற்றது. இந்த இசைப் போட்டிக்கு நடுவர்களாக இலண்டனில் இருந்து திரு. யாழ்சீலன், திரு. வரதலிங்கம், திரு. சத்தியமூர்த்தி ஆகியோர் வந்திருந்தார்கள். இந் நிகழ்ச்சியில் போட்டியாக ஒவ்வொரு குழுவிற்கும் நான்கு பாடல்கள் கொடுக்கப்பட்டிருந்தது. அதில் ஒன்று தாமாகவே இயற்றி இசை அமைக்கப்பட வேண்டும் என்ற



விதி முறையும் வழங்கப்பட்டிருந்தது. அரை மணித்தியாலத்திற்குள் 4 பாடல்களும் அத்துடன் பாடலில் சுருதி, தாளம், வேகம் என்பனவும் இசையில், இசை அமைப்பும், இசைக் கருவிகள் சேரும் சுருதிகளும் அத்துடன் இசை நிகழ்ச்சியின் போது பாடல் கொடுக்கப்படும் ஒழுங்கு முறைகள் என்பன பாடல் போட்டியில் அவதானிக்கப்பட்டன.

தாமாகவே இயற்றி இசையமைத்த பாடலுக்கான பரிசை சூரிச் தமிழ் கலைஞர் ஒன்றியமும், சிறந்த இசையமைப்புக்கான பரிசை பேண் கலை கலாச்சார



மன்றமும் பெற்றன. இவர்களுடன் பேண் கரோலின் இசைக் குழுவினரும் பங்கு பற்றியிருந்தனர். இதன் மூலம், தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தினர் ஒரு சிறப்பு இசை நிகழ்ச்சியை வழங்கியிருந்தார்கள்.

நாடகப் போட்டியில் முதல் பரிசைப் பெற்ற "ஒற்றுமை" என்ற நாடகம் மேடையேற்றப்பட்டது. இது ஒரு நாட்டின் நிகழ்வாக அமைந்தது. நிகழ்வை நிகழ்வாகக் கொடுக்காமல் ஒரு சில கருத்துக்கள் திணிக்கப்பட்டு இருந்தன. முதலில் இந்த நாடகத்தை அறிமுகப்படுத்தியதும் சிறப்பாக இருந்தது. இதில் நடித்த சிறுவர்கள் சிறப்பாக நடித்தார்கள்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உலக ஒருங்கிணைப்பாளர் கலாநிதி மகேஸ்வரன் அவர்கள் பேசுகையில், "புலம் பெயர்ந்த மக்கள் வெளிநாடுகளில் ஓரளவு தரமான வாழ்க்கை வாழ்கிறார்கள். அவர்கள் தம் தாய் நாட்டில் அல்லலுறும் மக்களுக்கும் உதவி செய்யும் வரலாற்றுக்கடன் உள்ளவர்களாக இருக்கின்றார்கள். சுவிஸ் நாட்டில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஆரோக்கியமான முறையில் இயங்குகின்றது. ஆனாலும் அதன் வேலைத் திட்டத்தைக் கூட்ட வேண்டும்" என்றார்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேசப் பொறுப்பாளர் திரு. லோறன்ஸ் திலகர் அவர்கள் சமகால அரசியல் நிலைப்பாட்டை எடுத்துக் கூறுகையில், "சந்திரிகா அரசு ஒரு புறத்தில் போரை முன்னெடுத்துக் கொண்டு, மறுபுறத்தில் சர்வதேசத்தை ஏமாற்ற சமாதான முயற்சிகளை மேற்கொள்ளுவது போல் நடிக்கிறது. தனது இன அழிப்பு நடவடிக்கைக்கு நியாயம் கற்பிக்கின்றது" என்றும் குறிப்பிட்டு இருந்தார். சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளைப் பிரதிநிதி திரு. நடராசா முரளிதரன் அவர்கள், புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் மக்களாகிய நாங்கள் போராட்டத்துக்கான பங்களிப்பைச் செய்ய வேண்டும். எல்லா வகையிலும் பங்களிப்புச் செய்ய வேண்டும். குறிப்பாக எமது போராட்டத்திற்குச் சர்வதேச அங்கீகாரம் பெற்றுக் கொடுப்பது, அடுத்து நிதி உதவி கொடுப்பது ஆகிய இரண்டும் மிகவும் முக்கியமானவை எனத் தனது பேச்சில் குறிப்பிட்டார்.

அண்மையில் தமிழீழத்திலிருந்து சுவிசுக்கு வந்த அருட்திரு. மங்களராசா அடிகளார் பேசுகையில், "நான் தாயகத்தில் இருக்கும் போது தமிழர் புனர்வாழ்வுக் கழகம் எவ்வாறு உதவி செய்தது என்பதற்கு நான் சாட்சியாக இங்கு நிற்கிறேன். நீங்கள் கொடுக்கும் பணம் முழுவதையும் சிக்கனமாகச் செலவு செய்வதோடு, மக்களுக்கு மிகவும் பயன்தரக்கூடிய திட்டங்களையும் உதவிகளையும் செய்கிறார்கள். ஆதலால் நீங்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்குச் செய்யும் உதவி, உங்கள் தாய்க்கு, தந்தைக்குச் செய்யும் உதவியாக இருக்கும்" என்று குறிப்பிட்டார்.

பிற்பகல் 3 மணிக்குத் தொடங்கிய நிகழ்ச்சி இரவு 10 மணிக்கு நிறைவு பெற்றது. 2000 க்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர். இறுதியாக வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் உட்பட, பலர் பரிசில்களைக் கொடுத்து இதில் பங்கெடுத்த சிறுவர்களையும், கலைஞர்களையும் ஊக்கப்படுத்தினர்.

சிறீலங்கா அரசாங்கம் இராணுவத்தீர்வை முன்னெடுத்து, அதன் மூலம் தமிழீழ தேச மக்களுக்கும் தமிழீழ தேசத்திற்கும் தேசியப் பாதுகாப்பை (National Security)வழங்கும் விடுதலைப் புலிகளைத் தாக்கியழித்து, பின்னர் தனது அரசியல் தீர்வைத் திணிப்பது என்ற ஆபத்தான திட்டத்தைப் படுவேகமாக அமுல் செய்யத் தொடங்கியுள்ளது.

# நிதி உதவி உடன் தேவை

இதன் விளைவாக விடுதலைப்புலிகளின் இராணுவ வலிமைக்கு முகம் கொடுக்க முடியாத சிறீலங்கா பாதுகாப்புப் படைகள், தமிழீழ மக்கள் மேல் வெறித்தனமான இன அழிப்புக்களை மேற்கொண்டு, இதில் பலியாகும் அப்பாவிப் பொது மக்களை விடுதலைப்புலிகள் என உலகிற்கு எண்ணிக்கைமிட முயல்கிறது. இந்தக் கொடிய இனஅழிப்பு நடவடிக்கையிலிருந்து தமிழ் மக்களின் உயிர்களையும் உடைமைகளையும் பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பில் விடுதலைப்புலிகளுடன் உலகில் உள்ள அனைத்து தமிழர்களும் உடன் இணைய வேண்டிய காலத்தேவையினை சிறீலங்காவின் மனிதத்தன்மையற்ற தாக்குதல்கள் உருவாக்கியுள்ளன.

## உடனுதவுமாறு உலகத்தமிழரிடம் விடுதலைப் புலிகள் கோரிக்கை

இந்நேரத்தில் நவீன போர்க்கருவிகளுடன் கூடிய விமானங்கள் கடற்படைக்கப்பல்கள், தாங்கிகள் என்பவற்றையும் பல்லாயிரக்கணக்கான சிங்களப்படைகளையும் ஏககாலத்தில் யுத்தத்தில் ஈடுபடுத்துவதன் மூலம், தமிழீழ பிரதேசங்களைக் கைப்பற்றி விடுதலைப்புலிகளை அழித்து விடலாம் எனும் பகற்கனவை நனவாக்கும் பகீரதப்பிரயத்தன முயற்சியை சிறீலங்கா ஆரம்பித்து தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இந்த நவீன போர்க்கருவிகளுக்கு ஈடுகொடுக்கத் தேவையான சகல வசதிகளையும் விடுதலைப்புலிகள் செய்து முடித்து, தயார் நிலையில் பெரும் சண்டையை எதிர் நோக்கி நிற்கின்றனர். இவ்வேளையில், இயல்பாகவே அதிக அளவான நிதியுதவி, இராணுவத்தேவைகளை நிறைவு செய்து மக்களைப் பாதுகாக்கவும் சிறீலங்காவால் பாதிப்படையக்கூடிய மக்களுக்கு உடன் நிவாரணம், புனர்வாழ்வு, மருத்துவம் என்பன அளிக்கவும் தேவையாவது வழமை. இதனை ஈடுசெய்து தமிழீழ மக்களைப் பாதுகாக்கும் விடுதலைப்புலிகளின் பணியில் இணைய, உலகத்தமிழர்கள் அனைவருக்கும் கண்டிப்பான கடமையுண்டு.

எமது மக்களை அநியாயமான முறையில் நவீன போர்த்தளபாடவசதிகளைக் கொண்டு சிறீலங்கா இனப்படுகொலை செய்தும் வாழ்வழித்தும் வருகையில், அதே இனத்துன்புறுத்தலைக் காரணம் காட்டி அரசியல் தஞ்சம் கோரி வெளிநாடுகளில் வாழும் நாம் பேசாமல் இருக்க முடியாது. நிதி உதவி அளித்தும், எம்மக்களுக்காகக் குரல் கொடுத்தும் வெளிப்படையாக நமது இனப்பற்றை, பாசத்தை வெளிக்காட்ட வேண்டிய கடமையைச் செய்யும்படி, விடுதலைப்புலிகளுடன் உடன் சேர்ந்து புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் அமைப்புக்கள் அனைத்தும் வேண்டுகோள் விடுக்கின்றன.

வெளிநாடுகளில் நீண்டகாலமாக வாழ்ந்து தமது வாழ்வை நிலைப்படுத்திக் கொண்டவர்களையும், அவர்களது தாய்மண் உரிமையுடன் அழைக்கின்றது. தாய்நாட்டுப்பற்றுடன், தமிழ் மொழிப்பற்றுடன், தமிழ்க்கலாச்சாரம் தரும் ஒருமைப்பாட்டுடன் தமிழீழ தேச மக்களின் வேண்டுகோளை ஏற்று, உடன் நிதி உதவிகள் அளிக்குமாறும் மதியாலோசனைகள் வழங்குமாறும் தொழில்நுட்ப நுணுக்கங்களை தெரிவிக்குமாறும் தமிழர் அமைப்புக்களும் அழைக்கின்றன.

இந்நேரத்தில் எமது நாட்டிற்கு, எமது மக்களுக்கு பேராபத்து விளைவிக்க சிறீலங்கா பகற்கனவு காணும் இந்தப் பயங்கர காலகட்டத்தில் அனைத்துத் தமிழரும் ஒன்றாகி, தமிழீழ தேசமக்கள் நாம் என்ற உணர்வுடன் ஒருங்கிணைந்து விடுதலைப்புலிகளின், தேசத்தினதும் மக்களினதும் மீட்புப் பணியில் இணைவோம்.


அத்துடன், எமது மக்களுக்குச் சிறீலங்கா செய்யும் இனத்துன்புறுத்தல் பற்றிய விபரங்களை உங்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள், திருச்சபையினர், சமூகசேவையாளர்கள் போன்றோர்களுக்கு நீங்களாகவே உடனுக்கு உடன் தெரிவிக்கும்படியும் இது தொடர்பாக மொழித்தேவைகள், தொடர்புத்தேவைகள் உள்ளவர்கள் விடுதலைப்புலிகளினது அமைப்புக்களுடன் தொடர்பு கொண்டு ஆலோசனைகளைப் பெற்று செயற்படும்படியும் கேட்கப்படுகின்றனர். அத்துடன், எதிர்பாராத தாக்குதல்களை சிறீலங்கா மேற்கொண்டால் பேரணிகளை நடாத்தியும் கூட்டங்களை நடாத்தியும் அதனை உலகுக்குத் தெரிவிக்க வேண்டிய தேவைகள் ஏற்படலாம். இதற்கு ஏற்ற வகையில் எந்நேரத்திலும் பெருமளவில் திரளக்கூடிய வகையில் உங்கள் திட்டமிடல்களை முன்கூட்டியே ஆயத்தம் செய்யும்படியும் தமிழீழ மக்களையும் தமிழர்களையும் மற்றும் அனைத்து மனிதாபிமான, சமாதான, சமூகசேவை அமைப்புக்களையும் ஆதரவாளர்களையும் தமிழர் அமைப்புக்கள் கேட்டுள்ளன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net








ஜேர்மனியில் நன்கு நடைபெற்ற



மாவீரர் நினைவுப் போட்டி





# ஜேர்மனியில், தமிழ் மாணவர் அமைப்பு நடாத்திய மாவீரர் நினைவுப் போட்டிகள்-95

தமிழீழ விடுதலைப் போரில் தம்மை அர்ப்பணித்த மாவீரர் நினைவு விளையாட்டுப் போட்டிகள், ஜேர்மனி – மொன்சன்கிளாட்பாக் நகரில் 19 – 08 – 95 சனிக்கிழமையன்று பிரமாண்டமான முறையில் நடை பெற்றன. "ஏறுது பார் கொடி, ஏறுது பார் கொடி...." என்ற பாடல் ஒலிக்க, தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்பட்டு, போட்டிகள் ஆரம்பமாயின.

தமிழீழத் தேசியக் கொடி ஏற்றலைத் தொடர்ந்து ஜேர்மன் நாட்டுத் தேசியக் கொடி, ஜேர்மன் – தமிழ் மாணவர் அமைப்பின் கொடி என்பன ஏற்றப்பட்டன.

ஜேர்மன் தமிழ் மாணவர் அமைப்பினால் நடாத்தப்பட்ட இப்போட்டியில், உலகத் தமிழர் கல்விப்பணியகத்தின் தமிழாலயத்தைச் சேர்ந்த 1200 – க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மூன்று கட்டங்களாக நடை பெற்ற மாவீரர் நினைவுப் போட்டியில்

முதலாங் கட்டமாகக் கரப்பந்தாட்டப் போட்டியும், இரண்டாங் கட்டமாக உதைபந்தாட்டப் போட்டியும், மூன்றாங் கட்டமாக மெய்வல்லுனர் போட்டிகளும் இடம் பெற்றன.

மெய்வல்லுனர் போட்டிகளின் சிறப்பு நிகழ்ச்சியாக, "படையணி நகரும், எங்கள் படையணி நகரும்...." என்ற பாடல் ஒலிக்க அணிவகுப்புப் போட்டி இடம் பெற்றது. பார்வையாளர்களை மிகவும் கவர்ந்து கொண்ட அணிவகுப்பு மரியாதையை, தமிழ் மாணவர் அமைப்பினர் ஏற்றுக் கொண்டனர். இதே போன்று கயிறிழுத்தல் போட்டியும் பார்வையாளர்களின் பலத்த வரவேற்பைப் பெற்றுக் கொண்டது.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும், கழகங்களுக்கும் பரிசில்களும், வெற்றிக் கிண்ணங்களும் வழங்கப்பட்டன. முதலாங் கட்டமாக நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்ற கழகங்களுக்கு "மாவீரர் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணங்கள்" பரிசாக வழங்கப்பட்டன. "ஓவர் கேம்" முறையிலான கரப்பந்தாட்டப் போட்டியில், கேர்ண "இளந்தளிர்" விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தைத் தட்டிக்கொள்ள, டோட்முண்ட் "தமிழர் விளையாட்டுக் கழகம் ("ஏ"அணி)," டோட்முண்ட் "தமிழர் விளையாட்டுக் கழகம் ("பி"அணி)" என்பன முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொண்டன.

உதைபந்தாட்டப் போட்டியில் இந்த ஆண்டுக்கான "மாவீரர் வெற்றிக் கிண்ணத்தை" மொன்சன்கிளாட்பாக் "தமிழர் விளையாட்டுக் கழகம்" தனதாக்கிக் கொண்டது. இரண்டாம், மூன்றாம் இடத்தை முறையே எசன் "தமிழர் விளையாட்டுக் கழகம்," பெர்லின் "தமிழர் விளையாட்டுப் கழகம் ("ஏ"அணி)" என்பன பெற்றுக் கொண்டன.

மெய்வல்லுனர் போட்டியில், முதலாவது இடத்தை வூப்பெற்றால் தமிழாலயம் பெற்றுக் கொண்டது. இரண்டாம், மூன்றாம் இடங்களை முறையே சோலிங்கன் தமிழாலயம், பீல்பெல்ட் தமிழாலயம் என்பன பெற்றன. கயிறிழுத்தல் போட்டியில், தமிழ் மாணவர் அமைப்பு முதலாம் இடத்தைத் தட்டிக் கொண்டது. தமிழர் புனர்வாழ்வுக் கழகம், உலகத்தமிழர் இயக்கம் என்பன முறையே இரண்டாம், மூன்றாம் இடத்தைப் பெற்றன. அணிவகுப்புப் போட்டியில் முதலாவது இடத்தை, தமிழ் மாணவர் அமைப்பினர் பெற்றுக் கொண்டனர். நொயிஸ் தமிழாலய மாணவர்கள் இரண்டாம் இடத்தையும், சார்லூயிஸ் தமிழாலய மாணவர்கள் மூன்றாம் இடத்தையும் பெற்றனர். அணிவகுப்பில் கலந்து கொண்ட இயக்கத் தொண்டர்களுக்கு விசேட பரிசில்கள் வழங்கப்பட்டன. 100 பேர் மத்தியஸ்தர்களாகக் கலந்து கொண்ட இம்மாவீரர் நினைவுப் போட்டியில், 3000 மக்கள் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய விடுதலை...

தென்னாசியாவில் 30 இலட்சம் இந்தியர்கள் இருக்கின்றார்கள். எனக்குத் தேவையானதெல்லாம் போராட்டத்துக்கு 3 லட்சம் தொண்டர்களும் 30 லட்சம் டொலர் பணமுமேயாகும்" என்று கூறினார்.

இது போன்று நேதாஜி சுபாஸ் அவர்கள், பல்வேறு இடங்களிலும் இந்திய மக்களைச் சந்தித்து அவர்கள்முன் உரையாற்றியதைத் தொடர்ந்து, கிழக்காசியாவில் வாழ்ந்த இந்திய மக்களில் ஏழை, பணக்காரன், நடுத்தர வர்க்கத்தினர் எனப் பல்வேறு தரப்பட்டவர்களும் பொன்னையும் பொருளையும் வாரிவாரிக் கொடுத்தனர். பலர் தங்கள் சொத்துக்கள் அனைத்தையும் இயக்கத்திடம் ஒப்படைத்துவிட்டு, தாமும் தேசிய இராணுவத்தில் சேர்ந்துள்ளார்கள்.

பொதுக்கூட்டங்களில் நேதாஜி சுபாஸ் அவர்களுக்குப் போடப்பட்ட மாலைகள் இலட்சக்கணக்கான ரூபாய்க்கு ஏலம் போயிற்று. ஒரு தடவை 12 இலட்சம் ரூபாவுக்கு ஒரு மாலை ஏலம் போனது.

சிங்கப்பூரில் ஒரு கூட்டத்தில் சுபாஸ் அவர்கள் தனக்குப் போடப்பட்ட மாலையை ஏலம் விட்டபோது வசதிபடைத்த இளைஞன் ஒருவன் பலரோடு போட்டி போட்டுக் கொண்டு அந்த மாலையின் ஏலத் தொகையை இலட்சக்கணக்கில் உயர்த்திக்கேட்டுக்கொண்டே வந்தான். போட்டி உச்சக்கட்டத்தை அடைந்தது. திடீரென்று அந்த இளைஞன் "என் சொத்துக்கள் முழுவதையும் வீட்டையும் கொடுக்கிறேன்" என ஆவேசமாகக் கத்தினான். தான் எடுக்க முடியாத அளவிற்கு மாலையின் ஏலத்தொகை அதிகரித்துவிடுமோ என்ற ஏக்கத்தினாலேயும் அந்த ஏலத்தைத் தானே எடுத்து விட வேண்டும் என்ற ஆர்வத்தினாலேயும்தான், அவன் அவ்வாறு நடந்து கொண்டான். அது மட்டுமல்ல, செல்வந்த குடும்பத்தில் ஒரே பையனாக இருந்த அந்த இளைஞன் தானும் தேசிய இராணுவத்தில் சேர்ந்து விட்டான்.

இவ்வாறு, எண்ணற்ற குடும்பங்கள் தேசிய விடுதலைப் போராட்ட இயக்கத்தில் கலந்து கொண்ட விபரங்கள் நெஞ்சை உருக்கவல்லவை. மனைவியையும் பெண்களையும் பெண்கள் படையான ஜான்சிராணி படையில் சேர்த்துவிட்டு, தாமும் தேசிய இராணுவத்தில் சேர்ந்து கொண்டவர்கள் பலர். ரங்கூனிலிருந்த ஹபீப் என்ற தனவந்தர் நகைகள், ரொக்கம், வீடு, நிலமென தன்னிடமுள்ள ஒருகோடி ரூபாவுக்கும் மேற்பட்ட சொத்துக்களை நேதாஜியிடம் ஒப்படைத்தார். சுதந்திர இந்திய அரசு பிரகடனப்படுத்தப்பட்ட மண்டபத்தில் ஒரு தடவை வந்து உட்காருவதற்கே ஒருவர் ஒரு இலட்சம் ரூபாவை வழங்கினார்.

நேதாஜியின் எடைக்கு எடை, தங்கத்தைப் போராட்ட நிதியாக வழங்குவதென அறிவித்து சிங்கப்பூரில் இருந்த பெண்கள் எல்லோரும் தாங்கள் அணிந்திருந்த நகைகளைக் கழற்றித்தந்தனர்.

சுதந்திர இந்திய அரசுக்குத் தேசிய வங்கி ஒன்று தேவைப்படுகிறது என்று அறிவிக்கப்பட்டதும், ரங்கூனைச் சேர்ந்த கோடீஸ்வரர் ஒருவர் அந்த வங்கிக்கான முதலீட்டுத் தொகையாக 50 லட்சம் ரூபாவை நேதாஜியிடம் தானே முன்வந்து வழங்கினார்.

இவ்வாறு, கிழக்காசிய இந்திய மக்கள் அளித்த பணத்தைக் கொண்டுதான் சுதந்திர இந்திய அரசு போராட்டத்துக்கு தேவையான ஆயுதங்களையும், வெடிமருந்துக்களையும் வாங்கியது. மேற்கொண்டு தேவையான பணத்துக்காக இந்திய சுதந்திர அரசு, அங்குள்ள இந்திய வியாபாரிகளிடம் வியாபாரிகளைக் கொண்ட ஒரு குழுவின் பரிந்துரைக்கேற்ப வரிகளை விதித்தது.

www.tamilarangam.net




அகன்ற

# 01 - 10 - 1995 ஞாயிறு

## 15.30, 19.00 மணி

# இரு காட்சிகள்



வெண்திரையில்

09.07.1995 அன்று சிறிலங்காப் படையால்
மேற்கொள்ளப்பட்ட "முன்னோக்கிப் பாய்தல்"
என்ற கொடூரமான அழிவு நடவடிக்கையை,
தேசியத் தலைவரின் தலைமையில்

# நெருப்பெரிந்த நிலம்

எதிரியின் விமானத்தை வீழ்த்தி, கப்பல்களை மூழ்கடித்து,
எண்ணிலடங்கா இழப்புடன் இராணுவத்தை புறமுதுகிட்டு
ஓட்வைத்த 'புலிப் பாய்ச்சலின்' நேரடி ஒளிப்பதிவுக் காட்சிகள்.

கலைபண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில்

நிதர்சனம் வழங்கும்

# முகங்கள் ( இயக்குனர்: ஞானரதன்)

(முழு நீள வீடியோப் படம்)

வளர்ந்துவரும் தமிழீழத் திரைப்படத் துறையில் குறிப்பிடத்தக்க ஒரு பதிவு.

பார்த்தவர்கள் அனைவரதும் பாராட்டைப் பெற்ற படம்.

**இடம்:** LE TRIANON,
80, Bd Rochechouart, 75018 Paris.
Metro: Anvers

**காணத் தவறாதீர்கள்! நுழைவுச் சீட்டுக்களுக்கு முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்**

---

சோலைச் செல்வங்கள் சிரிக்க வழி செய்வோம் !
தமிழீழத்தின்
எதிர்கால சிற்பிகளை உருவாக்க உதவுவோம்!!
செஞ்சோலை காந்தரூபன் அறிவுச்சோலை யேர்மனிக்கிளை
நடாத்தும்

# அறிவுச்சோலை செஞ்சோலைக் கலைமாலை

**இடம் :** Aula der Brackweder-Realschule
Kolner Str. 40 - 33647 BIELEFELD
**காலம் :** 30.09.1995 சனிக்கிழமை 17.00 மணி

## மலரும் கலைப்பூக்கள்

தமிழீழம் இசைக்குழுவின் பின்னணி இசையில்
பிஞ்சுக்கலைஞர்களின் தளிர் இசைக்கீதங்கள்

## தளிர் இசைத்தாலாட்டு

கலைபண்பாட்டுக்கழக யேர்மனிக்கிளை
நடனக்கலைஞர்களின் விடுதலை வெளிப்பாடு

## சுதந்திரக்கனல் நடனங்கள்

கலைபண்பாட்டுக்கழக யேர்மனிக்கிளை வழங்கும்
விடுதலை வெப்பத்தை கொப்பளித்து நிற்கும் கலைப்படைப்பு

## விடுதலை வேள்வி

நாட்டிய நாடகம்

*அனைத்து தமிழ் மக்களையும்*
*அன்புடன் அழைக்கின்றோம்*

செஞ்சோலை காந்தரூபன் அறிவுச்சோலை
யேர்மனிக்கிளை

---

நெதர்லாந்தில்

# மாவீரர் நாள்

## கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

நெதர்லாந்தில் ஐப்பசி மாதம் மாவீரர் நாள் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி நடைபெறவுள்ளது. புலம் பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்களை உள்ளடக்கிய குழுக்கள் இச்சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ளுவார்கள். நெதர்லாந்து வாழ் தமிழ் மக்களை இப் போட்டிக்கு வருகை தந்து, கலந்து கொள்ளும் குழுக்களை ஆர்வமூட்டுமாறு அழைக்கிறோம்.

**காலம் :** 14 - 10 - 1995 காலை 9 மணி
**இடம் :** Dorpshuis De Moriaan
Dorpsduinen 4
Wijk aan zee

தொடர்புகளுக்கு :- ☎ 02510 20400 (செல்வன்)
02240 1755 (சந்திரன்)

தமிழீழ விடுதலைப்புலிகள் - நெதர்லாந்துக் கிளை

---

# திலீபன் நினைவுக் கலைமாலை

## நிகழ்ச்சிகள்

- நினைவில் நனைகிறோம் — *அஞ்சலி நடனம்*
- இதயத்தை எரித்தாயோ — *கவிதா நிகழ்வு*
- திலீபகானங்கள் — *இசை நிகழ்ச்சி*
- அஞ்சலி உரை
- இனவெறித் தீயில் தேசம் — *நவாலி தேவாலயம் மீதான தாக்குதல் விபரணம்*
- உயிராயுதம் — *கடற்கரும்புலிகள் பற்றிய விபரணம்*

இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக
அகிம்சா ரீதியாகப் போராடி
தன்னுயிர் ஈந்த மாவீரன்
லெப். கேணல் திலீபனின்
8 வது
நினைவு தினம்



*விடுதலைப்புலிகள் வாழவேண்டுமென்றோ, ஆளவேண்டுமென்றோ ஆசைகொள்ளவில்லை. எமது மக்களின் நிரந்தரமான சுபீட்சமான எதிர்காலம் கிடைக்குமானால் நாம் அனைவரும் மரணிக்கத் தயாராகவுள்ளோம்.* - தியாகி திலீபன்

**காலம் :** 24 - 09 - 1995 ஞாயிற்றுக்கிழமை
மாலை 6.00 மணி
**இடம் :** Grorud Samfunnshuset
Gardsveien 6

(அன்னை பூபதி தமிழ் கலைக்கூடத்திற்கு அருகாமையில்)

ஒழுங்குகள் :- தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - நோர்வே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

U.T.O., 211 Katherine Rd,
London E6 1BU, UK.
Tel: 0181 - 503 4294,
Fax: 0181 - 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-191260 F: 190114

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
T/F: 718-657-9463

L.T.T.E
P.O.Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

T.C.C
Groot Hertoginnelaan
2517 BL Den Haag, Nederland
Tel: 070-346 1963 , F: 384 0683

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
Vissingebacken 11 1TR
16364 Spanga, Sweden

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 580 8224

Printed by Observer Group Newspapers

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்